பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 09 ஞாயிற்றுக்கிழமை (22.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:116

# கேரளத்தில் விமான நிலையத்தை தாக்கப் போவதாக எச்சரிக்கை!

## புலிகளின் அனுதாபிகள் புலனாய்வுப் பிரிவினருக்கு அச்சுறுத்தல்!!

திருவனந்தபுரம், மார்ச் 22

கேரளத்தில் உள்ள பிரதான மூன்று சர்வதேச விமான நிலையங்களில் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று, இந்தியாவின் முதன்மை உளவு நிறுவனமான மத்திய உளவு நிறுவனத்துக்கு (சி.பி.ஐ) நேற்று முன்தினம் தொலைபேசி மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அநாமதேய தொலைபேசி அழைப்பில் எச்சரிக்கப்பட்ட கொச்சி, திருவனந்தபுரம், கோழிக்கோடு ஆகிய விமான நிலையங்களில் மேலதிக - விசேட-பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கேரள மாநில பொலிஸ்மா அதிபர் ஜேக்கப் புன்னூஸ் நேற்றுத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் கேரளத்தில் உள்ள முக்கிய விமான நிலையங்களில் ஒன்றை மிக விரைவில் தாக்குவார்கள் என்று தொலைபேசி மூலம் அநாமதேயமாக சி.பி.ஐ. நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டதாக பொலிஸ்மா அதிபர் புன்னூஸ் கூறினார்.

இலங்கைக்கு ஆயுதங்கள் அனுப்புவதற்கு திருவனந்தபுரம் விமானநிலையத்தைப் பயன்படுத்துவதாக தமிழகக் கட்சி ஒன்று அங்கு ஆர்ப்பாட்டம் செய்ய முனைந்ததும், ஆர்ப்பாட்டம் செய்ய முனைந்தவர்கள் கைது செய்யப்பட்டதும் தெரிந்தவையே.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி எம்.பி மீது குற்றப்புலனாய்வு விசாரணை

கொழும்பு, மார்ச் 22

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் நேற்று விசாரணை செய்யப்பட்டார்.

தமது அலுவலகத்துக்கு விசாரணைக்கு வருமாறு குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவரை அழைத்ததாகவும் அந்த அழைப்பை ஏற்க மறுத்து வீட்டுக்கு வருமாறு தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் தம்மிக்க கங்கானந்த திஸநாயக்க கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அவரிடம் விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## "வணங்கா மண்" நிவாரணக் கப்பல் வந்தால் இலங்கைக் கடற்படையினர் தாக்குவராம்!

கொழும்பு, மார்ச் 22

பிரிட்டனில் இருந்து வன்னிக்கு உணவு, மருந்து மற்றும் நிவாரணப் பொருள்களை ஏற்றிவருவதற்கு புலம்பெயர்ந்த மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "வணங்கா மண்" கப்பல் இலங்கைக் (20 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் தொடர்ந்து புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்

கொழும்பு, மார்ச் 22

முல்லைத்தீவில், புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை தொடர்ந்து இடம்பெறுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார நேற்று மாலை தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பின் மத்திய பகுதி முழுமையாகப் படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. முல்லைத்தீவு- பரந்தன் ஏ35 வீதியில் மேலும் 1.5கி.மீற்றர் பாதையை படையினர் மீட்டுள்ளதுடன் இரணைப்பாலைச் சந்தியையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் 28 விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் ஐவரின் சடலத்தை படையினர் மீட்டுள்ளனர் என்று ஊடகத் தகவல் மத்திய நிலையம் தெரிவித்தது.

இதேவேளை -

நேற்று முன்தினம் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தேவையான நேரத்தில் முகாமில் இருந்து வெளியே செல்வதற்கு அனுமதி தேவை

### வவுனியா நலன்புரி முகாம் மக்கள் எம்.பியிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச்22

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தாம் நினைத்த, தேவையான நேரத்தில் வெளியே சென்று வரவும் வெளியில் இருக்கும் தமது உறவினர்கள் முகாமுக்கு வந்து (20 ஆம் பக்கம் பார்க்க)

## பல்குழல் மற்றும் ஆட்லறி, ஷெல் தாக்குதல்களில் பாதுகாப்பு வலயங்களில் நேற்று 48 பேர் பலி!

### 'போரூட்' பணியாளர் உட்பட 46 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 22

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களான மாத்தளன், அம்பலவன்பொக்கணை, பச்சைப்புல் மோட்டை, வலைஞர்மடம் ஆகிய இடங்களை நோக்கிப் படையினர் நேற்று மேற்கொண்ட ஆட்லறி ஷெல் மற்றும் பல்குழல் ஷெல் தாக்குதல்களில் 48 பேர் கொல்லப்பட்டனர்; போரூட் நிறுவனப்பணியாளர் உட்பட 46 பேர் காயமடைந்தனர் என இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக இணையத்தளங்களில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை, பச்சைப்புல்மோட்டை மற்றும் வலைஞர் மடம் பகுதிகள் மீது நேற்று சனிக்கிழமை படையினர் ஆட்லறி ஷெல், பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்கு தல்களை நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலில் 9 சிறுவர்கள் உட்பட 48 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் போரூட் (20 ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி நிலையங்களில் உள்ள —— கர்ப்பிணிகள், மாணவர்கள் இங்குள்ள தமது உறவினர்களுடன் தங்க அனுமதி கிடைக்கும்?

யாழ்ப்பாணம், மார்ச் 22

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பிணிகளும், கல்வி பயிலும் மாணவர்களும் அவர்களின் (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரம் பாதுகாப்புச் சபைக்கு வந்தால் அமெரிக்கா அதனை ஆராய்வதற்கு ஆதரவு தரும்

### நிரந்தர உறுப்பினர் சூஸான் றைஸ் தகவல்



நியுயோர்க், மார்ச் 22

இலங்கை விவகாரம் பாதுகாப்புச் சபையில் ஆராயப்படவேண்டும் என்ற கோரிக்கையை அமெரிக்கா ஆதரிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் இலங்கையில் நடைபெறும் போரில் சுமார் 150,000 பொதுமக்கள் சிக்குண்டுள்ளது குறித்தும் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்புகளினதும் தாக்குதலுக்கு ஆளாகிவருவது குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்று மேற்படி கவுன்சிலிலுள்ள நிரந்தர அங்கத்தவர்கள் அல்லாத நாடுகளின் பிரதிநிதிகள் பலரும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அதற்கான முன் முயற்சியாக எதிர் வரும் வியாழக்கிழமை (26.03.2009) நடைபெறவுள்ள பாதுகாப்பு கவுன்சிலின் பொதுக்கூட்டத்தில் 'மற்றும் அலுவல்கள்' என்ற நிகழ்ச்சி நிரலின் போது இலங்கை விவகாரத்தை கவனயீர்ப்பு விடயமாகக் கொண்டு வருவதற்கு சில நாடுகளின் பிரதிநிதிகள் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்தவர்களில் ஒன்றான சீனா கருத்து வெளியிட்டிருந்ததால் அது எதிர்பார்த்தது (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் போரில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை விவர ஐ.நா. ஆவணம் வெளியிடப்பட்டது

நியுயோர்க், மார்ச் 22

இலங்கையில் இவ்வருடம் ஜனவரி 20ஆம் திகதியில் இருந்து மார்ச் 7ஆம் திகதி வரையில் 2683 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)




போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர்
தலைமையதிபதி செயலகம்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர் நலனுக்கு ஒரு நாள் சம்பளத்தை வழங்கி உதவக் கோரிக்கை

## அரச, தனியார் துறை பணியாளர்களிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வன்னியில் இருந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எமது உறவுகளின் நலன்களைப் பேண ஒருநாள் சம்பளத்தை வழங்குமாறு அரச, அரச சார்பற்ற வங்கி, தனியார் துறை பணியாளர்களை இந்து அமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது.

நல்லை ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமியின் தலைமை யில் நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

அரச, அரச சார்பற்ற அமைப்புக்களில் பணிபுரியும் ஊழியர்கள் தமது சம்பளத்தில் ஆகக்குறைந்தது ஒருநாள் சம்பளத்தை இந்தப் பணிக்கு வழங்குமாறும்.

இது தொடர்பான பட்டியல் நாளை அலுவலகங்களுக்கு கிடைக்கும் போது உடன் தங்கள் பங்களிப்பை வழங்குமாறும் - ஒன்றியம் கேட்டுள்ளது.

அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் இந்தப் பட்டியல் நாளை அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வந்துள்ள உறவுகளுக்கு உதவவேண்டிய பணி தொடர்ச்சியாக இடம்பெறவேண்டியுள்ளதால் பொது மக்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் ஒன்றியம் கேட்டுள்ளது.

பலாலி வீதியில் ஒன்றியத்தின் அலுவலகம் இந்து சமயப் பேரவையில் இயங்குகிறது. உதவ விரும்புபவர்கள் அங்கு தமது உதவிகளை வழங்க முடியும். அத்துடன் இலங்கை வங்கி 2 ஆம் கிளையில் 8944876 இலக்கக் கணக்கிலும் வைப்பில் இடமுடியும். வைப்பிலிட்டவர்களுக்கு வங்கியில் வைப்பில் இட்டமைக்கான பற்றுச்சீட்டின் பிரதியை ஒன்றிய அலுவலகத்தில் சமர்ப் பித்து உதவிய தொகைக்கான ரசீதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று ஒன்றியத் தின் பொருளாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

# தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் யாழ். மாவட்டம் ஏழு முதலிடங்களைச் சுவீகரித்தது

கொழும்பு, மார்ச் 22

கொழும்பில் நேற்று நடைபெற்ற தேசிய மட்டத் தமிழ்த் தினப்போட்டியில் யாழ். மாவட்டம் ஏழு முதலிடங்களைச் சுவீகரித்தது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி ஆகியன உட்பட ஐந்து நிலையங்களில் தேசிய மட்டப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

தனிநபர் பங்குபற்றும் போட்டிகளே நேற்று இடம்பெற்றன. கூட்டுப்போட்டிகள் இன்று நடைபெறும்.

நேற்றைய போட்டிகளில் முதலாம் இடம் உட்பட ஏனைய இடங்களைப் பெற்றவர்களின் வவரம் வருமாறு:-

முதலாம் இடம்

✱ பாவோதல் - 3 ஆம் பிரிவு - சுந்தரமூர்த்தி தசாங்கன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)-

✱ நடனம் - 5 ஆம் பிரிவு - சிவதாரணி சிவராஜன் (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி)-

✱ ஆக்கத்திறன் வெளிப்பாடு - முதலாம் பிரிவு - நிதுஷ்சா குகநேசன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்)-

✱ இசை - 5 ஆம் பிரிவு - சுரசாகித்தியன் ரஜீவன்(சென்.ஜோன்ஸ் கல்லூரி)-

✱ நடனம் - 2 ஆம் பிரிவு - பாவனா சிவயோகன் (வேம்படி மகளிர் கல்லூரி)-

✱ நடனம்- 4 ஆம் பிரிவு - பிரியவதனி ஜெயபாலன்(வேம்படி மகளிர் கல்லூரி)

✱ இலக்கியத்திறனாய்வு - 5 ஆம் பிரிவு - ஜீவனா புஸ்பராஜா (கரவெட்டி விக்கினேஸ்வர கல்லூரி)-

2 ஆம் , 3 ஆம் இடங்களைப் பெற்றோர்

✱ நடனம் - 3 ஆம் பிரிவு- 3 ஆம் இடம் - யஸ்திகா பாலகிருஸ்ணன்(மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி)-

✱ பேச்சு - 2 ஆம் பிரிவு- 3 ஆம் இடம்- சரண்யா மணிசேகரன்(தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி)-

✱ பேச்சு - 3 ஆம் பிரிவு - 2 ஆம் இடம் - பௌத்திரா சிவஞானம்(மீசாலை வீரசிங்கம் ம.வி.)-

✱ பேச்சு - 5 ஆம் பிரிவு - இரண்டாம் இடம் - லோயனா கணபதிப்பிள்ளை (வேம்படி மகளிர் கல்லூரி)

✱ பாவோதல் - 4 ஆம் பிரிவு - 2 ஆம் இடம் - சுகிர்தர்சினி பரமேஸ்வரன் (வேம்படி மகளிர் கல்லூரி)

இந்தப் போட்டிகளில் வவுனியா மாவட்டம் மூன்று முதலாம் இடங்களையும் மன்னார் மாவட்டம் இரண்டு முதலாம் இடங்களையும் பெற்றுள்ளன. (அ-1-70)

## தபாலதிபர்களுக்கு முகாமைத்துவக் கருத்தரங்கு

வடமாகாண தேசிய சேமிப்பு வங்கி தபால் வங்கிக்கிளை யாழ்.மாவட்ட தபாலதிபர்கள், உபதபாலதிபர்களுக்கு நடத்தும் தேசிய சேமிப்பு வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய முகாமைத்துவக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.பிரதம அஞ்சல் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பிரதித் தபால்மா அதிபர் வி.குமரகுரு தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் வடமாகாண தேசிய சேமிப்பு வங்கியின் தபால் வங்கி முகாமையாளர் ஆர்.இராஜமகேந்திரசிங்கம் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தம் உட்பட சில வங்கி அதிபர்கள் கருத்துரைகளை வழங்குவர். (1-218)

## மாதகலில் இன்று யோகாசன வகுப்பு

சிவலிங்க யோகா கேந்திராவின் ஏற்பாட்டிலான யோகாசன வகுப்பும் கருத்தரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு மாதகல் விநாயகர் அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

கேந்திராவின் செயலாளர் சிவஉமாசுதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ''உளநெருக்கீட்டுக்கான சுய முகாமைத்துவம்'' என்னும் தலைப்பில் கேந்திராவின் தலைவர் நா.நவராஜ் கருத்துரை வழங்குவார். (1)

## சந்திரசேகரப்பிள்ளையார்ஆலயத்தில் இன்று கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 11.15 மணிவரை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு கும்பங்கள் வீதியுலா வருதல் இடம்பெறும். தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும்.(1-7)

(சிறப்பதழ் 17 ஆம் பக்கத்தில்)

### திருத்தி வாசிக்கவும்

உள்ளே 17ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள-

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலரில் -

ஆலய குருவின் ஆசிச் செய்தியில் அவரது பெயர் *சிவஸ்ரீ முத்து ஸ்ரீனிவாச சிவாச்சாரியார்* என்றிருக்க வேண்டும்.

அதற்குப் பதிலாக சிவஸ்ரீ முத்து ஸ்ரீனிவாச பரமாச்சாரியார் என்று அச்சாகியிருப்பது தவறாகும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது மருமகளும், பெறாமகளுமான

**திருமதி அதிசயமலர் கிறிஸ்ரி வலன்ரைன்**

அவர்கள் கல்வி நிர்வாக சேவை தரம் IIIஇல் சித்தியெய்தி பதவியுயர்வு பெற்றுச் செல்வதையிட்டு மனம் மகிழ்வதோடு வரும் காலங்களிலும் மேலும் பல உயர்ச்சிகள் கண்டிட பாராட்டி ஆசிக்கின்றோம்.

வாழ்த்துவோர்:

சூ.[illegible]றிஜிற்றம்மா, சூ. அன்ரனிதாஸ் குடும்பம் (மகான் மாமா), சூ.ஞானரத்தினம் குடும்பம் (பட்டுமாமா), சி.கி.மரியதாஸ் குடும்பம் (மணி அன்ரி), தே.பரமநாயகம் குடும்பம் (தங்கமணி அன்ரி), சூ.இருதயநாதன் குடும்பம் (ராசா மாமா), சூ.யஸ்தஸ் சின்னப்பு குடும்பம் (திரவியம் மாமா), சூ.டேவிட்பேடினன் குடும்பம் (பாக்கியம் மாமா), (சூசைப்பிள்ளை குடும்பம்).

## குருநகரில் இன்று மருத்துவ முகாம்

வண்ணை,மார்ச் 22

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கலாசார மண்டபத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம் மற்றும் யாழ்.ப.நோ.கூ சங்கம் ஆகியவற்றின் அனுசரணைகளுடன் மேற்படி முகாம் நடைபெறும்.

சகல நோய்களுக்குமான பரிசோதனைகளும் மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும். அதேவேளை கண்பாதிக்கப்பட்டவர்களுக்கும் இலவச பரிசோதனைகளும் கண்ணாடிகளும் வழங்கப்படுமெனவும் முன்னணி துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளது (1-160)

## மணமகன்கள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு, 8இல் செவ்வாய், 1979ஆம் ஆண்டு, 7இல் செவ்வாய் உள்ள அரச தொழில் புரியும் மணமகள்களுக்கு உள் நாட்டில் அரச தொழில் பார்க்கும் அல்லது வெளிநாட்டில் PR உள்ள மணமகன்கள் தேவை.

தொடர்பு: தொ.பே. : 0049213162853, 0033130319820, 0771332041.

## பயிற்சி நெறிகள்

COMTEC

எமது நிறுவனத்தில் புதிய பிரிவுக்கான பயிற்சி நெறிகள் 08.04.2009 அன்று ஆரம்பமாகவுள்ளன.

★ சாரதிப் பயிற்சி
★ அலுமினியம் பொருத்துதல் தொழில்நுட்பம்
★ கணனி வன்பொருள், மென்பொருள்வகுப்புகள் (Hardware & MS Office)
★ குளிரூட்டல் சாதனம் (Air Conditioning) திருத்துதல்

கணனி வன்பொருள் (Hardware), மென்பொருள் (MS Office), குளிரூட்டல் சாதனம்(Air Conditioning) திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு கல்வித் தகைமையும் அனுபவமும் உள்ள போதனாசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

✻ 30.03.2009 அன்று10 மணிக்கு மேற்குறிப்பிட்ட போதனாசிரியர்கள் ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு கொம்ரெக் நிறுவன காரியாலயத்துக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அனுப்பும் முகவரி:
இயக்குநர், கொம்ரெக், சுழிபுரம்.
தொலைபேசி இல. :-060 221 4517

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 23.03.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்

ராஜீவ்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

### தவறிவிட்டன

20.03.2009 அன்று இணுவிலுக்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் தங்கராசா கிருஸ்ணராஜ் என்பவரது வாகன வரிப்பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ், இராணுவ அனுமதிப்பத்திரம் என்பனவும் இராசதுரை ஜெயசீலன் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் "றேடியோஸ்பதி", கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தந்துதவவும். (தொ.பே. : 0776268344) சன்மானம் வழங்கப்படும்.

### தவறிவிட்டது

தாவளை, இயற்றாலை, கொடிகாமம் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவானந்தம் சசிகரன் என்பவரது தே.அ.அட்டை (851945059V) 19.03.2009 அன்று பருத்தித்துறைக்கும் மந்திகைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விஷ்ணு பாட்ஸ் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P. :021 222 5907

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வானை தங்கவேலு

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 81/6, 2/1, ஹம்டன் லேன், கொழும்பு- 6ஐ தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானை தங்கவேலு நேற்று (21.03.2009) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

81/6, 2/1, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை,கொழும்பு- 6.

தகவல்:
ஜெயா சண்முகசுந்தரம் (மகள்).

### துரையப்பா சபாரெத்தினம்



புங்குடுதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா சபாரெத்தினம் 20.03.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணிதேவியின் அன்புக் கணவரும் யோகராசா (பிரான்ஸ்), சியாமளா, கிரிதரன், மோகனதாஸ் (போதகர், யாழ். பிலதெல்பியா மிஷனறி சபை) ,ஆகியோரின் பாசமிகு தந்தையும் மதியரசி(பிரான்ஸ்), நித்தியானந்தன், செல்வறோஜினி ஆயோரின் பாசமிகு மாமனும் தாரணி, துவாரகன், அபிந்தா (பிரான்ஸ்), நிதர்சன், நிதர்சனா(அமரர்), நிறைஞ்சனா, நிதுர்ஷனா, யானுஜா, யாக்கீன் ஆகியோரின் பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.03.2009) ஞாயிற்றுக்கிழமை மன்னார், மூர் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*174, கண்டி றோட், கச்சேரியடி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
ச.மோகனதாஸ்
(மகன்-போதகர், யாழ். பிலதெல்பியா மிஷனறி சபை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டநாள் இடைவெளியின் பின்னர் ‘யாழ்.தேவி’ எப்போது எட்டிப் பார்க்கும்?



தண்டவாளப் பாதையில் மிஞ்சிக் கிடக்கும் சமிக்ஞை விளக்கு (கொக்குவில்)

‘‘யாழ்தேவியில் நாங்கள் காதல் செய்தால்
யாழ் மீட்டுமே ரயில் தண்டவாளம்...’’

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்தில், ‘காதல் கடிதம்’ என்ற இசைத்தொகுப்பில் இடம்பெற்ற இந்தப்பாடல் அறிமுகமாகி, பட்டி தொட்டியெங்கும் பட்டையைக் கிளப்பியது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்துக்கும் தென்னிலங்கைக்குமிடையில் ஒரு உறவுப்பாலம் போல யாழ்தேவி புகையிரத சேவை அமைந்திருந்தது.

யாழ்ப்பாணத்தின் புகழைச் சொல்லி நிற்கின்ற வெங்காயம், புகையிலை, கறுத்தக்கொழும்பான் மாம்பழம், கதலி வாழைப்பழம், கருவாடு என்பனவெல்லாம் யாழ்தேவியின் முதுகிலேறிச் சவாரி செய்தபடிதான் கொழும்பு சென்றடைந்தன. அதே போல கொழும்பில் இருந்தும் பல்வேறு விதமான பொருட்களையும் கடிதங்களையும், தினசரிப் பத்திரிகைகளையும் பயணிகளோடு சேர்த்துச் சுமந்து வந்து கொண்டிருந்தது யாழ்தேவி. குடாநாட்டு மக்களின் போக்குவரத்தை மிகவும் எளிதான முறையில் யாழ்தேவி மாற்றியமைத்தது. இதனால் யாழ்.மக்களின் வாழ்வியல் அம்சங்களில் ஒன்றாக மட்டுமன்றி பனைமரத்துக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணத்தைப் பிரதிபலிக்கும் குறியீடாகவும் யாழ்தேவி மாறிப் போனது. இலங்கைப் புகையிரத வரலாற்றில் அதிகூடிய வருவாயை ஈட்டும் ரயில் சேவையாகவும் யாழ்.தேவியே இருந்து வந்தது.

இந்த வசூல் ராணி மீது யார் கண்பட்டதோ தெரியவில்லை. யாழ்தேவியின் பயணத்துக்கு யுத்தம் தடையாய் அமைந்தது. இதனால் பெயரில் மட்டுமே ‘யாழ்’ என்பதைச் சுமந்து கொண்டு கொழும்பிலிருந்து வவுனியா வரைக்கும் தனது பயணத்தை யாழ்தேவி சுருக்கிக் கொள்ள வேண்டியேற்பட்டது. இதனால் வசூல் ராணியின் வருமானமும் குன்றிப் போனது. வன்னி மீதான படை நடவடிக்கையை இலங்கை அரசு ஆரம்பித்த பின்னர் சில பாதுகாப்புக் காரணங்களுக்காக மதவாச்சியோடு இதன் பயணம் மட்டுப்படுத்தப்பட்டது. எனினும் கிளிநொச்சி, பூநகரி, ஆனையிறவு என விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளெல்லாம் வரிசையாக விழத்தொடங்கிய சந்தோஷத்தில் மீளவும் வவுனியா வரை வந்து போக யாழ்தேவி அனுமதிக்கப்பட்டது. எனினும் புலிகளின் ஊடுருவலும், பதில் தாக்குதல்களும் அதிகரிக்கத் தொடங்கியதால் திரும்பவும் யாழ்தேவி மதவாச்சியோடு நிறுத்தப்பட்டது.

இந்த இலட்சணத்தில் யாழ்தேவி ரயில் சேவை கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரைக்கும் ஆரம்பிக்கப்பட இருப்பதாக ஒரு கதை அரசுத் தரப்பிலிருந்து வெளிவந்திருக்கின்றது. இது வெறும் கதையோடு மாத்திரம் நின்றுவிடாது யாழ்தேவி பயணிப்பதற்குரிய தண்டவாளப் பாதையைச் சீரமைப்பதற்கென நாலரைக் கோடி ரூபா தென்னிலங்கை மக்களின் நன்கொடையாக வசூல் பண்ணப்பட்டும் இருக்கின்றது. வடக்குக்கான வசந்தத்தை கொழும்பிலிருந்து குடாநாட்டுக்கு யாழ்தேவிதான் ஏற்றுமதி செய்யப்போகின்றது என்பது போன்ற எண்ண அலைகளும் தென்னிலங்கை மக்களிடம் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கண்மூடித் திறப்பதற்குள் - ஒரு சில மாதங்களுக்குள் - யாழ்தேவி ஓடப்போகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இதற்கான சாத்தியப்பாடுகளையும், திடீரென யாழ்தேவியின் மீள் பயணம் பற்றிய எண்ண உருவாக்கத்தின் பின்னணி பற்றியும் ஆராய்ந்தால் அதனூடாகப் பல உண்மைகள் வெளிக்கிளம்பலாம்.



எலும்புக்கூடாக எஞ்சியுள்ள ரயில் நிலையம் (கொக்குவில்)

யாழ்.தேவி ரயில் பயணிக்கின்ற தண்டவாளத் தடம், ஏ - 9 வீதிக்கு சமாந்தரமாகவும், வீதிக்கு மிகச் சமீபமாகவும் அமைக்கப்பட்டிருந்தது. இரண்டாவது ஈழப்போரின் பின்னர் ரயில் சேவை முற்றாக நிறுத்தப்பட்டது. இதனால் இனிமேல் யாழ்தேவி ஓடவே போவதில்லை என்ற எண்ணத்தினாலும், அப்போது ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிகளாலும் ரயில் தண்டவாளத்தின் கம்பிகளும், ‘சிலிப்பர்’ கட்டைகளும் பொதுமக்களால் மிச்சம் மீதியின்றி வழித்துத் துடைக்கப்பட்டன. இதுதவிர இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகக் குடிசைகளை அமைத்து வாழ்வதற்கும் தண்டவாளப் பாதைகள் தஞ்சமளித்தன. பிறரிடம் குடிசைகளை அமைப்பதற்கான காணியை இரந்து கேட்கும் நிலையைத் தவிர்க்கவும், மழை வெள்ளத்தின் போது தற்காலிகக் குடிசைக்கு பாதிப்பு ஏற்படாதிருக்கவும் தண்டவாளப்பாதையில் தமது குடியிருப்புகளை அமைப்பதற்கு இடம் பெயர்ந்த மக்கள் ஆர்வம் காட்டினர்.

1996ஆம் ஆண்டு குடாநாட்டு மக்கள் மாபெரும் இடப்பெயர்வை மேற்கொண்டு தென்மராட்சிக்கு நகர்ந்தனர். எனினும் குடாநாட்டு மக்கள் அத்தனைபேரும் குடியமர்வதற்கு தென்மராட்சியில் பெரும் நிலப்பற்றாக்குறை ஏற்பட்டது. ஏனெனில் தென்னந்தோப்புகளும், வயல் நிலங்களும், பனங்கூடல்களுமே தென்மராட்சி மண்ணில் அப்போது நிறைந்திருந்தன. இவ்வாறான இயற்கை வனப்பைச் சிரழிக்காது ஏராளமான மக்கள் குடியிருப்புகள் தண்டவாளப் பாதையிலே முளைத்தெழத் தொடங்கின. எனினும் யாழ்.குடாநாடு முற்றுமுழுதாகப் படையினர் வசம் வீழ்ந்த போது இடம்பெயர்ந்தவர்கள் மீளத் திரும்பியதால் அந்தக் குடியிருப்புகள் கைவிடப்பட்டவையாக மாறின. எனினும் குடிசைகளை அமைப்பதற்கு வசதியாக ரயில் தண்டவாளப் பாதை தேவையான அளவுக்கு வெட்டிச் சமப்படுத்தப்பட்டதால், அவற்றை இப்போது பார்ப்பவர்கள் அவை தண்டவாளப் பாதை என்று சத்தியம் செய்தால் கூட நம்பமாட்டார்கள். அந்தளவுக்கு உருமாறிப் போயுள்ளன. அத்தோடு இப்போதும் குடாநாட்டில் உள்ள தண்டவாளப் பாதையில் மல்லாகம், சுன்னாகம் யாழ்.ரயில் நிலையப்பகுதி என்பவற்றிலெல்லாம் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது வசிப்பிடங்களை அமைத்து வாழ்ந்து வருகின்றன. ஒரு சில இடங்களில் கோயில்கள், கடைகள் என்பனவும் தண்டவாளப் பாதையில் அமைக்கப்பட்டுள்ளன.

தண்டவாளப் பாதையில் இப்போதும் குடியிருப்புகளை அமைத்திருப்பவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தின் வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள். எனவே உயர்பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டிருக்கும் இவர்களது சொந்தக் காணிகளில் இவர்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டால் மாத்திரமே தண்டவாளத்திலுள்ள தமது குடியிருப்புகளை இவர்கள் கைவிடச் சாத்தியமுண்டு. அல்லாது விடின் இவர்கள் குடியிருப்பை அகற்றுவதற்குரிய பொருத்தமான காணிகளை அரசாங்கம் வழங்க வேண்டும். ஏனெனில் சொந்தமாகக் காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்குரிய பொருளாதார வசதி, நிவாரணத்தை மட்டுமே நம்பி வாழ்கின்ற இந்த மக்களிடம் அறவே இல்லை.

ஏறக்குறைய இருபது வருடங்களாகப் பயன்பாட்டில் இல்லாததாலும் பொதுமக்கள் தமது பல்வேறு பாவனைகளுக்கு பயன்படுத்தியதாலும் இயற்கையின் சுரண்டலாலும் உருக்குலைந்து போயுள்ள தண்டவாளத் தடம் அமையப் போகின்ற மிக நீண்ட மண்மேட்டினை மீளவும் உருவாக்கினால்தான் தண்டவாளத்தைப் பொருத்த முடியும். அவ்வாறு மண் பாதையை உருவாக்கி அது நன்றாக இறுகும் வரை பதனிட்டு, மூலப்பொருட்களைத் தருவித்து, தண்டவாளத்தை வவுனியாவிலிருந்து - காங்கேசன்துறை வரை புதிதாக நிர்மாணித்து மீண்டும் யாழ்தேவி ஓடவேண்டுமானால் அதற்கு அதிகளவான காலம் எடுக்கும் என்பதே யதார்த்தம். எனினும் அதுபற்றி சரியான விவரங்களை மூடிமறைத்துவிட்டு, யாழ்தேவி மீண்டும் - மிக விரைவில் - யாழ்ப்பாணத்தில் பயணிப்பதனூடாக பாலாறும், தேனாறும் பாயப் போகின்றது என்பது போன்ற பிரசாரங்களே தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படுகின்றன.



தண்டவாளப் பாதையில் முளைத்துள்ள குடியிருப்புகள் (கோண்டாவில்)

பெருமெடுப்பில் செய்யப்படுகின்ற பிரசாரங்களின் ஒரு சிறுதுளி தானும் செயற்பாட்டில் காட்டப்படவில்லை என்பதே வேடிக்கை. இதுவரையும் எந்தவொரு நிபுணர் குழுவும் வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரை விரிந்துகிடக்கின்ற தண்டவாளப் பாதையில் மதிப்பீட்டுப் பணியை மேற்கொண்டதாக அறிவிப்புகளோ, செய்திகளோ வெளிவரவில்லை. மதிப்பீட்டுப் பணிகளுக்கான பிள்ளையார் சுழியே இன்னும் போடப்படாத நிலையில், கைக்கு வர முன்னர் நெய்க்கு விலை பேசுகின்ற பிரசாரங்கள் - தேர்தல் நோக்கத்திற்காக - முன்னெடுக்கப்படுகின்றன.

இத்தகைய - யாழ்தேவியின் மீள் பயணம் பற்றிய - பிரசாரங்கள் ஒருவித அரசியல் இலாபத்தைக் குறிவைத்தே மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகமும் பலரிடம் எழாமலில்லை. ஏனெனில் யாழ்தேவி மீளவும் ஓடவேண்டுமானால் மிகப் பெருமெடுப்பில் வேலைத்திட்டங்கள் முழுமூச்சில் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கெனப் பலருக்கு வேலை வாய்ப்புகளும் ஏற்படும். எனவே யாழ்தேவியை ஓடச்செய்வதற்காக - ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க ஆட்சியாளர்கள் நினைத்திருக்கலாம். அவ்வாறு வேலை வாய்ப்பை வழங்குவதனூடாக ஆளுங்கட்சியின் வாக்கு வங்கியின் பலம் அதிகரிக்கக் கூடும். சிலவேளைகளில் தண்டவாள நிர்மாணப் பணிக்கெனத் தென்னிலங்கையில் இருந்து பெரும்பான்மையான இளைஞர்களை அழைத்து வந்து, பின்னர் அவர்களை வடக்குப் பகுதியில் குடியமர்த்தும் உள்நோக்கமும் அரசுக்கு இருக்கலாம். இந்தக் காலத்தில் மறைத்து வைக்கும் குறிக்கோள் இன்றி எதுவும் நடப்பதில்லையே! எனினும் அவையெல்லாம் யாழ்தேவியின் தண்டவாளப் பாதை உரிய பாதுகாப்புகளுடன் அமைந்தாலே பயனுடையதாக இருக்கும். அது குறித்து காலமும் நேரமும்தான் பதில் சொல்லும், இல்லையா? ★

- பிரமன் -



முன்பள்ளியாய் மாறிப்போன ரயில் நிலையம் (இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலிங்கோ லைஃப்பின் போனஸ் கொடுப்பனவுச் சாதனை அதன் தலைசிறந்த முகாமைத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது

ஆயுள் காப்புறுதித்துறை தலைவர்களாக செலிங்கோ லைஃப் காப்புறுதி நிறுவனம் அண்மையில் மூன்று லட்சத்திற்கும் அதிகமான தனது காப்புறுதித்தாரர்களுக்கு 1.4 பில்லியன்ரூபாவை வருடாந்த போனஸ் கொடுப்பனவாக வழங்கப்போவதாக அறிவித்துள்ளது.

இதன் முக்கியத்துவம் குறித்து நிறுவனத்தின் பிரதித்தலைவர் ஆர்.ரெங்கநாதன் இந்த நேர்காணலில் விளக்கமளிக்கிறார்.

கே: பொருளாதார வீழ்ச்சி காரணமாக பல நிறுவனங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்மைகளை வழங்க சிரமப்படும் இவ்வேளையில் செலிங்கோ ஆயுள்காப்புறுதி நிறுவனம் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு போனஸ் கொடுப்பனவை அறிவித்துள்ளது. இதை எவ்வாறு விளக்குவீர்கள்?

ப: பொருளாதார வீழ்ச்சியால் நாங்கள் பாதிக்கப்படவில்லை என்று உரிமை கோரினால் அது தவறானது. எல்லா நிறுவனங்களும் ஏதோ ஒருவகையில் இந்தப் பாதிப்பை சந்தித்துள்ளன. எவ்வாறாயினும் கஷ்டமான காலப்பகுதிகளில்கூட முதலீடுகள் மீதான எமது விவேகமான முகாமைத்துவம் நன்மைகளை ஈட்டித்தந்துள்ளது. வாடிக்கையாளர்களுடன் நீண்டகால உறவுகளைக் கொண்டுள்ள கம்பனி என்றவகையில் செலிங்கோ லைஃப் நிறுவனம் அதன் சாத்தியமான எல்லா நன்மைகளையும் வாடிக்கையாளருக்கு பகிர்ந்தளிக்க உறுதிபூண்டுள்ளது. 2008ஆம் ஆண்டு அதன் முதலீடுகளுக்கான மீள் வருமானம் 15.48% ஆக உள்ளது. அதேபோல் ஆயுள் நிதியம் மீதான மீள் வருமானம் 12.49%ஆக அதிகரித்துள்ளது. 2008ஆம் ஆண்டை 8.2பில்லியன் ரூபா சந்தா வருமானத்தோடு நாம் தொடர்ந்து ஐந்தாவது தடவையாக சந்தைத் தலைவர்கள் என்ற பெருமையோடு பூர்த்தி செய்துள்ளோம். இவை எல்லாம்தான் இந்த வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த போனஸ் கொடுப்பனவுகளுக்குக் காரணங்களாகும்.

கே: கடந்த ஆண்டில் போனஸ் கொடுப்பனவோடு இவ்வாண்டுக் கொடுப்பனவை எவ்வாறு ஒப்பிடலாம்?

ப: இவ்வாண்டின் போனஸ் கொடுப்பனவானது 2008 டிசெம்பர் 31இல் எமது ஆயுள் நிதியத்தின் அசல் பெறுமதியின் அடிப்படையிலானது. இது 2008ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட போனஸ் தொகையைவிட கிட்டத்தட்ட 17% அதிகமானது. ஆனால் இவ்வாண்டு ஒரு புதிய அம்சமும் உள்ளது. போனஸ் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு சிங்கப்பூர் சென்று வருவதற்கான ஒரு வாய்ப்பு, தொலைக்காட்சிப் பெட்டிகள், டி.வி.டி. உபகரணங்கள், கமறா போன்கள், பிளண்டர்கள் மற்றும் ஆறுதல் பரிசுகள் என்பன உட்பட கவர்ச்சி மிகு பரிசுகளுக்கான வாய்ப்புகளே அந்த புதிய விடயங்கள் ஆகும். போனஸ் சான்றிதழ்களை விநியோகிக்கும் எமது பிரதிநிதிகளைச் சந்திக்கும் போது, தமது தனிப்பட்ட தகவல்களைச் சீர்செய்து கொள்பவர்களுக்கு இந்த வாய்ப்புக்கள் உள்ளன.

கே: இந்த போனஸை பெறும் தகுதி யாருக்குள்ளது? மேலும் அவர்கள் அதை எவ்வாறு பெறுவார்கள்?

ப: 2008 டிசெம்பர் 31இல் செயற்படத்தக்க நிலையில் உள்ள செலிங்கோ லைஃப் காப்புறுதிப் பத்திரங்களைக் கொண்டுள்ள அனைவருக்கும் இந்த வாய்ப்பு உண்டு. இவ்வாண்டு எமது 5000 பேர் கொண்ட விற்பனைப் படையை வீடுவீடாக அனுப்பி தனிப்பட்ட முறையில் இந்த போனஸ் சான்றிதழ்களை வழங்க நாம் திட்டமிட்டுள்ளோம். மார்ச் நடுப்பகுதியில் இது ஆரம்பமாகின்றது. வழமையாக போனஸ் சான்றிதழ்கள் தபால்மூலம்தான் அனுப்பப்படுவதுண்டு.

கே: முதலீட்டு மீள்வருமானம் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள், கம்பனியின் 21 பில்லியன் ரூபா ஆயுள் நிதிய முதலீடு பற்றி விளக்கமுடியுமா?

ப: எமது ஆயுள் நிதியத்தின் முதலீட்டு

**விளம்பர விவரணம்**

வரிசையானது அரசாங்கப் பிணைகள் (42%), அனுமதியளிக்கப்பட்ட த்னியார் வங்கிகள் (17%), அரச வங்கிகள் (15%), காணிகள் (13%), கூட்டாண்மைக் கடன்கள் (7%), ஏனையவை (6%) ஆகும். எமது ஆயுள் நிதியம் தொடர்பான முதலீடுகள் 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்கக் காப்புறுதித் தொழில்துறை சட்டத்தின் விதிமுறைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் இசைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இது இலங்கைக் காப்புறுதிச் சபையால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது.

கே: செலிங்கோ லைஃப் வர்த்தகத் துறையில் பதிவுசெய்துள்ள வளர்ச்சி என்ன?

ப: செலிங்கோ ஆயுள் காப்புறுதியின் மொத்தம் பதியப்பட்ட சந்தா வருமானம் 2008இல் 20.6 % அதிகரித்து 8.25 பில்லியன் ரூபாவாக உள்ளது. இது முன்னைய ஆண்டைவிட 1.41 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதாகும். ஆயுள் காப்புறுதித்துறை பிரிவில் 34 சதவீதத்தை இது கொண்டுள்ளது. கம்பனியின் ஆயுள் நிதியம் இந்தத் துறையில் உள்ளூர் சந்தையில் மிக வேகமாக அதிகரித்துவரும் ஒரு நிதியமாகும். 2008 டிசெம்பர் 31இல் இது 21 பில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது.

கே: செலிங்கோ லைஃப் ஏனைய உறுதியான நிலைக்ள் எவை?

ப: எமது கடன் தீர்வு எல்லை அதாவது அனுமதிக்கப்படக்கூடிய சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புகளுக்கு இடையிலான வித்தியாசம் 2008ஆம் ஆண்டின் சட்ட விதிமுறைகளுக்கு அமைய இருக்கவேண்டிய குறைந்தபட்ச தொகையைவிட ஐந்து மடங்கு அதிகமாக உள்ளது. எல்லா காப்புறுதி நிறுவனங்களும் எல்லா நேரங்களிலும் தமது சட்டரீதியான பொறுப்புகளில் ஐந்து வீதத்துக்குக் குறையாத ஒரு தொகையைக் கடன்தீர்வு எல்லையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பது விதிமுறையாகும். ஐந்து மடங்கு அதிகமாக உள்ள இந்தத் தொகையானது எமது நிதி ஸ்திரப்பாட்டையும் உரிமைகோரல்கள் அனைத்தையும் எந்தநேரத்திலும் ஈடுசெய்யலாம் என்ற ஆற்றலையும் பிரதிபலிக்கிறது. எமது அசல் பெறுமான மதிப்பீட்டுச் சான்றிதழை உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற வெட்சன் யெட் என்ற சுயாதீனமான நிறுவனம் வழங்கியுள்ளது.

கே: காப்புறுதிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு நன்மைகளை அளிக்கும்வகையில் உங்கள் நிறுவனம் அண்மைக் காலத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் எவை?

ப: செலிங்கோ ஆயுள் குடும்ப சவாரி என்ற பெயரில் நாம் ஒரு வியக்கத்தக்க ஊக்குவிப்பை நடத்தினோம். இதன்கீழ் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 20 பேரை ஏற்கனவே நாம் சிங்கப்பூருக்கு சகல செலவுகளுடனும் கூடிய ஆடம்பரக் கப்பல் பயணத்திற்கு அழைத்துச்சென்றுள்ளோம். வெகுவிரைவில் அறுநூறு குடும்பங்களைச் சேர்ந்த 2400 பேரை லெஷர்வேர்ள்ட்டுக்கு ஒருநாள் உல்லாசப்பயணம் அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளோம். இலங்கையில் ஒரு கூட்டாண்மை நிறுவனம் மேற்கொள்ளும் மிகப்பெரிய ஊக்குவிப்புத் திட்டம் இதுவாகும். அத்தோடு உள்ளூர் காப்புறுதித் துறையிலும் இதுவே மிகப்பெரிய ஊக்குவிப்புச் செயற்திட்டமாகும்.

---

## நீர் நிறைந்த விழிகளுடன் ஓராண்டு நினைவாக

அவனியில் மலர்வு 08 . 11 . 1987



அநியாய அழிவு 22 . 03 . 2008

### செல்வி பிருந்தா சுப்பிரமணியம் (ஷாய்)

(கனகரட்ணம் ம.ம.வி. பழைய மாணவியும், G.A.Q.முதலாம் வருட மாணவியும்)

குலவிளக்கே! உன் குதூகலத்தை
குழி தோண்டிப் புதைத்து விட்ட
கோடூரத்தை என் சொல்வேன்
அகல் விளக்கே! உன் ஆரவாரத்தை
அடியோடு அழித்து விட்ட
அநியாயத்தை என் சொல்வேன்
பட்டதாரியாகத் துடித்த உன்னை

பாதியிலே எரித்து விட்ட
பாதகத்தை என் சொல்வேன்
கொடிய இறைவனே இவை
அனைத்தும் உன் செயல்களா?
ஷாயம்மா! ஓராயிரம் ஆண்டுகள்
போனாலும் அழியாது உன் நினைவு.

உடன் பிறவாச் சகோதரன்
N.சுதன்.

காரைநகர்., (83699)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 10 . 1930



உதிர்வு 25 . 03 . 2006

### அமரர் செல்லையா வடிவேலு

திதி: 22.03.2009

எங்கள் இதய அறையில் குடிகொண்டிருக்கும்
எமது பாசமிகு தந்தையே- நீர்
மறைந்து மூன்றாண்டுகள் கடந்து
செல்கின்றது ஐயா- பல
ஆண்டுகள் கடந்து சென்றாலும்

நாம் உம்மை மறவோம் ஐயா!
உங்கள் சிரிப்பையும் பாசமலரையும்
நினைத்து நாமும், எமது தாயும்,
மருமகன்மார்களும், பேரப்பிள்ளைகளும்
இன்றும் கலங்கி நிற்கின்றோம்- ஐயா!

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பொற்கொல்லர் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (சி/557395)

---

## நினைவஞ்சலி



### அமரர் அம்பலவாணர் பரமநாதன்

(குடிசார் பொறியியல் உதவியாளர்- விசேடம்)

அம்பலவாணர் பரமநாதன் எமது சபைக்கும், எமது வட பிராந்தியத்திற்கும் அளப்பரிய சேவைகள் ஆற்றி, ஆற்ற வேண்டிய பொறுப்புக்கள் பலவும் மீதமிருக்க எம்மையும் அவர்தம் குடும்பத்தையும் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைபதம் அடைந்து இன்று 31 நாள்கள் முடிவடைந்த நிலையிலும், அவர்தம் நினைவுகள் எம் மனதில் உறுத்தியவண்ணம் இருக்க அன்னார் எம் சபையினூடாக இந்த நாட்டிற்கும், எம் மக்களுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவைகளை உதிரம் சொரிந்த விழிகளுடன் நினைவூட்டுகின்றோம்.

21.03.1984 தொடக்கம் எமது சபையில் பொறியியல் உதவியாளராகக் கடமையேற்று கொழும்பு மற்றும் வட பிராந்தியத்தில் சுமார் 25 வருடங்கள் தனது பதவிநிலை மூலமும் அவருடைய திறன் மிக்க தொழில் நுட்ப வல்லமை மற்றும் ஆங்கில அறிவு மூலமும் பற்பல படிநிலைகளில் எமது சபையின் உயர்ச்சிக்கும், மக்களின் குடிநீர் விநியோகம் உரிய முறையில் தீர்க்கப்படவும் காரணமாக இருந்தவர்.

அவர் தனது குடிசார் பொறியியல் உதவியாளர் என்னும் பதவிநிலையுடன் மட்டுமல்லாமல் எமது சபையின் பிராந்திய இரசாயன ஆய்வுகூட சேவை மேம்படவும், கணனி அறிவை எமது சபை ஊழியர்களிடையே மேம்படுத்தவும் பெரிதும் அருந்துணையாகியிருந்துள்ளார். அவர் போன்ற சக ஊழியர்கள் கணனியினை நவீன கலையாக எண்ணியிருந்த காலகட்டத்தில் இள வயதினருக்கு ஒத்த வேகத்தில் அதன் அனைத்து பொறிமுறைகளையும் எளிமையாகவும், திறமையாகவும் கையாளும் வல்லமை பெற்றிருந்தார். மேலும் கணனிக்கலையில் புதிய தேடல்களின் மூலம் தன்னையும் மேம்படுத்தி, சக ஊழியர்களின் திறனையும் மேம்படுத்துவதில் அக்கறை கொண்டவர்.

1985ஆம் ஆண்டு ஆழ் நிலத்தடி நீர் மற்றும் குடிநீர் விநியோகம் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகளின்போது எமது சபையின் வட பிராந்திய காரியாலயத்தின் பிரதிநிதியாக அவர் மிக முக்கிய பங்காற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வு எமது மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைகளை மிக நேர்த்தியாகப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அமைந்தமைக்கு அன்னார் முக்கிய காரணமாவார்.

அசாதாரண சூழ்நிலையில் யாழ்.மாவட்டம் இருந்த காலகட்டத்தில் எமது சபை திடகாத்திரமான நிர்வாக நிலையின்றி இருந்த போது எமது சபையின் ஏனைய ஊழியர்களுடன் இணைந்து பல வழிகளில் இதனை மேம்படுத்தி இன்று திறம்பட இயங்கும் ஸ்தாபனங்களில் ஒன்றாக ஆக்க காரணமாக இருந்தவர் என்றால் மிகையாகாது.

இவரின் செயல்திறன் எண்ணிலோ, சொல்லிலோ அடங்காது. அன்னாரின் பொறியியல் வல்லமையும் ஆங்கில அறிவும் சகபாடியாக மற்றவர்களுடன் பழகும் இயல்புகளும் திடகாத்திரமான, வளைந்து கொடுக்கக்கூடிய இயல்புகளும் எமது சபையின் இலக்கை நோக்கிய எமது பயணத்தில் மிகவும் உறுதுணையாக இருந்துள்ளது.

2006ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்குமான நீர் விநியோகம் சம்பந்தமான ஆய்வு அவுஸ்திரேலிய SMEC நிறுவனம் நடத்திய போது எமது சபையின் சார்பாக எம்முடன் பங்காற்றிய ஊழியர்களில் அன்னாரும் முக்கியமானவர். அவரின் முன்னைய ஆய்வுகளில் பங்கேற்ற அலுவலர்கள் யாழ்.மாவட்டம் சம்பந்தப்பட்ட அறிவும் இவ்வாய்வின் போதும் அனைவருக்கும் பெரிதும் உதவியது.

இந்த ஆய்வின் முடிவில் பெறப்பட்ட சிபாரிசுகளின் பிரகாரம், இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்.நகருக்கான 24 மணி நேர நீர் விநியோகம் சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட உயர்நிலை கூட்டங்களின் போது சபையின் சார்பாகப் பங்காற்றி எமது நிலைப் பாடு, குடாநாட்டின் நீர்த்தேவையை எடுத்தியம்பி இரணைமடுவில் இருந்து குடாநாட்டிற்கு நீர் கொண்டு வருதல் தொடர்பாக நீர்ப்பாசனத்திணைக்களத்துடன் உடன்படிக்கை எழுத்துரு பெறுவதற்கு மிகவும் அயராது உழைத்தவர்.

அன்னார் இவ்வாறான பாரிய அறிக்கைகள் தயாரிப்பில் மட்டுமல்லாது அநேகமாக அவர் சேவைக்காலத்தில் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் யாவற்றிலும் அவரது புலமையை எம்மால் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

மிகவும் வல்லமை வாய்ந்த அன்னார் எழுத்துருவில் இருந்த எமது யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களுக் கான பல நீர் விநியோகத்திட்டங்கள் செயலுருப் பெறும் இந்தச் சர்ந்தர்ப்பத்தில் எம்மை தவிக்க விட்டு, மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்றுவிட்டார்.

அவரின் பங்களிப்பின் மூலம் உருவான இத்திட்டங்களைச் செயலுறச் செய்து எமது குடாநாட்டு மக்களுக்கான பாரிய குடிநீர்த் தேவையை திறம்பட பூர்த்தி செய்வதே அன்னாருக்கு அவரின் சக ஊழியர்களாகிய நாம் செய்யும் இறுதிக் கடமையாகும்.

அன்னாரைப் பிரிந்து மீளாத்துயரில் இருக்கும் அவரின் மனைவிக்கும் அவரது இரு புதல்வர்களுக்கும் எமது சபையின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, மட்டுமல்லாமல் அன்னாருக்கு எமது உருக்கமான கண்ணீர்க் காணிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உதவிப் பொது முகாமையாளர் (வ) அலுவலகம்,
பிராந்திய காரியாலயம், தே.நீ.வ.வ.சபை,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(83703)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் கட்சியை மன்மோகன்சிங்கால் தூக்கி நிறுத்த முடியுமா?

இந்தியாவின் பொதுத் தேர்தல்கள் குறித்த பிரசாரம் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகிறது. இதற்குப் பிரதான காரணம், ஆளும் காங்கிரஸ் கட்சி உத்வேகத்துடன் இப்பிரசாரத்தில் இறங்காமையும் பெரும் ஆரவாரத்துடன் களத்தில் குதித்த பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி பல பின்னடைவுகளைச் சந்தித்ததும் ஆகும்.


காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை பல மாநிலங்களில் கூட்டணியே இன்னும் முடிவாகவில்லை. கடந்த காலத் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் மந்தமான வேகமே. உதாரணமாக தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸுக்கு எத்தனை, தி.மு.கவுக்கு எத்தனை தொகுதிகள் என்பவைகூட இன்னும் முடிவாகவில்லை. இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை பாட்டாளி மக்கள் கட்சியா, விஜய்காந்தின் தேசிய முன்னேற்ற திராவிட கழகமா தி.மு.க. கூட்டணியில் இடம்பெறும்

இது தவிர பா.ம.க.வை விட்டுவிட்டு விஜய்காந்தை அரவணைக்க காங்கிரஸ் விரும்புவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதுதான் பா.ம.கவின் வாக்குவங்கியில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் சரிவு. மாறாக தே.மு.தி.க. தொடர்ந்து செல்வாக்கை சீராக அதிகரித்து வருகிறது. பா.ம.கவின் செல்வாக்கு சரிய பிரதான காரணம், அக்கட்சி அடிக்கடி அணிமாறி எப்படியாவது ஆளும் அணியில் போய் உட்கார்ந்து விடுவதுதான். ராமதாஸ் தனது கட்சியில் வாரிசு அரசியலுக்குத் தரும் முக்கியத்துவமும் கட்சித் தொண்டர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. கட்சியைக் கணிசமான அளவு வளர்த்து ஸ்திரமான நிலைக்கு கொண்டுவந்தபின்பே வாரிசை அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும்.

கருணாநிதி, ஜெயலலிதா, விஜய்காந்த் என பல முனைகளில் பா.ம.க. சவால்களை எதிர்கொண்ட நிலையில்

இருப்பவர் எனப்படும் ராமதாஸ் இந்தத் தடவை இந்தச் சாதனையைச் செய்ய முடியாது. அவர் தி.மு.க அணியில் தொடர்ந்தாலும் அந்த அணி மத்தியில் ஆட்சியை தக்கவைக்க முடியாது. ஒரு வேளை அவர் கடைசி நேரத்தில் அணிமாறி அ.தி.மு.கவுடன் ஒட்டிக் கொண்டாலும் அ.தி.மு.க அணி பி.ஜே.பியுடன் உறவின்றி இருப்பதால் மத்தியில் ஆளும் கூட்டணியின் பங்காளியாக இருக்க முடியாது. பி.ஜே.பி தவிர்ந்த மூன்றாவது அணி ஆட்சிக்கு வந்தால் மட்டும் வெல்லும் அணியில் இருப்பவர் என்ற பெயரை ராமதாஸ் தக்கவைத்துக் கொள்ளலாம். இந்தளவுக்கு ராமதாஸின் திட்டங்களைக் கூட குழப்பியடிக்கும் வகையில் அம்மா வின் உத்தி அமைந்தது உண்மையிலேயே வியப்புத்தான்.

காங்கிரஸ் கட்சியின் நிலை இன்னும் பரிதாபகரமானது. தி.மு.கவுடன் அணிசேர்வதால்



நடிகர் சிரஞ்சீவி வேறு களத்தில் குதித்திருக்கிறார்.

அஸாமில்

பி.ஜே.பியும்

வாரிசை

களமிறக்கியது

என்பது கூட முடிவு செய்யப்படவில்லை. விஜய்காந்த் அ.தி.மு.க கூட்டணியில்



சேரமாட்டார் என்பது தெளிவு. அவரது குடும்பம் பரம்பரையாக காங்கிரஸ் கட்சியில் இருந்தது என்பது தி.மு.க. அணியில் சேர அவரை ஈர்க்கும் முக்கிய விடயமாகும். தி.மு.கவுடன் கடுமையாக முட்டி மோதியபோதும் அதைத் தணித்து விஜய்காந்தை தி.மு.க. அணிக்கு இழுத்து வருவதற்கு தமிழக காங்கிரஸ் கட்சியினர் சமீப காலமாகத் தலைகீழாக நின்று முயன்று வந்தனர்.

விஜய்காந்த் இடம்பெற்றால் தி.மு.க அணியில் பா.ம.கவுக்கு இடம் கிடையாது என்று கருதப்படுகிறது. தி.மு.கவைப் பொறுத்தவரை பா.ம.க, தே.மு.தி.க. இரண்டுமே ஒவ்வாத கட்சிகள்தான். தேர்தல் வெற்றிக்காக வேறு வழியின்றி இவைகளில் ஒன்றை இணைக்க கலைஞர் தயாராகவுள்ளார்.

காங்கிரஸோ பா.ம.கவை விடவும் விஜய்காந்த் கட்சியையே விரும்புகிறது. இதற்குக் காரணம், தற்போது பா.ம.க வசமுள்ள ஆறு தொகுதிகளில் பல தொகுதிகள் முன்னர் காங்கிரஸ் கோட்டையாக இருந்தவை. பா.ம.க. வெளியேறினால் இந்த இடங்களை மீளக் கைப்பற்ற முடியும். குறிப்பாக யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி பாரம்பரியமாக காங்கிரஸின் வலுவான செல்வாக்குள்ள தொகுதியாகும். இதனைச் சென்றமுறை கூட்டணிக் கட்சி என்ற தோரணையில் பா.ம.க. தட்டிப்பறித்துக் கொண்டது. பாண்டிச்சேரி மீண்டும் தமக்கே தரப்பட வேண்டுமென காங்கிரஸில் குரல்கள் எழுந்துள்ளன. இவ்வாறே சிதம்பரம், அரக்கோணம் போன்ற தொகுதிகளும் பழைய காங்கிரஸ் தொகுதிகளே.

பொருத்தமற்றதாகிப் போயுள்ளது. பல ஆண்டு காலமாக வெல்லும் அணியில் இருந்துவந்த ராமதாஸின் சாமர்த்தியத்துக்கு சோதனை இப்போதுதான் வந்துள்ளது. இந்த முறை அவர் வெல்லும் அணியில் இல்லை என்பது நூற்றுக்கு நூறு உறுதியாகியுள்ளது. அதாவது, அவர் தி.மு.க. அணியில் தொடர்ந்தாலும் அந்த அணி தமிழகத்தில் சமாளித்து வென்றாலும் டெல்லியில் ஆட்சியில் அமருவது சாத்தியமில்லை.

ராமதாஸின் அடுத்த தெரிவு அ.தி.மு.க. அணியாகும். ஆனால் அ.தி.மு.க. அணி டெல்லி ஆட்சியைப் பிடிக்குமா என்பது கேள்விக்குறிதான். பி.ஜே.பியுடன் அ.தி.மு.க அணி சேர்ந்திருந்தால் அதில் பா.ம.கவும் சேர்ந்து தமிழகத்திலும் முழு இந்தியாவிலும் வெற்றிபெறும் அணியாக பரிணமித்திருக்கலாம். அந்தத் திட்டத்தை ஜெயலலிதா தவிடுபொடியாக்கிவிட்டார். பி.ஜே.பியை உதறும் ஜெயலலிதாவின் முடிவு ஒரு முட்டாள்தனமான முடிவாயினும், ஒருவகையில் புரட்சிகரமான முடிவாகும். புரட்சித் தலைவி செய்த இந்த அரசியல் சாகசத்தால் இன்று முழு இந்திய அரசியலும் குழப்பத்தின் உச்சத்துக்கே சென்றுள்ளது. அதாவது, காங்கிரஸ் அணி தோற்று பி.ஜே.பி. ஆட்சிக்கு வருவதற்கு இருந்த ஓர் அருமையான வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி ஜெயலலிதாவைப் பின்தொடர்ந்து பல மாநிலங்களில் பல நேசக் கட்சிகள் பி.ஜே.பியை உதறிவிடவும் இது கால்கோளாக அமைந்தது.

சுருங்கச் சொன்னால் இந்திய தேசிய அரசியலில் இன்றைக்கு பி.ஜே.பி. முகாமில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கு பிள்ளையார் சுழியிட்டவர் ஜெயலலிதாவே எனலாம். காங்கிரஸும் தோற்கப் போகிறது; ஆனாலும் பி.ஜே.பியாலும் உறுதியான பெரும்பான்மையுடன் வெல்ல முடியாது. அப்படியானால் அரசியல் ஸ்திரமின்மையே வரப்போகிறது. இதற்கான அடித்தளம் ஜெயலலிதாவே. இதனால் ஜெயலலிதாவுக்கும் கூட நஷ்டமே உள்ளது. ஆனாலும் பி.ஜே.பி, பா.ம.க போன்ற கட்சிகளை மிரட்ட அவர் இவ்வாறு நடந்துகொண்டுள்ளார். அதாவது, அதிகம் துள்ளினால் நீங்கள் இல்லாமலே நான் தேசிய தேர்தல் ஒன்றைக் கூட சந்திப்பேன் என்பதே அம்மா சொல்லும் செய்தி.

வழக்கமாக வெல்லும் அணியில்

தமிழகத்தில் காங்கிரஸுக்குப் பின்னடைவு வருமென ஜெயலலிதா சொன்னதில் உண்மை இருக்கவே செய்கிறது. தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர் கெட்டிருப்பது தி.மு.க.வுக்கு எதிரான அலையை ஏற்படுத்தியுள்ளது. ரவுடிகளின் கொட்டத்தை அடக்க தி.மு.க முன்வராதது பெரும் பிரச்சினையாகும். அ.தி.மு.க ஆட்சியில் சட்ட ஒழுங்கு நிலை மேம்பட்டு இருந்தது என மக்கள் கருதுகின்றனர். சினிமாவில் ரவுடிகளின் அட்டகாசத்தை ஹீரோ எம்.ஜி.ஆர் அடக்குவதுபோல நிஜ ஆட்சியில் அம்மா இதை ஓரளவு செயற்படுத்தினார் என்ற அபிப்பிராயம் மக்களிடம் உள்ளது. குறிப்பாக சினிமாக் கவர்ச்சியுள்ள பாமரமக்கள் எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க என ஈர்க்கப்பட ஓரளவு படித்த நடுத்தர வர்க்க மக்கள் வழக்கமாக தி.மு.க ஆதரவாளர்களாகவே இருந்துள்ளனர். ஆனால், சட்டம், ஒழுங்கு சீர்கெடுவதை இந்த நடுத்தர வர்க்க மக்கள் விரும்பவில்லை என்பது கவனிக்கப்படவேண்டும். இவர்கள் இதன் காரணமாக தி.மு.கவை விட்டு விலகிவிடும் ஆபத்தும் உள்ளது. கலைஞர் கருணாநிதி இதை நாடிபிடித்துப் பார்ப்பதில் முன்பும் பல தடவைகள் தவறி உள்ளார். எனினும், அவற்றிலிருந்து அவர் பாடம் கற்பதாகவும் தெரியவில்லை. விளைவு இந்தத் தேர்தலில் தோல்வியாகவும் இருக்கலாம். தி.மு.கவுடன் சேர்வதால் காங்கிரஸும் மக்களால் தண்டிக்கப்படலாம். மறுதலையாக காங்கிரஸின் ஈழத் தமிழர் விரோதபோக்கால் தி.மு.க வேட்பாளர்களுக்குப் பின்னடைவு ஏற்படுவதும் உறுதியாகியுள்ளது. மொத்தத்தில் சென்ற முறை போல் 40 தொகுதிகளையும் அள்ளிச் செல்ல தி.மு.க அணியால் இயலாது போகும்

**- எஸ்.சுரேந்திரஜித்-**

என்பதே உண்மை.

இதேவேளை காங்கிரஸ் கட்சிக்கு மேலும் பல மாநிலங்களில் எதிரணியின் வலிமையால் தோல்வி கிட்டும் என கணிப்புகள் கூறுகின்றன. இவற்றில் முதன்மையானவை ஆந்திரா, அஸாம், ஹரியானா ஆகியவையாகும். ஆந்திராவில் எதிரும்புதிருமாக இருந்த சந்திரபாபு நாயுடுவும் தெலுங்கானா சந்திரசேகர் ராவும் இத்தேர்தலில் ஓரணியில் நிற்பது காங்கிரஸ் கட்சிக்கு கிலியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த தேர்தலில் தெலுங்கானாவை தனிமாநிலமாக்குவோம் என ஆசை காட்டிய காங்கிரஸ் அதை நிறைவேற்றவில்லை. இதுவும் தெலுங்கானா பிராந்தியத்தில் எதிரொலிக்கும். போதாக்குறைக்கு

அஸம் பரிஷத்தும் கூட்டணி வைத்துக் கொண்டதால் காங்கிரஸ் கட்சிக்கு ஆபத்து உள்ளது. அஸாம் என்பது காங்கிரஸ் கட்சியின் கோட்டை. எனினும், கூட்டணியின் பலத்தால் பி.ஜே.பி வெல்ல வாய்ப்புள்ளது. கடந்த பல மாநில மற்றும் மத்திய தேர்தல்களில் காங்கிரஸே அஸாமில் தொடர்ச்சியாக வென்று வந்துள்ளது. இம்முறை இந்த நிலை மாறக்கூடும்.

இவ்வாறே கூட்டணியின் அசுர பலத்தால் பி.ஜே.பி அணி வெல்லப்போகும் மற்றைய மாநிலம் வடக்கேயுள்ள ஹரியானாவாகும். முன்னாள் உதவிப் பிரதமர் தேவிலாலின் மகன் சௌதாலா இங்கு காங்கிரஸுக்குச் சிம்ம சொர்ப்பனமாக விளங்குகிறார். இவருடன் பி.ஜே.பி கைகோத்திருப்பதால் கணிசமான வெற்றி பி.ஜே.பிக்கு கிடைக்குமெனக் கருதப்படுகிறது.

இவைதவிர டெல்லி, ஹிமாசல பிரதேசம், கர்நாடகா, குஜராத் ஆகியவற்றிலும் காங்கிரஸுக்கு வெற்றி கிடையாது என்றே தெரிகிறது. ஆக இப்போதுள்ள காங்கிரஸின் 150 எம்.பிக்கள் எண்ணிக்கை 120 ஆக வீழ்ச்சிடையலாம் என கருத இடமுண்டு. இப்படியான நிலையிலும் மத்தியில் சமீப கருத்துக் கணிப்புகளில் காங்கிரஸுக்கு நிம்மதி தரும் ஒரே விடயம் பிரதமர் மன்மோகனின் செல்வாக்கு உயர்ந்திருப்பதுதான். அத்வானியா, மன்மோகனா எனக் நடத்திய கணிப்புகளில் பிரதமர் மன்மோகன் சிங் முன்னணியிலேயே உள்ளார். அவர் முழுநேர அரசியல்வாதியாக அன்றி ஓர் அதிகாரியாகவே இருப்பது அவருக்கு 'பிளஸ் பொயின்ட்' எனக் கருதப்படுகிறது.

இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தில் துணிச்சலுடன் செயலாற்றியது போன்ற விடயங்களால் மேல்தர மற்றும் நடுத்தர வர்க்க இந்தியர்கள் பிரதமர் மீது மதிப்பு வைத்துள்ளனர். ஊழல் செய்யாதவர் என்ற பெயரையும் அவர் பெற்றுள்ளார். இதனால் நகர்ப்புற இந்தியர்கள் கணிசமான அளவு அவரை ஆதரிக்கக் கூடும். பாரம்பரியமாக நகர்ப்புற இந்தியர்கள் பி.ஜே.பி ஆதரவாளர்களாகவே இருந்துள்ளனர். அதை மாற்ற பிரதமரின் 'கிளீன் இமேஜ்' காங்கிரஸுக்கு உதவலாம். ஆரம்பத்தில் தனது கட்சியின் பிரதமர் வேட்பாளர் யாரென அறிவிக்காத காங்கிரஸ் தற்போது முந்திக்கொண்டு மன்மோகனே பிரதமர் என அறிவித்துள்ளது. சரத் பவார் கூட மன்மோகன் தான் பிரதமர் எனக் கூறியுள்ளார். பல தடைகளையும் தாண்டி ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள பிரதமரின் சாதனைகள் காங்கிரஸுக்குக் கைகொடுக்குமா என்பது பொறுத்திருந்து பார்க்கப்படவேண்டிய விடயம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அம்பலவாணர் பரமநாதன்

(பொறியியல் உதவியாளர்- விசேடம்,
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை- யாழ்ப்பாணம்)



அன்புள்ள அப்பா!
உங்கள் முகம் காணாமல்
முப்பத்தொரு நாள் ஆனதப்பா!
மீண்டு வருவீர்கள் என்றிருந்தோமே அப்பா!
மீளாத் துயில் கொண்டு போனீர்களே அப்பா!
ஏகாதசித்திதியில் ஏகன் திருப்பாதம் காண
அவசரமாய் போனீர்களோ அப்பா!
பள்ளிக்கு நாம் போகும் போது தினசரியையும்
பார்த்துக் கொண்டு எங்களையும் பார்த்து
விடைகொடுப்பீர்களே அப்பா!
ஏங்குகின்றோம் நாம் மீண்டும்
ஒருமுறை அந்நாள் வாராதோ என்று!
கண்டிப்பும் கருணையும் கலந்திருந்த உங்கள்
முகம் இனி எப்பிறப்பில் காண்போம் அப்பா!
என்றும் உங்கள் நினைவுடன்:
பிள்ளைகள்- ப.நர்த்தனன், ப.மகிதனன்.



மண்ணில்:03.03.1958 மனங்களில்: 20.02.2009

கடந்த 20.02.2009 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இல.3, விடமைப்பு வீதி,
சண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(83690)

திருமதி வ.பரமநாதன்.


---

# கனக்கும் இதயச் சுமைகளின்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## ஸ்ரீமான் வல்லிபுரம் சின்னத்தம்பி மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற அதிபர்)



அன்னைமடியில்
08 . 08 . 1933

ஆண்டவனடியில்
20 . 02 . 2009

இன்னும் பல்லாண்டு தரணியிலே
எமைப் பாதுகாத்திருப்பீர்.....
இனிய வழி காட்டிடுவீர் என்றுமே
நாம் நினைத்திருக்க.....
விடையெதுவும் பகராமல்
விநாடிதனில் எமையெல்லாம்
பரிதவிக்க விட்டு காததூரம் சென்ற
எங்கள் அப்பாவே- ஒளிவிளக்கே!
எம் விழிகள் குளமாகக் கனக்கும்
இதயங்களுடன்- சுமக்கும் துன்பச்
சுவடுகளை எம் அஞ்சலியாய்
உம் பாதச் சமர்ப்பணமாய்
உம் உதிரங்கள் நாம்....
கண்ணீரில் உமைத் தழுவும் நாம்....
அப்பாவுக்காக.....

20.02.2009 அன்று அமரத்துவம் அடைந்த எமது குல ஒளிவிளக்கின் 31ஆம் நாள் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

கதிரவேற்பிள்ளை வீதி,
[illegible]த்துறை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமங்கலி

சிறுகதை



தி.ஞானசேகரன் என்ற தமது சொந்தப் பெயரிலேயே 1960 துகளின் முற்பகுதியில் இலங்கைத் தமிழ்ப் புனைகதைத்துறையில் தடம் பதித்த இவர், நீண்டகாலமாக மலையகத்தில் அரச மருத்துவராகப் பணிபுரிந் தவர். யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானசேகரன் பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலைப் பட்ட தாரியுமாவார்.

இவரது முதலாவது சிறுகதை ''பிழைப்பு'' 1964 ஆம் ஆண்டில் 'கலைச் செல்வி' சஞ்சிகையில் வெளிவந்தது. அக்கால கட்டத்தில் ஈழத்தில் வெளி வந்த பத்திரிகைகள், சஞ்சிகைகளில் மட்டுமன்றி, தமிழகத்திலிருந்து வெளி யான பிரபல சஞ்சிகையான கலைமகளிலும் இவரது சிறுகதைகள் வெளியாகி யுள்ளன. இலங்கை சாகித்திய மண்டலம் நடத்திய சிறுகதைப் போட்டி உட்படப் பல சிறுகதைப் போட்டிகளில் இவரது சிறுகதைகள் பரிசுகளை ஈட்டியுள்ளன.

இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி ''கால தரிசனம்'' 1973 ஆம் ஆண்டில் வெளிவந்தது. ''அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்'' மற்றொரு சிறுகதைத் தொகுதியாகும்.

புதிய சுவடுகள் (1977), குருதிமலை (1979), லயத்துச் சிறைகள் (1994), கவ்வாத்து - குறுநாவல் (1996) என்பவை இவரது நாவல்களாகும்.

இவற்றில் புதிய சுவடுகள், குருதிமலை நாவல்கள் அரசின் சாகித்திய விருது பெற்றவை. குருதிமலை நாவல் தமிழ் நாட்டில் பட்டப்படிப்புக்கான பாட நூலாக அங்கீகாரம் பெற்றுள்ளமை விசேடமான அம்சமாகும்.

தற்போதும் 'ஞானம்' என்ற கலை இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டு வருவதன் மூலம் இலக்கியப் பணி ஆற்றிவரும் ஞானசேகரனின் ''சுமங்கலி'' சிறுகதை இவ்வார இலக்கியப் பொழிலை அலங்கரிக்கிறது.

உள்ளத்தை வேதனைப்படுத்தும் அந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்ளப் பொன்னம்மாவின் மென்மையான இதயத் திற்குக் கஷ்டமாக இருந்தது.

வேகவைக்கும் ஈயக்குழம்பு காதிற் கூடாகத் தசைகளை அறுத்துச் சென்று இதயத்திற் தேங்கிக் குமிழி பரப்பிக்கொண் டிருப்பதைப் போன்ற வேதனை.

வாழ்நாளில் அனுபவித்திராத துன்பம் அவளை வாட்டச் சிறிது நேரம் எதையுமே சிந்திக்கும் சக்தியை இழந்துவிட்டாள்; விழிகளை மேவிப் பெருகிய கண்ணீர் குழி விழுந்திருந்த அவளது கன்னத்தின் சுருக் கங்களை நிரப்பி வழிந்துகொண்டிருந்தது.

நெற்றியிலே பட்டையாகத் தீட்டி யிருந்த திருநீற்றைக் கரைத்துக் கசிந் திருந்த வியர்வைத் துளிகளைத் தன் சேலைத் தலைப்பினால் ஒற்றிய பொழுது குங்குமம் அழிந்துவிடக் கூடாதேயென்ற கவனமும் அவள் நினைவில் வந்தது.

''பொன்னம்மா! சாத்திரியாருக்கு ஒருத் தினை தேத் தண்ணி ஊத்திக் கொண்டு வா.

அடுப்புக்கு முன்னால் வெகுநேரம் வரை தன்னை மறந்திருந்த பொன் னம்மா, புருஷனின் குரல்கேட்டுத் திடுக்குற்று அவசர அவசரமாகப் பன்னாடையை அடுப்பிற்குள் செருகினாள்.

சாத்திரியார் கூறிய செய்தி அவளின் மனச்சுவர்களை அரித்துப் புண்படுத்திக் கொண்டிருந்தது.

''அவளது கணவன் சதாசிவம் இன்னும் ஒரு மாதத்திற்குள் இறந்துவிடுவாராம்.'

எவ்வளவு இரக்கமற்றதனமாக அந்தச் செய்தியைச் சாத்திரியார் கூறினார். அவர் கூறிய வார்த்தைகள் பொய்த்துவிட்டால் பொன்னம்மா சந்தோஷத்தால் பூரித்துப் போவாள்.

ஆனால், சாத்திரியார் கூறும் வார்த்தை கள் ஒருபோதும் பொய்த்துவிடுவதில்லை என்பதைப் பொன்னம்மா நன்றாக அறிந்திருந்தாள்.

அவளுக்கும் சதாசிவத்திற்கும் கலியா ணம் நடந்த புதிதில், அவர்களுக்குப் புத்திரபாக்கியம் இல்லையென்று சாத்திரி யார் கூறியதை முதலில் பொன்னம்மா நம்பவில்லைத்தான். ஆனால் இன்றுவரை அது எவ்வளவு உண்மையாகிவிட்டது.

சாத்திரியாரிடத்தில் ஏதோ தெய்வம் நின்று பேசுகிறது என்று பலர் கூறுவதைப் பொன்னம்மா கேட்டிருக்கிறாள். உண்மை யில் தெய்வந்தான் நிற்கிறதோ அல்லது சாத்திரத்தின் மகிமைதானோ அவர் கூறுவது மட்டும் உண்மையாகிவிடுவதைப் பொன் னம்மா பல முறை கண்டிருக்கிறாள்.

செம்பிலிருந்த தேநீரை மூக்குப் பேணி யில் ஊற்றிச் சாத்திரியாரிடம் கொடுத்து விட்டு மிகுதியைக் கணவனின் பக்கத்தில் வைத்தாள் பொன்னம்மா.

ஏனோ சிறிது நேரம் அவ்விடத்தில் அமைதி நிலவியது. சதாசிவம் மனைவி கொணர்ந்து வைத்த தேநீரையே வெறித் துப் பார்த்துக் கொண்டிருந்தார். முகத்திலே தேங்கும் துன்பத்தைப் பொன்னம்மா பார்த்து விடக் கூடாதேயென்ற பயம் அவருக்கு.

சாத்திரியாருடைய மனமும் வேதனை யடைந்தது; அவர் கூறிய செய்தி அந்த இணைபிரியாத தம்பதிகளை எவ்வளவு தூரம் வாட்டி வருத்துகிறது; நீண்ட நாள் களாக அவர்களுடைய குடும்ப நண்பராக இருந்த அவர்களின் அன்புப் பிணைப்பை நன்கு அறிந்த பின்பும்தான் செய்த தவறுக்காக, மறைக்க வேண்டிய உண்மை யைக் கூறியதற்காக, அவர் தன்னைத் தானே நொந்துகொண்டார்.

சாதகக் குறிப்புகள் அடங்கிய ஏட்டின் எழுத்துக்கள் சாத்திரியாரின் கண்களுக்கு மங்கலாகத் தெரிந்தன. வழக்கம்போல் முருங்கையிலையின் தளிர்களைக் கசக்கி எழுத்துக்களின் மேல் அவர் தேய்த்த பொழுது, இலைச்சாறு எழுத்தின் வெட்டுக் களை நிரப்பி அவற்றைப் பச்சை வர்ணங் களிலே துலங்கச் செய்தது. ஆனாலும் அவரது கலங்கிய கண்களுக்கு இப் பொழுதும் எழுத்துக்கள் துலங்கவில்லை.

ஒரு கணம் இலைச்சாற்றின் நெடி அவ்விடத்திற் பரவியது.

அங்கு நிலவிய அமைதி சாத்திரியாருக்கு ஏதோ பயங்கரச் சூழ்நிலையாகி மனதிலே கொந்தளிப்பை ஏற்படுத்த, அந்த அமை தியைக் குலைக்கும் வகையில் அவரே தான் முதலில் பேசினார்.

''என்ன பொன்னம்மா சுகமில்லையோ? ஒரு மாதிரியிருக்கிறாய், கண்ணெல்லாம் சிவந்து போய்க் கிடக்கு.''

''இல்லைச் சாத்திரியார், தேத்தண் ணிக்கு அடுப்பு மூட்டேக்க, சாம்பல் கண்ணுக்குள்ளே பறந்திட்டுது.''

இதைச் சொல்லி முடிப்பதற்குள் அழுது புலம்பி விடாமல் இருப்பதற்காகப் பொன் னம்மா எவ்வளவோ முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

சாத்திரியார் எழுந்து சென்று வெகு நேரமாகியும் சதாசிவம் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. தான் இறந்த பின் பொன்னம்மா இறக்கை யொடிந்த பற வையாகத் துடிகத்துப் போவாளே என்பதை நினைத்த பொழுது, அவரது இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல் இருந்தது.

இளமைப் பருவத்தில் பொன்னம்மா வுடன் கழித்த இன்ப நாள்கள் அவரது மனக்கண்முன் நிழலாடின.

வெகு காலத்துக்குப் பின் அன்றொரு நாள் தனது மாமன் வீட்டுக்குப் போயிருந்த சதாசிவம் ஒருகணம் பிரமித்துப் போனார்.

நெற்றியிலே தோன்றும் வியர்வைத் துளிகளைத் தனது அழுக்குப் படிந்த சட்டையால் துடைத்துவிட்டு, மூக்கால் வழியும் சளியை நாக்கினால் உறிஞ்சிக் கொண்டு, அவருடன் சிறுவயதிற் கெந்தி விளையாடிய பொன்னம்மா இன்று எப்படி வளர்ந்துவிட்டாள்!

சித்தாடை கட்டிய சிங்காரப் பெண் ணாக அவரைத் தன் கருவண்டுக் கண் களால் மருள விழித்ததும், தன்னையும் மறந்து 'அத்தான் வந்திருக்கிறாரம்மா' என்று அகமகிழக் கூவியதும், வதனமெல் லாம் செம்மை படரப் புன்னகைத்ததும், நிலத்திலே கால்விரலால் ஏதேதோ கோல மிட்டதும்.... அப்பப்பா! சதாசிவம் என்ற கட்டிளங் காளை கிறங்கிப்போனான்.

அன்று பொன்னம்மா ஒடியற்கூழ் காய்ச்சி யிருந்தாள். அவளின் கைவண்ணத்திற்குத் தான் எவ்வளவு சுவை! சதாசிவத்திற்கு ஒடியற்கூழ் என்றால் கொள்ளை ஆசை யென்று எப்படித் தான் அவளுக்குத் தெரிந்ததோ?

பெண்களே இப்படித்தான்; தாங்கள் யாரிடம் அன்பு செலுத்துகிறார்களோ அவர் களின் மனவிருப்பத்தை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையிற் செயற் படுவதில் பெருஞ் சாமர்த்தியசாலிகள்.

மடித்துக்கோலிய பலாவிலைக்குள் பொன்னம்மா கூழை வார்க்க, அதை உறிஞ்சிச் சுவைப்பதுபோல சதாசிவம் வாஞ்சையுடன் ஓரக்கண்ணால் அவளை நோக்கியபோது, ஆசை வழியும் கண் களால் கள்ளத்தனமாகச் சதாசிவத்தையே பார்த்துக்கொண்டிருந்த பொன்னம்மாவுக்கு வெட்கமாகிவிட்டது.

சதாசிவம் வீட்டிற்குப் புறப்பட்ட பொழுது பொன்னம்மா அவரிடம் ''அத் தான்... நான்'' என்று ஏதோ கூற முயன்று, வெட்கித் தடுமாறி அதைக் கூறாமல் விட்டபோதிலும், தனது மனத் துடிப்பிலே தான் அவளும் இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ளச் சதாசிவத்திற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

''பொன்னம்மாவுக்கு ஏழிற் செவ்வாய், மணமுடித்தால் கணவனுக்குத்தான் கூடா தாம்'' - ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் சதாசிவத்திற்குப் புத்திமதி கூறினார்கள். ஆனால் அவற்றைக் காதில் வாங்கிக் கொள்ளக் கூடிய நிலையில் அப்போது சதாசிவம் இருக்கவில்லை. பொன்னம்மா இல்லாத வாழ்வு வரண்ட பாலைவனமாகி விடும் போல் அவருக்குத் தோன்றியது.

அதன் பின்...

இந்நாள் வரை அவர்களுடைய இல்லற வாழ்க்கை இனிமை நிறைந்ததாய், இன்பத்துள் இன்பமாய்க் கழிந்துவிட்டது.

ஆனால், இன்று சாத்திரியார் கூறிய வார்த்தைகள் எதிர்காலத்தைத்தான் துன்பம் எதிர்நோக்கி நிற்கிறதா?

(14 ஆம்பக்கம் பார்க்க...)

# கங்கு கரையற்று பிரவாகித்தோடும் நதியை ஒத்தது தாயின் அன்பு
# பசி தெரியாத குழந்தை க்கு பால்நினைந்தூட்டும் ஒப்பற்ற பாசம் அவளுடையது

ஆரம்பகால இலக்கியங்களில் தாயின் பிரதான பணியாக முனைப்புறுத்தப்படுவது ''ஈன்று புறந்தருதலாகும்.'' ''திருவள்ளு வரும் ''ஈன்றபொழுது'' பற்றி பேசுகிறார். இது வொரு முக்கியமான அம்சமாகும். பிற்கால வழக்கிலும் இன்றைய பேச்சு வழக்கிலும் கூட இந்த அம்சம் முனைப்புப் படுத்தப்படு கின்றது. தாயைப் பற்றி பேசும்பொழுது வெறு மனே தாயெனக் கூறாமல் பெற்றதாய் என்று கூறும் மரபு இன்றுவரை காணப்படுகின்றது.

இதுவொரு முக்கியமான குறிப்பு. பிள் ளையைப் பெற்றெடுப்பதென்பதே அவ ளின் மிகப்பெரிய பணியாகும். ''பெறுதல்'' என்பது நடைபெறுவதற்கான முன் நிலை கள் முக்கியமானவை.கருவுற்று, பத்துமாதம் தன் உடம்பின் ஒரு பகுதியாக வைத்திருந்து அதன் பின் பெற்றெடுக்கின்றாள். இந்தப் பெற்றெடுப்பை பேறு (குழந்தைப் பேறு) என்பர். மருத்துவ வசதிகள் மிகச் சிறப்பாக வளர்ந்துள்ள இந்தக் காலத்திலேயே பிள்ளை யைப் பெறும் அந்தக் கணமானது சாதாரண மான மனித விலக்குதல்களுக்கு அப்பாலா னது. எதுவும் நடைபெறலாம்.

உண்மையில் பிள்ளையைப் பெறுவ தென்பது தாயும் பிள்ளையும் தத்தம் உயிர்நிலைகளைப் பெற்றுக்கொள்வதாகும். இதனாலேயே இன்றும் யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் ஒரு பெண்ணுக்கு பிரசவ வேதனையேற்படுகின்றபோது இரண்டு யிரும் தெரிக்க வேண்டும் என்று பிரார்த் திப்பர். இது நெஞ்சை எரிக்கும் உண்மை யாகும். பிரசவ வேதனையென்பது தாயின் உயிரும் பிள்ளையின் உயிரும் தெரிநிலைப் படுதலாகும்.

தாயின் பிரசவவேதனையையும் அத னால் அவளுக்கு ஏற்படுகின்ற உடல்நிலை ஆபத்துக்களையும் உள்வாங்கியே ''ஈன்ற, ஈன்ற பொழுது'' என்ற தொடர்கள் பயன்படுத்தப் பட்டன எனலாம்.

பக்தி இலக்கிய காலத்திற்கு வருகின்ற பொழுது பக்தியுணர்வுக்கு அடிப்படையான மானுடநிலை உளக்கிளர்வுகள் எடுத்துக் கூறப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

பிதா வழி ஆதிக்கச் சூழலில் வகுத் தெடுக்கப்பட்ட இறைவன் ,ஆன்மா உறவு பற்றிய வகைப்பாட்டில் தகப்பன்-தாய் உறவு தான் முக்கியப்படுத்தப்படுகின்றது. அப்படி யிருப்பினும் தாயையும் இணைத்தே தேவார முதலிகள் முதல் மாணிக்கவாசகர் வரை பாடி யுள்ளனர். இறைவனைத் தாயுமானவனாகக் காணும் பண்பு பிற்காலத்ததே. அதற்குப் பின்னர் தாய்மையின் இயல்பு பற்றி மாணிக் கவாசகர் கூறும் ஒரு விடயத்தினை நினைவு கூரல் பொருத்தமானதாகும்.

**பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து**
**நீ பாவியேனுடைய**
**ஊனினையுருக்கி உள்ளொளிபெருக்கி**
**உவப்பிலா ஆனந்தமாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே**
**சிவபெருமானே....**

என மாணிக்கவாசகர் தாயினைப் பாடி யுள்ளார். பால் நினைந்தூட்டும் என்பது வரி. உண்மையில் அழுத பிள்ளைதான் பால் குடிக்குமென்பதல்ல. குறிப்பாகப் பிறந்தது முதல் ஐந்து, ஆறு மாத நிலையில் தனது குழந் தைக்குப் பால் ஊட்ட வேண்டுமென்று அவள் நினைத்தே அதைச் செய்வாள். குழந் தைக்கு எப்போது பசிக்குமென்பது குழந் தைக்குத் தெரியாது. தாய்க்குத் தெரியும். அதனாலேதான் நினைந்து ஊட்டுகிறாள். அதுவும் அவள் உண்மையில் பால் கொடுப் பதல்ல. ஊட்டுகிறாள். சிறு குழந்தைக்குப் பாலூட்டுவதென்பது இளம் தாய்மார்களின் வாழ்வுகளிலே மகோன்மதமான விடய மாகும். அவளூட்டும் பால் அவள் தன்னை யுருக்கிக் கொடுப்பது. பால் வேறுபாடு இருக்கக்கூடாதென்பதற்காக அவள் தான் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள். இதனாலேயே ''சேய்க்கு வரும் நோய்க்குத் தாய் மருந்துண்பது போல'' என்ற உவமைத் தொடர் உள்ளது. [illegible] குழந்தைக்கு ஊட்டாவிட்டால் தாயின் உடல்நலமே சிதைவுறும். முலைக்குத்து நீங்க கிருஷ்ணனுக்குப் பால் கொடுக்கும் இன்பம் பற்றி ஆழ்வார்கள் பலர் பாடியுள் ளனர்.

தாயின் மனநிலையைச் சித்தரிக்கும் இலக்கியப் பாடல்கள் பல உள்ளன. கன் றையுடைய பசு பால் கொடுக்க வேண்டிய நேரத்தில் தனது கன்றைத் தேடியெழுப்பும் குரலின் அதிர்வு ஆத்மாவின் அலறலாகவே பேசப்படுகிறது. உற்றாரையான் வேண் டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன் என்ற பாடலில் வரும் கடைசி இருவரிகளும் இந்த வேண்டுதலை அழியாத ஓவியமாகத் தருகின்றன.

**குற்றாலத்துறைபுறையும் கூத்தா உன் குறைகளுக்கு**
**கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே**

கன்றையுடைய பசுவின் அம்மா என்ற கன்றைத் தேடிய குரல் எவ்வாறு பிறக்கின்ற தென்பது இங்கு சுட்டப்படுகிறது.

''**கற்றாவின் மனம்போலகசிந்துருக வேண்டுவனே**'', தாயின் மனம் கசிந்து உருகும். இங்கு கசிதல் என் னும் சொல்லின் நுண்மையை உணர்ந்து கொள் ளல் வேண்டும். அந்தக் கசிவு மன தையுருக்குகிறது.



உருக்குகிறது எனும் பொழுதே அதுவரை உறைந்து கிடந்த ஒன்று நீரோட்டமாகப் பாயத் தொடங்கு கிறது. [illegible] கும். இப்படிப் பார்க்கும் பொழுது தான மமமல மமறமகாள காடடிய மாணிக்கவாசகரின் தாயினும் சாலப் பரிந்து என்ற தொடரின் உண்மையான பரிமாணம் துலங்கத் தொடங்கு கின்றது.

16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளில் தொடங்குகின்ற தமிழின் 2 ஆவது பக்தியு கத்தில் ''அம்மன்'' மிக்க பொலிவுடன் போற் றப்படுகிறாள். இத்தகையதொரு பின்புலத் தினை மனதில் வைத்துக்கொண்டு நோக் கும் பொழுதுதான் கத்தோலிக்கத் தமிழ் பாரம்பரியத்திலே மரியேமாதா வேண்டப் படுவதும், போற்றப்படுவதும் பூரண துலக்க முறும். தங்களுடைய வழிபாடு ஆன்ம விமோ சனத்திற்கான வேண்டுதலை மேரிமாதா இறைவனிடத்திற் செய்கின்றாள் எனும் மன நிலை உருக்கமானதாகும்.

அடுத்து, குடும்ப நிலையில் தாயின் வகி பாகம் பற்றி நோக்குவோம். குடும்பமெனும் சொல் குடி எனும் சொல்லின் அடியாக வரு வது. ''இணைந்து ஒரு கூரையின் கீழ் வாழ்தல்'' என்பதனை இதன் உள்ளார்த்த மாகக் கொள்ளலாம். அப்படியான வாழ் விருப்பின் இடத்தை ''மனை'' என்று கூறு வது தமிழ் மரபு. உண்மையில் மனை என்பதே Home என்பதற்கான தமிழ்ப்பதமா கும். மனைக்கு உரியவள் மனைவியா கிறாள். (மனை+இ(ஐயும் இயும் புணரும் பொழுது வகரம் தோன்றிற்று) = மனைவி) கணவனிலும் பார்க்க மனைவியே மனை யின் தொடர்ச்சிக்கு மையப்புள்ளியாக்கப் படுகிறாள். மனைக்கு விளக்காகிய '' வாணு தல்'' எனும் வரிவரு கிறது. இவளுக்குப் பிறக்கும்குழந்தைகளே குலவிளக் குகளாகும். வள்ளுவரும் ''மனை மாட்சி'என்றே கூறு வதை நோக்கல் வேண் டும்

(08 ஆம்பக்கம் பார்க்க...)



வாழ்நாள் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிதாக, மலிவாக பெறத்தக்க இலைக்கறி வகைகள் பலவித நோய்களைக் குணமாக்கும் திறன் கொண்டவை

எமது ஆரோக்கியமான வாழ்வுக்கு ஆதாரமாக அமைபவை மரக்கறிகளாகும். இவற்றுள் போசனைப் பதார்த்தங்களை அதிகளவில் வழங்குபவை இலை மரக்கறிகளாகும். குடாநாட்டில் அநேகமானோர் தமது விற்றமின், கனிப்பொருள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலை மரக்கறிகளையே உண்ணுகின்றனர். குறிப்பாக விற்றமின் A,C,K, மற்றும் இரும்பு, கல்சியம், பொஸ்பரசு, மக்னீசியம். மங்கனசு என்பனவற்றை இவை கொண்டுள்ளன.

எமது உணவுக் கால்வாய்த் தொகுதியின் சீரான தொழிற்பாட்டுக்கு நார்ப்பொருள்கள் இன்றியமையாதவையாகும். இந் நார்ப்பொருள்கள் இலைக்கீரைகளில் அதிகளவில் உள்ளன. அத்துடன் இலைக்கீரைகள் சிறந்த மருத்துவக் குணங்களையும் கொண்டுள்ளன.

உலகில் மக்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் நம்முடைய உடம்பை ஆரோக்கியமாக வைத்திருக்கல் அவசியமாகும். ஏனெனில் 'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்' என்கின்றார் திருமூலர்.



மருத்துவ உலகம் எமது நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்காக சிபார்சு செய்துள்ளவையே இலைக் கீரைகளாகும். யாழ். மாவட்டத்திலும் கூட வர்த்தக ரீதியில் பயிர் செய்யப்படுகின்ற பிரதானமான கீரைவகைகளாகப் பொன்னாங்காணி, வல்லாரை என்பவற்றைக் கொள்ளலாம்.

**✱ பொன்னாங்காணிக் கீரை**

Botanical Name: Alternanthera Sessilis

English Name: Sessile Plant

இது அறுகம்புல்லைப் போல தரையில் படரும் மூலிகை வகையாகும். இதில் மற்றொரு வகையும் உள்ளது. அது குரோட்டன்களாக வளர்க்கப்படுகிறது. அதில் மூலிகைக் குணம் கிடையாது. இந்தப் பொன்னாங்காணி கற்பக மூலிகையாகும். இதன் சக்தி அளவுக்கு அதிகமானது. உணவு வகையில் இது காயகல்பமாகும். காயகல்பம் என்பது எமது உடலை நீண்டகாலம் அழியாமல் பாதுகாத்துக் கொள்வதாகும். பொன்னாங்காணிச் சாறுமூலம் லோகங்களைப் பஸ்பமாக்குகிறார்கள் எமது சித்த வைத்தியர்கள். பொன் + ஆம் + காண் + நீ என்பது உன் உடலைத் தகதகவென்று மின்னச் செய்யும் பொன் போன்றது என்று பொருள். இது நீர்வளமுள்ள இடங்களில் புற்களுக்கிடையே பச்சையாக வளரும், வெண்மையாக பூப்பூக்கும் ஒரு கற்பக மூலிகையாகும். இதனைத் தினமும் சமையலில் உபயோகப்படுத்தி வருபவர்களது உடல் பொன்போல மின்னும் எனக் கூறுவர். இந்தச் சுவைமிக்க கீரையைக் கூட்டுப் பொரியல், மசியல் முதலிய எல்லா வகையிலும் உபயோகப்படுத்தலாம்.




இக்கீரையின்இலையிலே அதிக அளவில் போசணைச் சத்துக்கள் காணப்படுகின்றன. அதிகளவில் புரதம் 5% உம் இருப்பு 16 mg உம் காணப்படுகின்றது. இக் கீரையானது குளிர்ச்சிமிக்கது. எமது உடலிலுள்ள சூட்டைக் குறைத்து அதனைச் சமனிலையில் வைத்திருக்கும். உடற்பலத்தை அதிகரிக்கும். இக் கீரையை உணவாக உட்கொண்டால் கண்பார்வை மங்கல், கண் சம்பந்தமான நோய்கள் நீங்குவதுடன் மூலரோகத்திற்கும் மண்ணீரல் கோளாறுகளுக்கும் இது ஒரு நல்ல மூலிகையாகும்.

இக்கீரையோடு பூண்டு சேர்த்து வதக்கிப் பக்குவப்படுத்தி சுடச்சுடச் சோற்றில் கலந்து 40 நாள்கள் உண்டால், மூலநோய் அறுவைச் சிகிச்சை இல்லாமலேயே குணமாகும். இத்துடன் உடல் பெருத்துக் காணப்படல், உடல் மஞ்சள் நிறமாகத் தோன்றல், சளி, இருமல் நோய்களும் தீரும்.

பொன்னாங்காணியைச் சித்த மருத்துவத்திலே மருந்துகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். அந்த வகையில் சில தைலங்களாகவும், பஸ்பங்களாகவும் தயாரிக்கப்படுகின்றன. அவற்றுள் பொன்னாங்காணித் தைலம், பிருங்காமிலத்தைலம், மான்கொம்புப் பஸ்பம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**✱ வல்லாரைக் கீரை**

Botanical Name: Centella asiatica

English Name: Indian Penny woot

சரஸ்வதிக் கீரை என்று சொல்லப்படும் கீரையே இதுவாகும். மருத்துவத்தில் இதை லேகியமாகவும், சூரணமாகவும், டானிக்குகளாகவும், மாத்திரைகளாகவும் தயாரிக்கப்படும் மருந்துகளில் பயன்படுத்தி வருகிறார்கள். இது வல்லமை மிக்க கீரை என்பதால் வல்லாரை எனப் பெயர் பெற்றது. இக் கீரையை உண்பதால் எமது உடலிலுள்ள இரத்தம் சுத்திகரிக்கப்படுகிறது. அத்துடன் இது உடலில் ஏற்படும் இரணங்களையும் ஆற்றும் சக்தி வாய்ந்தது.

இக்கீரையில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து போன்ற ஊட்டச் சத்துக்களும் விற்றமின்காக A,C. என்பனவும் பெருமளவில் அடங்கியுள்ளன. பற்களில் ஏற்படும் மஞ்சள் நிறம் நீங்க இந்த இலையை சிறிதளவு மென்று பல் தேய்த்தால் மஞ்சள் நிறம் மாறிப் பற்கள் வெண்மையடையும்.

இக்கீரையை அளவோடு பயன்படுத்தினால் பெரும்பயன் தரும். அளவுக்கு மிஞ்சினால் தலைச்சுற்று மற்றும் தலைவலி உண்டாகும். இதன் இலை, வேர் யாவும் பயன்மிக்கவை. இது ஒரு உடற்தேற்றி, உடல் உரமாக்கி, வெப்பமுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி உடல் ஆரோக்கியத்துக்கு உதவும்.


மனிதர்களது மூளையையும் பலப்படுத்துவதிலும் மறதியை நீக்கி நினைவாற்றலை அதிகப்படுத்துவதிலும் இதற்கு நிகரான கீரை வேறெதுவும் இல்லை. வல்லாரைக் கீரையைத் தொடர்ச்சியாகப் பாவிப்பதால் தாது இழப்பு நீங்கித் தாதுப் பெருக்கம் உண்டாகும். இது காக்கை வலிப்பு நோயையும் போக்கக்கூடியது. இதை உண்பவர்களுக்கு உடற்கட்டுடன் முகரேஜஸ் உண்டாகும். அத்துடன் வாய்ப்புண், வயிற்றுக் கடுப்பு, காய்ச்சல், இளைப்பு, தொண்டைக்கம்மல், கழிச்சல், மேகப்புண் போன்ற வியாதிகளும் தீரும். இதன் இலையுடன் துளசி இலையையும் மிளகையும் சம பங்காகச் சேர்த்து பயறளவு மாத்திரையாகச் செய்து காலை மாலை பயன்படுத்த வேண்டும்.

ஜீ.தயாழினி,
4 ஆம் வருட மாணவி, சித்தி மருத்துவத்துறை,
யாழ்ப்பாணம்.

இக்கீரையில் ஒரு கைபிடி எடுத்து அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு பசுப்பாலுடன் குடித்தால் மாலைக்கண் வியாதி தீரும். இவ்வாறாக 15 நாள்கள் தொடர்ச்சியாக உண்ணல் அவசியமாகும்.

## பொன்னாங்காணியையும் வல்லாரையையும் தேடி உண்ணுங்கள்

வல்லாரைக்கீரையுடன் மிளகையும் சேர்த்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் பச்சையாகவே மென்று தின்ன சில நாள்களில் வெட்டைச்சூடு நீங்கி விடும்.



வல்லாரைக் கீரையை அரைத்துப் பசுப்பாலுடன் சேர்த்து தினமும் காலையில் கொட்டைப் பாக்களவு உண்டுவந்தால் காசம், சயம், ஈளை இருமல் போன்ற நோய்கள் நீங்கும்.

இக் கீரையை மருந்தாகப் பயன்படுத்தும்போது மாமிசம், கருவாடு, அகத்திக் கீரை, பாவற்காய் முதலியவற்றைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. புளி, காரம் என்பவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

படிக்கும் மாணவர்கள் இதனைப் பச்சையாகக் காலை வேளைகளில் மென்று உண்டு வந்தால் மூளை விருத்தியாகும். பலம் பெருகும். கல்வி கற்பதற்குத் தேவையான ஞாபகசக்தியை அதிகரிப்பதால் இதற்கு சரஸ்வதிக் கீரை என்பது காரணப்பெயராயிற்று.

தமிழர் மருத்துவமான சித்த மருத்துவத்தில் இதனை மருந்துகளில் சேர்த்துப் பயன்படுத்துகின்றனர். அந்த வரிசையில் வல்லாரை லேகியம், வல்லாரை நெய், சரஸ்வதாச் சூரணம், சரஸ்வதா அரிஷ்டம் போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

இலைகளாக மென்று உண்ணும்போது அது தூய்மையான இரசாயன உரமாக்கிகள் பயன்படுத்தப்பட்டு விளைவிக்கப் படாதவையாக இருக்க வேண்டியது அவசியமாகும்.✱

---

# கங்கு கரையற்று பிரவாகித்தோடும் நதியை...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

பெண்மையில் தொடங்கும் தாய்மை தெய்வத்தன்மையாகப் பொலிவுபெறுகின்றது. தாயெனும் படிமம் மொழிக்கும், நாட்டுக்கும் விஸ்தரிக்கப்படும் பொழுது மொழியும் நாடும் மாத்திரமல்ல, தாய்மைக்கு மதிப்புக் கொடுக்கும் நமது பண்பாடும் சிறப்புறுகிறது.

தாயின் பிரசன்னம் பகல் நேரத்துச் சூரிய வெளிச்சம் போன்றது. அதனை யாரும் விதந்து கூறுவதில்லை. பகல் என்றால் வெளிச்சமிருக்குமென்பது விவாதிக்கப்பட வேண்டாதவொன்று. சூரிய வெளிச்சம் இல்லையென்றால் பகல் தன்நிலையை இழக்கிறது. தாய் பற்றிய நிலையும் அத்தகையதே. தாய் இல்லையெனும் பொழுதுதான் உண்மையில் தாய்மையைப் பற்றி நாங்கள் உணர்ந்து கொள்கின்றோம். தாய்நிலை நின்று பிள்ளையைப் பார்த்த நாம் அடுத்து பிள்ளைநிலை நின்று தாயைப் பார்ப்பதும் அவசியமாகும்.

தாயன்பு பற்றித் தெரியாத குழந்தைகள், இளவயதினரின் ஆளுமைகளில் பாரிய பாதிப்பு ஏற்பட்டு விடுகின்றது. பிள்ளை மற்றவர்களுடன் இயைந்து செல்வதும், மற்றவர்களை மனம் நோகாது வைத்திருக்க முயல்வதும் கூட அக்குழந்தை தாயைத் திருப்திப்படுத்தச் செய்வது தான். தன்னுடைய இன்முகம் தாயினுடைய அளவு கடந்த சந்தோஷத்துக்குக் காரணமாகின்றதென்பதைப் பிள்ளை உணர்ந்து கொள்ளும்போது அதன் சமூகமயவாக்கம் சிக்கலற்றதாக அமைந்து விடுகிறது. தாயன்புக்குப் பழக்கப்படாத பிள்ளை ஒரு மனிதக் குறைபாட்டுடனேயே வளர்கிறது. தாய் நிலையில் ஒரு முக்கிய அம்சம் யாதெனில் ஒரு குழந்தையினால் "அம்மா" என்று அழைக்கப்படுகின்ற பொழுது அவள் தன் பெண்நிலைக் குறைபாடுகளைக் கடந்து சென்று விடுகிறாள். பெண் என்ற நிலையில் தவறுகளுக்கு ஆட்படுத்தப்படலாம். ஆனால், தாய் தவறுகளுக்கு அப்பாலானவள். தாயின் இழப்பு அது எத்தனை வயதில் நடைபெற்றாலும் ஆழமான உளத்தாக்கத்தை ஏற்படுத்துவதாகும். தகப்பன்மார் கூட பிள்ளைகளுடன் சிறிதளவே அளவளாவுகின்ற ஒரு பண்பாட்டுக் கூற்றுக்குப் பழக்கப்பட்டுப்போன நாம் தாயின் மறைவுடன் நம்மை இடித்துக்கூறும் ஒருவரை இழந்து விடுகிறோம். "தில்லிக்கு ராஜா என்றாலும் தல்லிக்குப் பிள்ளை". தல்லி என்பது கன்னடத்தில் தாயைக் குறிக்கும். அந்தத் தாயினுடைய "தலை யீட்டை" இழத்தலென்பது தாளாத சோகமாகும். உண்மையில் நம்மிற் பலர் நமது ஆளுமைகளின் தனிமையை அப்போதே உணர்ந்தோம். தாய் என்பது எந்த மொழியிலென்றாலும் பவித்திரமான, அதேவேளையில் அற்புதங்கள் நிறைந்த ஒரு சொல். ✱✱✱

நன்றி:- "நமது [illegible]" கட்டுரையிலிருந்து.

---



# தவக்காலச் சிந்தனை




## தாகமாயிருக்கிறேன்.....

தரணிமீது கொண்ட தணியாத தாகத்தினால் ஆயிரம் தாக்கங்களை தனக்குள்ளே தாங்கிக் கொண்டு அத்தனைக்கும் மொத்த வடிவம் கொடுத்து ஆண்டவன் சொன்னான்- 'தாகமாயிருக்கிறேன்....' என்று. கருவறையில் கண் திறக்கும் சிசு எங்கே அது தனக்குக் கல்லறையாகிடுமோ என்று கலங்கிஅன்னையின் அனுமதிக்காக ஏங்கி அந்தப் பிஞ்சு தேகம் சொன்னது-'தாகமாயிருக்கிறேன்....' என்று. தொட்டிலில் சாய்ந்து தாலாட்டுப் பாட வேண்டிய நேரத்தில் தொடர் நாடகத்தில் மூழ்கிப் புட்டிப் பாலை நீட்டிப் பெற்ற பாசத்தை எட்டி வைக்கையில் சின்ன மனம் சொன்னது- 'தாகமாயிருக்கிறேன்......' என்று. நன்மைகள் நிறைந்தபோது நாயாய் தேடிவந்தவர்கள் துன்பங்கள் என்றவுடன் பேயாய் ஓடிச் செல்கையில் உண்மை அன்புக்கு ஏங்கியவன் சொன்னான்- 'தாகமாயி ருக்கிறேன்....' என்று. அர்ப்பண வாழ்வில் அடியெடுத்து வைத்தபின் உத்தமன் யேசுவை உதறி விட்டு அற்ப ஆசைகளுக்குள் அடிமைப்பட்டு உணர்விழந்து உரிமையிழந்த உள்மனம் சொன்னது-'தாகமாயிருக்கிறேன்...'என்று. நீதிக்காகக் குரல் கொடுத்தவர்களை நீதிமன்றங்களில் நிறுத்தி அநியாயத் தீர்ப்புக்களை அரங்கேற்றும் வேளைகளில் நிந்தையில் அடிபட்டவன் மனம் சொன்னது- 'தாகமாயிருக்கிறேன்...' என்று. பத்துமாதம் சுமந்து பெற்ற அன்னையைப் பரிதவிக்க விட்டு பல்லான ஆசைகளைத் தேடிச்சென்ற பிள்ளையை நினைத்துப் பெற்ற மனம் சொன்னது- 'தாகமாயிருக்கிறேன்...' என்று. இறைவனின் அன்பை மறந்து இறை உறவைப் பிரிந்து தவறான வாழ்க்கை, தவறிய பாதை, தடுமாறிய வார்த்தையில் உள்ளம் குமுறியது- 'தாகமாயிருக்கிறேன்....' என்று. நினைக்கக் கூடாதவற்றை நினைத்து, செய்யக் கூடாதவற்றைச் செய்து, இழக்கக்கூடாததை இழந்து, துணையிழந்து, துயரில் விழுந்தவன் தாக்கிவிட ஒரு உள்ளம் தேடிச் சொன்னான்- 'தாகமாயிருக்கிறேன்...' என்று. கிடைக்கவேண்டியது கிடைக்காமல்போக எதிர்பார்ப் புகள் ஏமாற்றங்கள் ஆகிட நம்பியவை நழுவிவிட, தாகங்கள் தணியாமல்போக, பணிகள் பலனின் றிப்போக, இன்பங்களே இல்லை என்றாகி துன்பங்கள் துரத்த நீ மட்டும் - 'தாகமாயிருக்கிறேன்......' என்று சொல்லாதே. சிலுவையில் உனக்காக உயிர்துறந்து உலகிற்கு விடுதலை கொடுத்த வள்ளலின் மீட்பினால் உன் தாகத்தை தணித்துக்கொள் மானிடா!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தூரிகை



செ.சுகன்ஜன், தரம் - 7F,
யா/இந்துக் கல்லூரி.



சி.வைஸ்ணவி, தரம் - 8A,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பா.



சி.மேரிவர்ஷா, தரம் - 5 C,
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



கெ.மாருதிகா, தரம் -3 B,
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.



அ.றாயினி, தரம் - 8,
செல்.அன்ரனிஸ்.




ப.கௌதமி, தரம் - 8 B,
யா/கொண்டாவில்/இ/ம/வித்தி.




# உண்மையின் சிறப்பு

[சென்றவாரத் தொடர்ச்சி....]

"சரி போய் வாருங்கள் நான் தடுக்கவில்லை"

அவளுக்கும் விடைகொடுத்தான் அவன்.

கல்வித் தேவதை சென்று மறைந்த சிறிது நேரத்துக்கெல்லாம் இன்னொரு மங்கை வருவதைக் கண்ட மன்னன்,

"அம்மா தாயே! நீ யார்? எங்கே புறப்பட்டுப் போகிறாய்?"

"நான் சத்திய தேவதை. திருமகள், தர்மதேவதை, கல்வித் தேவதை இவர்கள் மூவரும் இல்லாத நாட்டில் என்னால் எப்படி இருக்க முடியும். ஆகவே நானும் போகிறேன்"

சத்திய தேவதை இவ்வாறு கூறியதைக் கேட்டதும் மன்னன் சிறிதும் யோசிக்காமல் அவள் காலடியில் விழுந்து வழியை மறித்தான்.



"அம்மா, தயவு செய்யுங்கள். மற்ற மூவரும் போனபோது நான் கவலைப்பட வில்லை. ஆனால் உண்மையாகிய தாங்கள் சென்றால் நாடே நாசமாகிவிடும். கருணை கூர்ந்து நீங்கள் இந்த நாட்டில் தங்கியே தீரவேண்டும்" எனக் கெஞ்சினான்.

மன்னனுடைய உண்மைப்பற்று சத்திய தேவதையின் மனதை இளகச் செய்து விட்டது.

"மன்னா! வருந்தாதே, உன் வேண்டுகோளைத் தட்டாமல் இந்த நாட்டில் இருந்து விடுகிறேன்" என்றாள்.

"தாயே! தங்கள் கருணையே கருணை!" என்று மன்னன் மகிழ்ந்தான். சத்திய தேவதை நாட்டுக்குள் திரும்பியதால் நீதி நெறி தேவதையும் திரும்பி வந்தாள். "மன்னா! உண்மை இருக்கும் இடத்தில்தான் நான் இருப்பேன். அதனால் திரும்பி விட்டேன்" என்று தன் வருகைக்கான காரணத்தைக் கூறினாள்.

"என் பாக்கியம் தாயே" என்று அவளை வரவேற்றான் மன்னன். சற்றைக்கெல்லாம் தர்ம தேவதையும் திரும்பி வந்தாள்.

"மன்னா! உண்மையும், நீதியும் இருக்கும் இடத்தில்தான் என்னால் இருக்க முடியும். அதனால் திரும்பி விட்டேன்" என்றாள்.

"தாயே அது என் பாக்கியம்" என்று அவளையும் மன்னன் வணங்கினான். கடைசியாகத் திருமகளும் திரும்பி வருவதைக் கண்டான் மன்னன்.

"தாயே வருக! வருக!" என்று கூவி அழைத்தான் அபராஜிதன்.

"வந்து விட்டேன் மன்னா! கொடை, நல்லொழுக்கம், உண்மை இவர்கள் இல்லாத இடத்துக்கு நான் போனால் நாடு கொடிய விலங்குகள் வாழும் காட்டை விட மோசமாகிவிடும். அதனால் நானும் வந்து விட்டேன்!" என்றாள் திருமகள்.

திருமகள், தர்மம், நீதி, சத்தியம் ஆகிய நான்கு பேர்களும் வரிசையாக நிற்க, மன்னன் மண்டி இட்டு வணங்கினான்.

"தாய்மார்களே சத்தியத்தின் பெருமை தான் என்னே! அதை நான் கண்டதைப் போல என் நாட்டு மக்களும் உணர்வார்கள் என்று நம்புகிறேன். ஆசி கூறுங்கள்" என்று வணங்கினான் மன்னன்.

சத்தியம் இல்லாத இடத்தில் எதுவும் நிலைத்து நிற்காது.★

**ச.யனந்தினி,** தரம் - 8c ,யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 08

1. இலங்கைக் கிரிக்கெட் அணியின் புதிய தலைவர் பெயர் என்ன?
2. பாகிஸ்தான் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் யார்?
3. வார வசந்தம் பகுதியில் வெளி வரும் 'யாருமே காணாத ஒருதுளி கண்ணீர்' என்னும் தொடரை எழுதுபவரின் பெயர் என்ன?
4. பிரபல உதைபந்தாட்ட வீரர் றொனால்டோ நீண்ட காலத்தின் பின்னர் தற்போது எந்த உள்ளூர் அணிக்காகக் களமிறங்கி விளை யாடி வருகிறார்?
5. நாவலர் மணிமண்டபத்தில் உள்ள நாவலர் சிலையை வடிவமைத்த சிற்பியின் பெயர் என்ன?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 01.04.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர் களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

### விடை தெரியுமா?-06
சரியான விடைகள்

(1) 1905 ஆம் ஆண்டு சித்திரை 20 ஆம் திகதி.
(2) சி.வி.நல்லதம்பி.
(3) 2009.03.03.
(4) மார்ச் 8ஆம் திகதி. (5) பிரணாப் முகர்ஜி.

### பரிசுபெறுவோர்

01. வி.விஷ்ணுஜன்,
தரம் - 8 , கொக்குவில் இந்துக் கல்லூரி.
02. யோ.ஜெனோசன்,
தரம் - 7A, புனித பத்திரிசியார் கல்லூரி.
03. அ.சாம்பவி,
தரம் - 9 , கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.
04. சி.டனுசன்,
தரம் - 7 B , சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
05. யோ.சிவரஜனி,
தரம் - 6 , மட்டுவில் கமலாசனி வித்தி.
06. சி.பானுகா,
தரம் - 4 B, உடுவில் மகளிர் கல்லூரி.

குறிப்பு:
விடை தெரியுமா பகுதியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குகொள்ளவும். விடைத்தாள்களுடன் சிறுவர் கதிர் விண்ணப்பப் படிவம் கட்டாயம் இணைக்கப்படவேண்டும். விடைத்தாளுடன் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களை மறக்காது குறிப்பிடுங்கள்.




மணிமொழியின் அலறலைக் கேட்டதும் இளவரசர்கள் இருவரும் என்ன செய்வ தென்று தெரியாமல் திகைப்படைந்தனர். ''வெறுமனே யோசித்துக்கொண்டிருப்பதால் பயனேதும் இல்லை. மந்திரக்கிழவி நம்மைக் கண்டுவிட்டால் அதோ கதிதான். எனவே அவள் கண்ணில் இருந்து மறைவதற்கான உபாயத்தை நாம் கண்டறியவேண்டும்.'' என்று பதைபதைப்போடு கூறினாள் மணிமொழி.

அவளது வார்த்தையைக் கேட்டதும் ஒரு தீர்மானத்துக்கு வந்தவன் போல தன் இடுப்பில் கட்டியிருந்த பை ஒன்றை வெளியே எடுத்தான் இந்திரவர்மன். அந்தப் பையில் மாயக்கிழவி வைத்திருக்கும் மந்திரக் கண்ணாடியில் இவர்களது உருவத்தைப் புலப்படாமல் செய்யும் சக்தி கொண்ட மண் இருந்தது. குகையில் இருந்து வெளியே வரும்போது அதனைக் கொண்டு வந்திருந்தான் இந்திரவர்மன். அந்த மண்ணை இளவரசி மீது அவசரஅவசரமாகத் தூவினான். பின்னர் சந்திரவர்மனையும் மணிமொழியையும் இழுத்துக்கொண்டு மாளிகையில் இருண்டு கிடந்த ஓர் அறையை நோக்கி ஓடினான். மூவரும் அறையினுள் சென்று கதவை இறுகத் தாழிட்டுக் கொண்டனர்.



அப்போது 'படார்' என மாளிகையின் பிரதான வாசல் திறந்துகொள்ள, மாயக்கிழவி மாளிகை யினுள் நுழைந்தாள். உள்ளே நுழைந்த கிழவி, அங்கிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தாள்.

''நாளை இந்நேரம் இளவரசர்கள் பலியிடப்பட்டு நான் என்றுமே அழியாத இளமையைப் பெற்றவளாக மாறியிருப்பேன்'' என்று உரக்கக் கூறிச் சிரித்தாள் மந்திரக்கிழவி.

அந்தச் சிரிப்பொலியைக் கேட்ட மாத்திரத்தில் அறையில் ஒழிந்திருந்த மூவருக்கும் வியர்வை ஆறாகப் பெருகத் தொடங்கியது. *(தொடரும்)*

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங் கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முக வரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..................................
தரம் :-..................................
பாடசாலை :-..................................


இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.............................. ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## பலவிதமான "கம்"-கள்



01. வானத்தில் இருக்கும் 'கம்' எது? மேகம்.
02. இசையில் இருக்கும் 'கம்' எது? ராகம்.
03. நாவில் இருக்கும் 'கம்' எது? தாகம்.
04. அணிவதில் இருக்கும் 'கம்' எது? தங்கம்.
05 பறவைகளுள் இருக்கும் 'கம்' எது? காகம்.
06. பாம்புகளில் இருக்கும் 'கம்' எது? நாகம்.
07. அனைவரும் விடைபெற்றுச் செல்லும் 'கம்' எது? வணக்கம்.
08. நமக்குச் சொந்தமான 'கம்' எது? தாயகம்.
09. ஒருவருக்காக நாம் செய்யவேண்டிய ஒரு 'கம்' எது? தியாகம்.



10. எல்லோரும் படிக்கும் 'கம்' எது? புத்தகம்.

றா.சுலக்சியன், தரம்-7C, யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஆவேசங்கள்

வாஸந்தி

சாமானியன் எட்ட முடியாத உயரத்துக்கு ஆசைப்படமுடியாது என்கிற அர்த்தத்தில் - ''டில்லி பஹுத் தூர் ஹை!'' (டில்லி இருப்பது வெகு தூரம்!) என்று வட இந்தியர்கள் சொல்லுவார்கள். முகலாயர்கள் டில்லியை ஆண்ட காலத்தில் அந்தச் சொற்றொடர் ஏற்பட்டிருக்கும். அதிகார வர்க்கத்துடன் சாமானியன் உறவோ நெருக்கமோ வைத்துக்கொள்வது



இயலாது என்கிற நிதர்சனப் புரிதல் அது.

சமீபத்தில் பத்து நாள்கள் டில்லிக்குச் சென்று வந்ததில் ஒன்று துல்லியமாக விளங்கிற்று. யாருக்கு 'டில்லி பஹுத் தூர் ஹை'யாக இருக்கிறதோ இல்லையோ சுதந்திரம் பெற்று அறுபது ஆண்டுகளுக்குப் பின்னும் தமிழ் நாட்டவருக்கு டில்லி வேறு உலகம்.

அதன் மறுபக்கத்தை இப்படியும் சொல்லலாம். வட இந்தியாவுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் மற்றைய பகுதிகளுக்கும் தமிழ்நாடு வேறு உலகம். அது வெளிப்படுத்தும் ஆவேசங்கள் புரிந்து கொள்ள முடியாதவை. சம்பந்தமில்லாதவை. நான் அங்கு இருந்த பத்து நாள்களில், தமிழ்நாடு அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்த விஷயம் எந்தத் தேசிய தினசரியிலும் வரவில்லை, வழக்கறிஞர்களின் போராட்டத்தைத்தவிர.

அங்கு நான் சந்தித்த எல்லோருமே தமிழ்நாட்டு வழக்கறிஞர்களின் செயலைக் கண்டித்தனர் தமிழ்நாட்டின் நீதித்துறை இந்த அளவுக்குத் தரமிறங்கிப் போயிற்றா என்று தமது அதிர்ச்சியையும் சலிப்பையும் வெளிப்படுத்தினார்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகத் தமிழ் நாட்டில் எல்லாக் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு தினம் ஒரு போராட்டமும் ஊர்வலமுமாகச் சென்று கொண்டிருந்தமை அதீதமானதாக, பொறுப்பற்றதாக, கவனம் பெறவேண்டிய முக்கியத்துவம்



அற்றதாக வடநாட்டில் (டில்லி) கருதப்பட்டுவிட்டதாகத் தோன்றிற்று. தமிழகத்து அரசியல் பாசாங்குத்தனம்

இனம் கண்டு கொள்ளப்பட்டுவிட்டதாகவே செய்திகள் ஓரங்கட்டப்பட்டன.

டில்லியில் தலைவர்களைக் கவலையில் ஆழ்த்தும் விஷயங்கள் ஏராளம். இந்திய எல்லையைத் தொட்டுக்கொண்டிருக்கும் பாகிஸ்தானில் நடக்கும் அரசியல் அதிர்வுகள் எல்லாமே டில்லியில் நேரடியான அதிர்வு தரக்கூடிய விஷயங்கள். மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. நாம் எடுக்கும் முயற்சிகளுக்கெல்லாம் பாகிஸ்தான் அரசு சால்ஜாப்பு சொல்லி நழுவுகிறது. அங்கு எவரிடம் உண்மையான அதிகாரம் இருக்கிறது என்று புரியவில்லை. இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் இருப்பதாக இந்தியா டுடே Conclave அமர்வுக்கு வந்து உரையாற்றிய பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப் குண்டைத் தூக்கிப்போட்டார். அதோடு காஷ்மீர் மக்களுக்கு விடுதலை கிடைத்தால் மட்டுமே இந்திய- பாக் பிரச்சினை தீரும் என்று பழைய பல்லவி பாடினார். இவரின் உரை இரண்டு நாள்களாக எல்லாத் தொலைக்காட்சிச் சானல்களிலும் அலசப்பட்டது. இதற்கிடையில் லோகசபைத் தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டுவிட்ட செய்தி வந்தது. நிமிஷத்துக்கு நிமிஷம் எல்லாச் சானல்களிலும் அதைப் பற்றின அலசல். விவாதங்கள். தொட்டுக்கொள்ள பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்பு, மீண்டும் அங்கு ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றுமோ? சர்தாரி தலைமறைவாகிவிட்டாரா? என்ற பரபரப்பான செய்திகள். பங்களாதேஷில் ராணுவத்தில் கலகம், தலாய்லாமா இந்தியாவுக்கு அடைக்கலம் கேட்டு வந்து அறுபது ஆண்டுகள் நிறைவு பெற்றதை ஒட்டி மாபெரும் கூட்டம்; உணர்ச்சிபெருக்கெடுக்கும் புலம்பெயர்ந்தவர்களின் பேச்சுகள்.

இலங்கையா? இலங்கைத் தமிழரா? தாடி பற்றி எரியும்போது பீடிக்கு நெருப்புக் கேட்ட கதையாக, சம்பந்தமே இல்லாத ஒரு பிரச்சினையை தமிழ்நாடு முன்னிறுத்துவதாக வடக்கில் தோற்றம் ஏற்படுத்தியது.

இலங்கையில் நடக்கும் போருக்கு இந்தியா உதவுவதாகத் தமிழகத் தலைவர்கள் சொல்வது சரியான கேலிக்கூத்து என்றார் டில்லியில் ஓர் அரசு அதிகாரி. ''வட, வட கிழக்கு எல்லையைப் பாதுகாக்கவும், பயங்கரவாதத்தை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபடவுமே ராணுவத் தளபாடங்கள் போதாமல் திண்டாடும்போது இலங்கையில் நடக்கும் உள்நாட்டுப் போரில் ஈடுபட எமக்குப் பைத்தியமா'' என்றார் அவர். ''அப்பாவித் தமிழருக்கு உதவ எம்மால் இயன்ற அளவுக்கு மருந்தும் மருத்துவர்களும் உணவுப் பொருட்களும் அனுப்புகிறோம். இதற்கு மேல் என்ன செய்யமுடியும்? இருக்கிற தலைவலி போதாது என்று இலங்கையுடன் சண்டைக்குச் செல்ல முடியுமா?'' என்றும் கேட்டார் அவர்.

தமிழ் நாட்டுத் தலைவர்கள் சிலர் டில்லிக்கு வந்ததோ, நாடாளுமன்றத்தின் முன் இலங்கைத் தமிழர் சார்பாகக் கோஷமிட்டதோ டில்லி பத்திரிகை களில் முக்கியத்துவம் பெறவில்லை. அதை வேடிக்கை பார்க்கக்கூட

தெருவில் எவருமில்லை. மரியாதை நிமித்தம் வந்தவர்களை சோனியா காந்தி சந்தித்தார். 40 ஆசனங்களின் பலத்துடன் செல்வாக்குடன் இருக்கும் கூட்டணி நண்பரான கருணாநிதிக்கே எதுவும் செய்யமுடியாமல் போனபோது இவர்களால் என்ன சாதிக்கமுடியும்? பிரச்சினை வெளியுறவு சம்பந்தப் பட்டது. பாகிஸ்தான் எமது வாசலை இடிக்கப் பார்க்கும்போது, பயங்கர வாதத்தைப் பரப்பி காஷ்மீரில் சில்மிஷம் செய்யும் போது, இலங்கையில் நாம் குறுக்கிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜனநாயக அரசை எந்த வகையிலும் நிர்ப்பந்திக்கமுடியாது என்று சொல்லப்பட்டது. அப்பாவித் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப் பட வேண்டும் என்று எமது கருத்தை வலியுறுத்துவதைத் தவிர வேறு எதுவும் செய்வது இயலாது என்று உணர்த்தப்பட்டது.

சோனியாகாந்தியின் பேச்சு தனக்குத் திருப்தி அளிக்கவில்லை என்று காட்டமாகச் சொன்ன பா.ம.க. தலைவர், தமிழனின் உணர்வைப் புரிந்துகொள்ளாத அரசில் தொடர்ந்து மந்திரிப் பதவி வகிக்க வேண்டாம் என்று மகன் அன்புமணியிடம் சொன்னாரா? ரோசம் எல்லாம் தமிழகத்து வீதிகளில் உரத்துக் கத்தும் கோஷங்களில் தான். அடுத்து வரும் லோகசபைத் தேர்தலில் தமிழகத்தில் இலங்கைத் தமிழரின் பிரச்சினையே முக்கியமாக முன்னிறுத்தப்படும் என்று எல்லாக் கட்சிகளும் சவால் விடுகின்றன. எல்லோருமே இன்று தமிழினத் தலைவர்கள். திராவிடப்



போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து காங்கிரஸுக்கு எதிராகக் கொடிபிடித்து, பிரிவினைக் கோஷமெழுப்பி, ஹிந்தி ஒழிக என்று நாடே அதிர கூக்குரலிட்டு, தண்டவாளத்தில் படுத்து மறியல் செய்து, ஆட்சியைப் பிடித்து திராவிட ஆட்சியை ஆரம்பித்து, தமிழகத்தில் காங்கிரஸின் மீள் வரவுக்கு சமாதிகட்டிய கட்சி தி.மு.க. அதன் தலைவரும், தமிழினத்தலைவர் என்று தன்னை வரலாறு சொல்லும் என்ற நம்பிக்கையில் இருந்தவருமான கருணாநிதியை இன்று ஒரு பார்ப்பனப் பெண், பரம வைரி ஜெயலலிதா, தமிழினத் துரோகி என்கிறார். அந்தச் சாடலே எதிர்வரும் தேர்தலில் தனக்கு வெற்றியைக் கொடுக்கப் போகும் மந்திரச் சொல் என்று நம்புகிறார். கருணாநிதிக்கு, தினமும் ஜெயலலிதாவுக்கு முரசொலி மூலம் மறுப்புச் சொல்வதும் 1981இல், 85இல், 95இல் 2001இல் ஜெயலலிதா என்ன செய்தார் என்ற புள்ளிவிவரம் கொடுப்பதுமே இடுப்பை ஒடிக்கிறது.

காங்கிரஸுடன் கூட்டணிசேர்ந்து நிறைய இலாபம் பார்த்தாயிற்று. நடு ஆற்றிலிருந்து திரும்பமுடியாது. பா.ஜ.க பலமாக இல்லை. காங்கிரஸ் திரும்பினாலும் திரும்பலாம். அதனால், அணி மாற்றம் என்கிற பேச்சுக்கே இடமில்லை. கூட்டணி பலத்தைக் கூட்டுவது முக்கியம். அது இருந்தால் ஜெயலலிதா கொக்கரிக்கமுடியாது என்று கருதுகிறார் கருணாநிதி. தமிழகத்தில் எந்தத் தேர்தலானாலும் அவருக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே இருக்கும் விரோதமே முக்கியப் பிரச்சினையாக இருக்கும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முப்பது நாள்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று இந்தச் சந்தையில் ஆசைகாட்டி கூப்பாடு போடுகிறது பா.ஜ.க. இலங்கைத் தமிழர் பிரச்சினை என்கிற தமிழக அரசியலின் கோஷமே ஒரு பம்மாத்து என்று டில்லி வட்டாரங்கள் எமக்கு முன்பே புரிந்துகொண்டுவிட்டன.

விந்திய மலைக்கு அப்பால் இந்தக் கோஷங்கள் காதில் விழாது. மைய தேசியக் கட்சிகளுக்கு அவற்றைப்



பற்றிய எந்த அபிப்பிராயமும் இல்லை. கோஷம் எதுவானால் என்ன? எதைச் சொல்லியாவது வாக்கு கிடைத்தால் என்ன பிரச்சினை?

ஆங்கிலத்தில்'disconnect' என்றதொரு சொல் உண்டு. யதார்த்தத்திலிருந்து தொடர்பற்ற தன்மை.

ஒரு பத்திரிகை நண்பர் ஒரு முறை சென்னையில் அங்கலாய்த்தார், தமிழ் அரசியல்வாதிகளுக்கும் பாமர மக்களுக்கும் இருக்கும் தொடர்பற்ற தன்மையைப் பற்றி.

இன்றைய இளைஞர்களுக்கு தமது வாழ்க்கையில் முன்னேற என்ன வழி என்பது மட்டுமே பிரச்சினை. அதுவே அவர்களது இலக்கு. அவர்களது பார்வை இப்போது உலகளாவியது. தமிழ் நாட்டுக்கு அப்பால் விரிகிறது, சுய முன்னேற்றத்துக்காக. தமிழ்ப் பற்றோ வேறு எதுவோ அவர்களது agendaவில் இல்லை. இந்த அரசியல் வாதிகள் யாரை ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்றார் அந்த பத்திரிகை நண்பர். இந்த 'disconnect' ஏதாவது ஒரு ரூபத்தில் எல்லா மாநிலத்து எல்லா அரசியல்வாதிகளுக்கும் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால், தமிழ் நாடு விதத்தில் தீவிரமாக முரண்படுகிறது. மத்தியில் கூட்டணி ஆட்சி ஆரம்பித்த நாள்களிலிருந்து, எமது மாநிலக் கட்சிகள் வாய்ப்புக் கிடைத்த மாத்திரத்தில் மந்திரி பதவிக்குப் போட்டி போட்டுக் கொண்டு ஆட்சியில் பங்கு பெறுகின்றன. அதனால், பலவகையில் இலாபம் கண்டிருக் கின்றன. தனி நபர்கள் அடைந்திருக்கும் செல்வாக்கு அளப்பரியது. ஆனால், அது சொந்த லாபத்துக்கான குறுகிய நோக்கிலேயே நடந்த பங்காற்றல் என்று தெளிவாகிவிட்டது.

தமிழ்நாட்டுக்கு வெளியே என்ன நடக்கிறதென்று எவருக்கும் அக்கறை இல்லை. நாட்டைத் தாக்கும் அவசரப் பிரச்சினைகள் என்ன என்பதில் நாட்டமில்லை. அவற்றைத் தமிழ்த் தொலைக்காட்சி சானல்கள் விவாதிப்பதில்லை. தேசிய நோக்கு, தேசப்பற்று என்பவை இன்று காலாவதியான கருத்தாக்கங்கள் என்றாலும், மக்கள் நலன் என்பது கூட அவர்களுக்குக் காலாவதியான கருத்தாக்கமாகப்படுகி றது. பாமர அடிமை ஸாங்கோபான்ஸா சொல்லச் சொல்லக் கேட்காமல், அவனது எஜமானன் காற்றாலைகளை நான்கு கைகள் கொண்ட ராட்சஸர்கள் என்று தாக்கச் சென்றதுபோல இலங்கைத் தமிழர் பிரச்சினை என்கிற அஸ்திரத்தை மாநிலப் பிரச்சினை யாக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார் கள்.யாருக்காக கோஷம் எழுப்புகிறார் களோ அவர்களுக்கு இதனால் ஏதும் இலாபமில்லை என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதனால் யாருக்கு நன்மை என்பது அவர்களுக்கும் சர்வ வல்லமை பொருந்திய ஈசனுக்குமே வெளிச்சம்.

மக்கள் வாக்கு மகேசன் வாக்கு என்றும் ஒப்புக்கொள்பவர்கள் இவர்கள். பின் , இத்தனை பாசாங்குத்தனம் செய்வதற்கு எப்படித் துணிகிறார்கள்? ஸான்கோபான்ஸாவின் எஜமானனுக்கும் [Don Quixote] இவர்களுக்கும் வித்தியாசமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீ திரை விமர்சனம்





'பழைய மொந்தையில் புதிய கள்' என்ற பழமொழியை ஞாபகப்படுத்துவது போன்று 'தீ' படம் வந்திருக்கின்றது.

சன்பிக்சர்ஸ்ஸின் தயாரிப்பில், கிச்சாவின் இயக்கத்தில் சுந்தர்.சி, நமீதா, சாயாஜிஷிண்டே, மனோஜ் கே.ஜெயன், ரம்யா, ஜி.எம்.குமார் போன்றோரின் நடிப்பில் வெளிவந்திருக்கிறது 'தீ' திரைப்படம். நேர்மையான பொலிஸ் அதிகாரியான சுந்தர்.சி மீது அரசியல் வாதிகள் கோ[illegible]ம் கொள்கிறார்கள். சுந்தர்.சியின் நடவடிக்கைகளால் தமது அரசியல் எதிர்காலம் அழிந்துவிடும் என்ற பயத்தில் அவரது குடும்பத்தினரை கொன்றொழிக்கிறார்கள்.

சுந்தர்.சியின் மனைவியும் கோமா [illegible]க்குச் செ[illegible]கிறார். இதனால் காக்கி உடைக்கு கையசைத்துவிட்டு ஒரு அர[illegible] வாதியாக மாறி, தனக்குத் தீ[illegible]கு செய்தவர்களை சுந்தர்.சி வஞ்ச தீர்ப்பதுதான் 'தீ' படத்தின் கதை. முதல் காட்சியிலேயே நிர்வாணமாகத் தோன்றிப் பார்ப்போரை அதிர வைத்திருக்கின்றார் சுந்தர்.சி. எனினும் சில இடங்களில் அவரது நடிப்பு விஜயகாந்தை ஞாபகப்படுத்துகிறது. நமீதா வழக்கம் போலவே கவர்ச்சி மழையில் ரசிகர்களை நனைய வைக்கிறார். ஸ்ரீகாந்த் பாடல்களுக்கான இசையை விடவும் பின்னணி இசையிலேயே அதிக [illegible] செலுத்தியிருக்[illegible]ர். யதார்த்தத்தை மறந்து[illegible]டு ஜனரஞ்சகத் தன்மையை மட்டுமே கருத்திற்கொண்டு இயக்கியிருக்கிறார் கிச்சா. சுந்தர்.சியின் வெற்றிப் படங்களின் வரிசையில் ஒன்றாக இணைந்திருக்கிறது 'தீ'.

# கோபக்கார விஷால்



"சத்தியம்" படத்தின் படுதோல்வியால் துவண்டுபோயிருந்த புரட்சித் தளபதி விஷால் இப்போது புதுத் தெம்போடு 'தோரணை' என்ற படத்தில் நடித்து வருகிறார். இப் படத்தை விஷாலின் அண்ணனான விக்ரம் கிருஷ்ணா தயாரிக்கிறார். இதனால் படப்பிடிப்பின்போது விஷாலும், அவரது அண்ணனும் படு கஞ்சத்தனமாக நடந்துகொள்வதாகக் கூறப்படுகின்றது.

அத்தோடு ஓய்வு ஒழிச்சல் இன்றி இரவு பகலாக படப்பிடிப்பு நடத்தப்பட்டு வருகின்றது. இதுவும் செலவைக் குறைப்பதற்காகவே என்று காரணம் கூறப்படுகின்றது.

தொடர்ச்சியான படப்பிடிப்பால் களைத்துப்போன படத்தின் இயக்குநரான சபா.ஐயப்பன், ஒருநாள் ஓய்வுதேவை என்று விஷாலிடம் கேட்டிருக்கிறார். அத்தோடு தொடர்ச்சியாகப் படப்பிடிப்பை நடத்தினால் படத்தின் தரமும் குறைந்துவிடும் என்றும் கூறியிருக்கிறார். இதைக் கேட்ட விஷால் கோபத்தின் உச்சிக்கே சென்று, இயக்குநரை பளார் என்று அறைந்துவிட்டார். என்னதான் புரட்சித் தளபதியாய் இருந்தாலும் இவ்வளவு கோபம் கூடாதுதான்.*

# இயற்கை ஒலியே இசையாக...



வித்தியாசமான இசை முயற்சிகள் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு பழகிப் போன ஒன்று. அவர் மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு பாடிய "மண்ணில் இந்தக் காதல் இன்றி..." "சத்தம் இல்லாத தனிமை கேட்டேன்...." போன்ற பாடல்கள் சாதனை புரிந்தது மட்டுமன்றி கேட்போரையும் இன்றுவரை வியக்கவைக்கின்றன. அதேபோன்ற இன்னொரு சாதனைக்கும் மலைக்கோவில் என்ற படத்தின் மூலம் தயாராகிவிட்டார் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். இதில் மூச்சை அடக்கிக் கொண்டு பாடாமல் தன்னுடைய பாடலுக்கு இயற்கை ஒலிகளைப் பயன்படுத்தியுள்ளார் எஸ்.பி.பி. அதனால் இந்தப் பாட[illegible] எந்தவொ[illegible] வாத்தியத்தின் ஒலியையும் கேட்க முடியாது. மாறாக நீர் பா[illegible] ஒ[illegible], ஊஞ்சலின் ஓசை, பறவைகளின் கீதம் போன்ற இயற்கை தந்த இசையையே எஸ்.பி.பி. குரலுடன் இணைந்து கேட்கமுடியும். தமிழ் சினிமாவில் இந்தப் பாடல் புதியதொரு திருப்பமாக அமையும் என்று மலைக்கோவில் படத்தின் இயக்குநர் பெஞ்சமின் நம்பிக்கையோடு கூறுகின்றார்.*

# அர்ஜுனின் அடுத்த படம்



'அக்‌ஷன் கிங்' அர்ஜுனின் பெரும்பாலான படங்களின் தலைப்பு மூன்று அல்லது நான்கு எழுத்துகளிலே அண்மைக் காலமாக அமைந்து வருகின்றது. அந்த நியதியை மீறாமல் தன்னுடைய புதிய படத்திற்கும் 'கள்ளன்' என்று நான்கெழுத்தில் பெயரிட்டுள்ளார் அர்ஜுன்.

இத் திரைப்படத்தை சுந்தர்.சி நடித்த 'தீ' படத்தை இயக்கிய கிச்சா திரைக்கதை வசனம் எழுதி நெறியாள்கை செய்யவுள்ளார். கோவை மணி என்பவர் தயாரிக்கிறார். அர்ஜுனுக்கு நாயகியாக யார் நடிப்பது என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. அநேகமாக மும்பையில் இருந்து ஒரு புதுமுக நாயகியை இறக்குமதி செய்வதற்கு அர்ஜுன் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

நாயகி தெரிவுசெய்யப்பட்டதும் படு வேகமாக பட[illegible] 'கள்ளன்'.*

# வருகிறார் சங்கீதா



நீண்டநாள்களாக தமிழ் சினிமாவில் தலைகாட்டாதிருந்த சங்கீதா, தன்னுடைய திருமணத்தின் பின் மீண்டும் கதாநாயகியாகக் களம் இறங்கியிருக்கிறார். செல்வா இயக்கத்தில் ஜீவன் நடித்து வெற்றிபெற்ற "நான் அவன் இல்லை" படத்தின் இரண்டாம் பாகம் வெகு விரைவில் வெளிவரவுள்ளது. இதில் ஜீவனுக்கு ஜோடியாக பல நடி[illegible]களை நடிக்க வைக்க முயற்சித்[illegible]போதும் சில காரணங்களால் அவை கைகூடவில்லை. இப்போது உயிர் புகழ் சங்கீதாவுக்கு அந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது. தன்னுடைய படங்களில் திறமையான நடிப்போடு கவர்ச்சியையும் அதிகமாகக் காட்டி வந்த[illegible] சங்கீதா. எனினும் தற்போது அவருக்குத் திருமணம் முடிந்துள்ளதால் இனியும் அவர் கவர்ச்சி காட்டுவாரா என்பது சந்தேகமே. அந்த சந்தேகத்திற்கு "நான் அவன் இல்லை" படத்தின் இரண்டாம் பாகம் தான் பதில் சொல்லவேண்டும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி முத்திரை வைத்திருப்போருக்கான ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்கள் அந்தந்தச் சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்பட்டுவருகின்றன. எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளதால் இத்திகதிக்கு முன்னர் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறும், அதன்பின்னர் பொருள்கள் விநியோகிக்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


வசீகரத் தோற்றத்திற்கு

**சந்தனாலேப**



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

[illegible]

**'சிவா நறுமணப் பூங்கா'**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்)

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO: A/L250.



**விற்பனைக்கு**

DX 90 Honda மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. (NP mp xxxx -குறைந்தபாவனையிலுள்ளது)

தொடர்பு 0776245267

காலை: 8 மணி - மாலை 8 மணிவரை

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள மொறிஸ் மைனர் 1000 கார் எஞ்சின் கியர்பொக்சுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கே.காங்கேசன், நீர்வேலி தெற்கு.

**STUDY IN INDIA**

**Brindavan College**

affiliated to Bangalore University

B.Sc. Genetics / Biotech / Microbio / Comp. Science

B.B.M. Business Management

B.C.A. Computer Application

B.Com. Commerce + Computer

Co-ordinating office: 285 C-1/1, Stanley Tilakaratne Mw. Nugegoda.

Tel: 0777-317043, 011-4580270


## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18★12★1952

மறைவு 23★03★1998

அமரர்

**க.பாலசுந்தரராஜா**

(ஓய்வுபெற்ற எழுது வினைஞர் (B.Sc.))

திதி: ஏகாதசி 22.03.2009

ஆண்டுகள் பதினொன்று கடந்த போதிலும்
எம் மனக் கண் முன் நிழலாடும் எம்
அன்புக் கணவரின் துயரங்கள் மறையவில்லை
வாழும் காலங்கள் வரை உங்கள்
ஞாபகம் எம் மனதை விட்டகலாது

தம்பலத்தனை,
துன்னாலை வடக்கு.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
அன்பு மனைவி பா.பாஞ்சாலி

# United Nations Development Programme

U N D P

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

UNDP's programme portfolio in Sri Lanka includes the UNDP Support to Mine Action Project. The Project supports the Government to coordinate and manage Mine/unexploded ordnance clearance and other Mine actions in the North and East of Sri Lanka. The UNDP support to Mine Action Offices (DMAO) in Jaffna are looking for experienced and energetic candidates to fill the following vacancies. The Driver will report to the Mine Action Officer at the District Mine action office fna & The Quality Assurance Assistant will report to the Mine Action Officer at the District Mine action office in Jaffna.

## VACANCIES

### Position 1. Driver Duty Station Jaffna 1 position

**Following an initial period of orientation, the duties and responsibilities of the Quality Assurance Assistants are as follows:**

- Support the DMAO in the duty station.
- Drive office vehicles to transport authorized personnel to official meetings and work sites, and to deliver various items to other locations.
- Be responsible for the day to day maintenance of the assigned vehicle(s).
- Perform minor vehicle repairs and arrange for routine services and other major repairs.
- Keep a daily log of official trips, mileage, fuel consumption, oil changes etc.
- Follow official UN security guidelines.
- Follow UNDP guidelines relating to official travel, use of vehicles and accidents.
- Use HF and VHF radios in accordance with UN guidelines.
- Supervise the work of other UNDP drivers if required.
- Any other duties as directed by the Administration & Finance Assistant and Mine Action Officer in duty station.

**The successful candidate should possess the following qualifications:**

- General Certificate of Education O/L.
- Hold a valid Sri Lankan driving license - category A (motor coach).
- Good knowledge of Sri Lankan geography.
- Sound knowledge of Sri Lankan road rules and regulations.
- Be able to operate a VHF radio and a HF radio.
- Minimum 5 years experience as a professional driver.
- Minimum 1 years experience as driver with the United Nations is desirable.
- Be able to work in a multi-cultural environment.
- Good verbal and written knowledge of English, Tamil and Sinhala.

### Position 2. Quality Assurance Assistant Duty Station Jaffna 2 positions

**Following an initial period of orientation, the duties and responsibilities of the Quality Assurance Assistants are as follows:**

- Support the Government Agent (GA) to plan, implement, monitor and evaluate Sri Lanka's Mine Action Programme activities in accordance with the NSCMA and MNBEID policies, the global and national Mine Action Standards and the standard operating procedures of the DMAO. These activities include mine and UXO clearance; strengthening links with agencies supporting resettlement and recovery, mine risk education and survivor assistance; technical backstopping; and providing advisory services on Mine Action operations and results to GoSL, UN agencies, donor governments and other stakeholders.
- Work in close collaboration with District Mine Action Office (DMAO) staff to carry out on behalf of the GA, the quality assurance and quality control (QA and QC) operations applicable to mine action surveys, mine/UXO clearance and Mine Risk Education.
- Conduct Post-Clearance Impact Assessments (PCIA).
- Support the Information Management System on Mine Action (IMSMA) functions through accurate and timely data gathering, data entry and reporting relating to mine/UXO clearance sites and Mine Risk Education.
- Work in close collaboration with the DMAO team to develop strategies and work-plans for mine action activities in the district.
- Support certifying satisfactory completion of mine action quality assurance/ completion.
- Perform any other duties assigned by the GA, UNDP/PMU, the DMAP, NSCMA and the MNBEID.

**successful candidate should possess the following qualifications:**

- General Certificate of Education – Advanced Level
- A minimum of three years work experience in mine/UXO clearance, preferably at a supervisory level.
- Strong applied skills in planning and project administration.
- Ability to organize work and collaborate effectively with a wide range of teams, including individuals of different national and cultural backgrounds.
- Capacity to conduct strenuous field work and perform under pressure toward meeting strict deadlines.
- Excellent interpersonal skills.
- Background knowledge of and work experience in areas affected by mine/UXO contamination.
- Good ability to speak and write in English with fluency in the Sinhala/ Tamil language(s).
- Working knowledge of email, word-processing and the use of spread sheets and databases.

**For full terms of reference please visit the UNDP Sri Lanka website "vacancies".**

**http://www.undp.lk**

Candidates are invited to send an updated CV containing details of Educational and Professional qualifications and work experience with the names of two non-related referees and a contact telephone number during working hours. Closing date for the position of Driver is Friday 3rd April 2009& the applications for the position Quality Assurance Assistant should be sent in on or before the Friday 10th of April 2009. Applications should be forwarded to the Deputy Resident Representative (Operations) to the address given below. Please indicate the position applied for on the top left hand corner of the envelope or in the subject box of the email. Qualified female candidates are encouraged to apply. Only short listed candidates will be contacted for an interview.

## The United Nations Development Programme

**202-204, Bauddhaloka Mawatha, Colombo 7. Email: vacancy.lk@undp.org**

Digitized by Noolaham Foundation

# அன்றாட உணவு மூலமே இயற்கையான சுகநலம் கிட்டும்
## ஆயுள்வேத நடைமுறை ஊடாக அதைக் கட்டியெழுப்பும் முயற்சி பெரும் பயன்தரும்

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இந்தியாவில் நடைபெற்ற உலகளாவிய ரீதியிலான 3 ஆவது ஆயுர்வேத மாநாட்டில் அலசப்பட்ட விடயங்கள், சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் என்பவற்றின் அடிப்படையில் சித்த ஆயுர்வேத ஆய்வாளர்களது ஆராய்ச்சி முயற்சிகளுக்கு உதவக்கூடிய வழிமுறைகளில் முதலிரண்டைச் சென்றவாரம் குறிப்பிட்டிருந்தேன். அவற்றில் ஏனையவை குறித்து இங்கு நோக்குதல் பயனுடைத்தாகும்...

**03. இயற்கைச் சுகாதாரமும் ஆயுர்வேதமும்**
(NATURAL HEALTH ISSUES AND AYURVEDA)

இயற்கை சுகாதாரமென்பது ஒருவரது அன்றாட வாழ்வில் உட்கொள்ளும் உணவு மூலமாகப் பெறப்படும் அல்லது கட்டி யெழுப்பப்படும் சுகாதாரத்தையே சுட்டி நிற்கின்றது. இயற்கையான சுகாதாரத்தை ஆயுர்வேத நடைமுறைகளுக்கு ஊடாக எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதனையும், அதனை ஒவ்வொருவரும் எவ்வாறு விருத்தி செய்து கொள்ளலாம் என்பதில் ஆயுர்வேதம் சொல்லும், சொல்ல நினைக்கும் கருத்துக்களை ஆய்வுரீதியாக அனுபவரீதியாகவும் அலசிப்பார்க்கக் கொடுக்கப்பட்ட களம் இது.

இயற்கைச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஆயுர்வேதத்தின் வழிமுறைகளொன் றும் பரம இரகசியங்கள் அல்லவே. அவ்வாறாயின் நீண்டநாள் மௌனத்தைக் கலைத்து சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் தமது ஆய்வுத்திறனையும் அனுபவத்தையும் உள்வாங்கி இயற்கைச் சுகாதாரத்தை மாறிவரும் எமது சூழலில் எங்ஙனம் பேணலாம், மேம்படுத்தலாம், என்பது பற்றி தெரிவிக்க முன்வருவீர்களா? உதயனின் ''இந்தப் பகுதி'' உங்களுக்காகக் காத்திருக்கின்றது. எளிய இலகு முறைகளை உங்களது அனுபவத்துடன் கலந்து எம் இனிய மக்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்! சுதேச வைத்தியமும் ஊடகத்துறையினை அச்சாணியாகப் பிடித்துத் தகவல் பரிமாற்றத்திற்குள் புகுந்திட வேண்டும். காலம் கனிந்துவரும் இப் பொன்னான வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்களேன்.

**04. தகவல் தொழிநுட்பம் மற்றும் உயிர் தொழிநுட்பத்துடன் ஆயுர்வேதம்**
(INFORMATION TECHNOLOGY/BIO-TECHNOLOGY AND AYURVEDA)

ஊடகத்துறையினுள் நுழைவதுபோல தகவல் தொழில்நுட்பத்தினதும் உயிர் தொழில்நுட்பத்தினதும் பயன்பாட்டை ஆயுர்வேதம் பெற்றிட வேண்டும். இவ்விரு தொழில்நுட்பங்களையும் எங்ஙனம் ஆயுர்வேதத்தில் பயன்படுத்த முடியும்? இவற்றின் பயன்பாட்டை ஆயுர்வேதத்தை மேம்படுத்த எங்ஙனம் உபயோகித்துக் கொள்ளலாம்? இதற்கான ஆய்வுகள் நடந்தாக வேண்டும்.

தகவல் தொழில்நுட்பத்தின் மூலமாக அனைத்துத் துறைகளும் விருத்தியடையும் போது ஆயுர்வேதத்தை மட்டும் பாரம்பரிய மருத்துவமென்பதால் ஒதுக்கிவிட முடியாது. தகவல் தொழில்நுட்பத்தின் மூலமாக ஆவணப்படுத்தப்பட்ட சுதேச வைத்திய முறைகளை உலகின் எப்பகுதியிலிருந்தும் பெறுவதற்கு இதன்மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக உலகளாவிய ரீதியில் நடைபெறும் சித்த ஆயுர்வேத ஆய்வு மாநாடுகளெல்லாம் தகவல் தொழில்நுட்பத்தினாலேயே இணைக்கப்பட்டுள்ளமை இதன்மூலமாகக் கிடைக்கப்பெற்ற வரப்பிரசாதமாகவே கருதவேண்டியுள்ளது. இவ் வளவு நிறைந்த பயன்பாடுடைய தொழில் நுட்பம் அனைத்து வைத்தியர்களுக்கும் கிடைக்க வழிசெய்யப்படவேண்டும். சாதாரணமானவர்கள் கூட கணனி வலையமைப்பை பயன்படுத்தும் காலத்தில் இருக்கும் நாங்கள், சுதேச வைத்தியத் துறையையும் மேலைத்தேய மருத்துவத்தினையும் இணைக்கும் உறவுப் பாலமாக இருக்கும் தகவல் தொழில் நுட்பத்தை அதன் வசதிகளை அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாகச் செய்தல் இம் மருத்துவத்துறைகளில் மறுமலர்ச்சியை நிச்சயமாக ஏற்படுத்தும். இதன் பொருட்டு முதலில் அனைத்து வைத்தியர்களுக்கும் கணனியின் பயன்பாடு பற்றியும் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு பற்றியும் முழுமையாகப் பயிற்சியளிக்கப்பட்டு பயன்படுத்த வழிசமைத்துக் கொடுக்கவேண்டும்.

உயிர் தொழில்நுட்பவியலில் பல வகையான ஆய்வுகள் ஆயுர்வேதத்தை மையப்படுத்தி நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எந்தத் துறைக்கும் பொருத்தப்பாடான இத் தொழில்நுட்பம் மூலிகைகளை மருந்தாகப் பயன்படுத்தும் மருந்துவத்துறைக்கு மிகவும் பயன்பாடாக இருக்கும். நோயை இனங்காணுதலிலிருந்து, மூலிகைகளின் குணங்குறிகளை அறிவதும், அவற்றினைப் பயன்படுத்தி செய்யப்படும் மருந்துகள், அவற்றின் செயற்பாடு, பக்க விளைவு என்பவற்றை இத் தொழில்நுட்பத்தின் மூலமாகக் கண்டு கொள்ளமுடியும்.

**05. ஆயுர்வேதத்தில் புதிய ஆராய்ச்சி முறைகள்**
(MODERN RESEARCH METHODS FOR AYURVEDA)

சித்த ஆயுர்வேத கொள்கைகள் தத்துவங்களுடன் புதிய ஆராய்ச்சி முறைகளுக்கூடாக இம் மருத்துவத்தில் புதுமைகள் செய்ய இங்கே வழி கிடைக்கும். இக் காலத்துச் சித்தர்களும் சளைத்தவர்களல்லவே என்பதை இப் பகுதி மூலம் புதிய ஆய்வுமுறைகள் மூலமாக எடுத்துச் சொல்லலாமே!

அதற்காக, புதுமை செய்வதென மேலைத்தேய வைத்திய முறைகளுக்குள் வரம்புமீறிச் சென்றுவிடக்கூடாது. அந்தந்த வைத்திய மரபுகளிலிருந்து எள்ளளவேனும் பிசகாது அந்தந்த வைத்திய முறைகளுக்குப் புத்துணர்ச்சி கொடுக்கும் ஆய்வுகளுக்கு ஏனைய விஞ்ஞானத் துறைகளுடன் கூட்டுச் சேர்ந்து முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். வசதியும் வாய்ப்பும் இருந்த இடத்தைத் தேடியோடி வராது. நாமாகத்தான் முயற்சிக்க வேண்டும். முயற்சி என்றுமே திருவினையாக்கும். புதியன புகுதல் அது ஆராய்ச்சி முடிவுகளாயின் ஆயுர்வேத வைத்திய முறைகளுக்கு இன்னும் சிறப்பைத் தரும்.

**06. மூலிகை - கனிம மருந்துகளின் செயற்திறனும் பாதுகாப்பும்**
(SAFETY AND EFFICIENCY OF HERB MINERAL DRUGS)

சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் மூலிகைகளுடன் கனிம உலோகங்களையும் தூய்மைப்படுத்திப் பயன்படுத்துவது வழமையானதொன்றே. இவ்விதமாகத் தயாரிக்கப்படும் மருந்துகளின் . செயற்றிறனைக் காலத்துக்குக் காலம் பரீட்சித்துப் பார்த்தல் அவசியமாகும். வெறுமனே மூலிகைகள் என்றால் அவற்றினை ஒன்றாகக் கலக்கும்போது ஒவ்வாமைத் தன்மை எழும் வாய்ப்புக்கள் அரிதாகக் காணப்படுகிறது. ஆனால் கனிய உலோகங்களைப் பயன்படுத்தும்போது ஆயுர்வேதத்தில் பரிந்துரைத்த கோட்பாடுகளுக்கமைவாகவே முன்பு பரிந்துரைக்கப்பட்ட வகையிலேயே பயன்படுத்த முடியும்.




மாறாகப் புதிதாக உலோகங்களைக் கலந்து மருந்துகளைச் செய்ய முயற்சித்தால் ஆய்வின் மூலமாக அந்தக் கலவையினது நம்பகத்தன்மை, கலவையில் பயன்படுத்தப்படும் கனிம உலோகங்களில் ஏற்படும் இரசாயனத் தாக்கம், பக்க, பின்விளைவுகள் என அனைத்தையும் பரீட்சித்து ஆய்வறிக்கையாகக் கொடுக்கப்படல் வேண்டும். இங்கே மருந்துகளைக் கலக்கும்போது மனிதனின் உடலில் ஏற்படும் தாக்கம் அதற்கான பாதுகாப்பு என்பன கண்டறியப்பட வேண்டும். இரசாயனச் சேர்க்கைகளின் ஒத்த - ஒவ்வாத தன்மை முழுவதுமாகவே அறியப்படவேண்டிய தேவையெழுகின்றது. மருந்துகளின் பயன்பாடு உள்ளும் வெளியிலும் என்றாலும் இரசாயன உலோகங்களின் பயன்பாடு இருப்பதனால் இரசாயன சேர்க்கையால் எழக்கூடிய தாக்கத்தின் பின் விளைவு கண்டறியப்படவேண்டும்.

**07. பஞ்சகர்மா மற்றும் அஷ்டாங் ஆயுர்வேதம்**
(PANCHAKARMA AND ASHTANG AYURVEDA)

**08. வாழ்க்கை முறை முகாமைத்துவம்**
(LIFE STYLE MANAGEMENT)

இயற்கையோடிணைந்த எமது வாழ்க்கை முறையும் அதனது முகாமைத்துவமும் இங்கே முன்னிலைப்படுத்தப்படுகின்றது. மாறிவரும் சூழலுக்கேற்ப எமது வாழ்க்கை முறையினை முகாமைப்படுத்துவது மிக மிக அவசியமானதொன்றாகும். உணவுப் பழக்க வழக்கத்திலிருந்து, செயற்பாடு, எண்ணம் - உளவியல் சார்ந்த, உறவு முறைகள், தனி மனித, குடும்ப சுகாதாரம் இவ்வாறாகப் பல வற்றை இங்கே நோக்கலாம்.

**09. புதிய மருந்துகளின் உற்பத்தி**
(NEW DRUG DEVELOPMENT)

புதிய மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான ஆய்வு இது. புதிய மருந்துகளின் பயன்பாடு கிளினிக் ஆய்வின் மூலமாக அதன் செய்திறனை நிரூபித்தல், பக்கவிளைவுகள் பற்றிய ஆய்வு, மனிதருக்குள் பரீட்சிப்பதற்கு முன்னர் உலோகக் கலவைகளின் சேர்க்கையிருந்தால் பரீட்சிப்பதற்காகப் பயன்படும் வெள்ளெலிகளில் (சுண்டெலிகள்) இம் மருந்துகளின் தாக்கம் என்பனக் கண்டறியப்பட வேண்டும். அதற்கான அங்கீகாரம் என்பனவும் இவற்றுள் அடங்கும்.

**10. மூலிகைத் தாவரங்களின் உற்பத்தி, பாதுகாத்தல் மற்றும் பதப்படுத்தல்**
(CULTIVATION, CONSERVATION AND PROCESSING OF MEDICINAL PLANTS)

எங்களூரிலே கிடைக்கக்கூடிய மூலிகைத் தாவரங்களின் உற்பத்தியை அதிகரிப்பது அவசியம். தென்பகுதியிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வரவழைக்கப்படும் மூலிகைகளின் தேவையை இங்கே உற்பத்தி செய்துபூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும். இந்த ஆண்டிலிருந்து இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட 44 வகையான மூலிகைகளின் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது. இவற்றை உள்ளூரிலேயே உற்பத்தி செய்ய ஊக்குவிப்பது ஒரு காரணம்.

அருமை பெருமையாகக் கிடைக்கும் மூலிகையினங்களை இனங்கண்டு, பாதுகாத்தல் அவசியமாகும். இவற்றை ''மூலிகை வங்கி'' யில் வளர்த்து மூலிகை இனங்கள் அழிவுறாது பாதுகாத்துக் கொள்ளலாம். மேலும் மூலிகைகளைப் பதப்படுத்தலும் முக்கியத்துவம் பெறுகின்றது. மூலிகைத் தோட்டங்கள் அமைத்தல், ''மூலிகைகளுக்கான வங்கி''யினை உருவாக்குதல், மூலிகைகளைப் பதப்படுத்தி மருந்து உற்பத்தியை உள்ளூரிலேயே ஊக்குவித்தல் இவையனைத்துக்குமான ஆய்வுக் கட்டமைப்பு அவசியம் உருவாக்கப்படவேண்டும்.

மூலிகைகளை உற்பத்தி செய்தலில் அவற்றின் இனப்பெருக்கம், அவற்றின் பாகுபாடு, இனங்காண்பதற்கான ஆழிகள் (KEYS) மூலிகையினங்களின் பரம்பல் (DIVERSITY) அவற்றின் கிடை தன்மை இவ்வாறாக மூலிகைகள் பற்றிய ஆய்வுகள் விரிவுபட்டுச் செல்லும். இந்த ஆய்வுக்கு சித்த ஆயுர்வேதத்துறையும், விஞ்ஞான பீடத்தின் தாவரவியல்துறை, விவசாய பீடம் என அனைத்துத் துறைகளின் இணைப்பு அவசியமானதாகும். விரைந்து செய்ய வேண்டிய ஆய்வாகவும் இது இருக்கின்றது. போர்ச்சூழலில் சிக்குண்டு, இயற்கையின் கோரதாண்டவத்தில் நசிபட்டும் அரிய பல மூலிகைகள், மூலிகை மரங்கள் முழுவதுமாகவே அழிவுறும் நிலை தோன்றியுள்ளது. மரத்தை வெட்டி, அடுக்கி, நிறுத்துக் காசாக்குபவருக்கு மூலிகை மரத்தின் (சில வகை மூலிகை மரங்கள் ஒன்று மட்டுமே யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கின்றது) மகிமை தெரிய வாய்ப்பில்லை. அவருக்கு ''நிஷா'' கொடுத்த ஓசிக் காசு. ஆனால் விற்கும்போது அதே (அறா) விலைதான். சமூகத்தின் உதவியுடன் இம் மூலிகைகளைப் பாதுகாக்க வேண்டும். தேவை கருதின் சட்டத்தின் உதவியைக் கூடப்பெற வேண்டும். இவை முழுமையாக அழிவுக் குள்ளாகும் மூலிகை மரங்கள். தமது சந்ததியைக் காப்பாற்ற நினைக்கும் எவரும் இவற்றைப் பதிசெய்து அல்லது இருக்கின்ற இனப் பெருக்க முறைகளைப் பயன்படுத்தி, அதில் ஆய்வுசெய்து அழிவிலிருந்து காப்பாற்றலாம்.

**11. ஆயுர்வேதத்தில் சத்திரசிகிச்சையின் பயன்பாடு**
(SURGICAL PRACTICES IN AYURVEDA)

**12. ஆயுர்வேதமும் உள சுகாதாரமும்**
(MENTAL HEALTH AND AYURVEDA)

**13. ஆயுர்வேதத்தினை ஊக்குவித்தல், நோயை வருமுன் காத்தல், மற்றும் குணப்படுத்தல்**
(PROMOTIVE, PREVENTIVE AND CURATIVE ASPECTS OF AYURVEDA)

**14. தாவர மற்றும் விலங்கு நோய்களுக்கு ஆயுர்வேத சிகிச்சை**
(AYURVEDA TREATMENT FOR PLANT AND ANIMAL DISEASES)

இங்கே சித்த மருத்துவத்துறையும் விவசாய பீடமும் முழுமையாக இணைந்து ஆய்வு செய்யலாம். மூலிகைகளின் மருத் துவ இயல்புகள் பற்றிய அறிவு சித்த வைத்தியர்கள் பக்கமிருந்தும் தாவர விலங்கு நோய்கள் பற்றிய அறிவு விவசாய பீட பக்கமிருந்தும் கலக்கும்போது சிறந்ததொரு ஆய்வுக்கான வழி கிடைக்கும்.

''பூனைக்கு யார் மணிகட்டுவது'' என்பதிலேயே நம்மவர்கள் காலத்தைச் செலவழிப்பதை விடுத்து, அந்தந்தத் துறை சார்ந்தவர்கள் இணைந்து செயலாற்ற வாய்ப்புக் கொடுக்கப்படவேண்டும். இங்கேயும் எதுவும் எம்மைத்தேடி வராது. நாமாகத் தான் தேடிப் பெறவேண்டும்.

தாவரப் பயிர்களில் பிரச்சினையாக இருக்கும் பீடைகள், குறிப்பாக நோய்களைக் கட்டுப்படுத்த அசேதன இரசாயனங்களுக்கு மாற்றீடாக சேதன விவசாயத் தின் கருவிகளாக மூலிகைகளைப் பயன்படுத்தி ஒரு சிலவற்றை (பீடைகளை) கட்டுப்படுத்திய நிலையில் இது பற்றி ஆய்வினை விரிவுபடுத்த இருதுறைகளும் இணைதல் சாலச்சிறந்தது.

**15. ஆயுர்வேதமும் சுயநோயெதிர்ப்பும் மற்றும் சிதைந்தழியும் குறைபாடும்**
(AUTO IMMUNE AND DEGENERATIVE DISORDERS AND AYURVEDA)

**16. குழந்தை மற்றும் மகப்பேறு சுகாதாரம்**
(CHILD AND MATERNAL HEALTH)

**17. பாலியல் கல்வியும் அது தொடர்பான விடயங்களும்**
(SEX EDUCATION AND OTHER ASPECTS)

**18. நோய் தீவிரத்தன்மையும் பொது சுகாதாரமும்**
(EPIDEMICS AND PUBLIC HEALTH)

மேலே என் அறிவுக்குட்பட்ட தலைப்பு களை மட்டும் அந்தந்தத் துறைகளைச் சம்பந்தப்படுத்தி விரிவாக விளக்கியுள்ளேன். ஆய்வுக்கென இவ்வளவு விடயங்களும் இருக்கின்றன. அதேநேரத்தில் ஆய்வு செய்வதற்கான நிதி உதவிகளும் எமக்குக் கிடைக்க இருக்கின்றன. குறிப்பாக ''இயூரோவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதி''யினைக் கூறலாம். இது இயூரோ்வில் நிறுவனத்தினால் எந்த வகையான எவர் செய்யவிரும்பும் ஆராய்ச்சிக்கான நிதியாகும். எமது சமூக, பிராந்திய அபிவிருத்திக்கான சிறந்த எந்தவொரு ஆய்வுக்குமான நிதியாக இதனை உருவாக் கியிருக்கிறார்கள். மேலதிக விவரங்களுக்கு இயூரோவில் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

ஆய்வுக்கான தலைப்பைத் தங்களிடம் இருக்கும் வளத்தை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்து சிறந்த ஆய்வினை மேற்கொண்டு நவீன சித்தர்களின் ஆய்வின் முடிவுகளும் பனைஓலை ஏட்டிலும் கணனி ஏட்டிலும் எழுதிவைக்கப்பட வேண்டும். பனை ஓலை ஏட்டின் நம்பகத் தன்மையைக் கணனி ஏடு தருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

(வளரும்)



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமங்கலீ......

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

பொன்னம்மாவின் முன்னால் போடப்பட்டிருந்த வாழை இலையில் பிசைந்து விடப்பட்டிருந்த சோறு அப்படியே கிடந்தது. அவள் தன்னை மறந்த நிலையில் எங்கோ பார்த்த படியிருந்தாள். எவ்வளவு நேரந்தான் அப்படியிருந்தாளோ அவளுக்கே தெரியாது. உணவைக் கண்டால் அவளுக்கு வெறுப்பாக இருந்தது. தொண்டைக்குள் ஏதோ இருந்து கொண்டு உணவை உட்செல்ல விடாமல் தடை செய்வதைப் போன்றே ஒரு பிரமை. அவளுக்குப் பசியே எடுக்கவில்லை.

ஊரில் யாரோ இறந்திருக்க வேண்டும். எங்கோ பறைமேளம் கேட்டுக் கொண்டிருந்தது. பொன்னம்மா இடியேறு கேட்ட நாகம் போலத் தவிக்கிறாள். நெஞ்சு வேகமாகப் படபடக்கிறது. இன்னும் சில நாள்களில் அவளுடைய வீட்டிலும் இதயத்தைப் பிளக்கும் அந்த ஓசை கேட்கப் போகிறதா?

பொன்னம்மாவின் முகம் பயங்கரமாக மாற மனதிற்குள் ஒரு செத்தவீடு நடந்து ஓய்கிறது.

எந்த நிமிடத்தில் அந்தப் பயங்கரம் நிகழ்ந்து விடுமோ வென்ற தவிப்பு மலை போல் வளர்ந்து அவளது நெஞ்சை அடைத்துக் கொண்டு பெருஞ் சுமையாக்க கனத்தது.

பொன்னம்மா படுக்கையிற் புரண்டு கொண்டிருந்தாள். இரவில் படுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகப் படுத்தாளே தவிர, அவள் படுத்தாலும் படுக்காவிட்டாலும் ஒன்றுதான். பல நாள்களாக நித்திரையில்லாததால் அவளது கண்கள் சிவப்பேறி மடல்கள் வீங்கியிருந்தன.

கலைந்திருந்த கூந்தலும், செம்மை படர்ந்த கண்களும், அழுக்குப்படிந்த உடையும், அவளின் பைத்திக்காரத் தோற்றத்தை மிகைப்படுத்தின.

அவள் ஏக்கத்துடன் படலையை நோக்கியபடியே இருந்தாள்.

அருகில் இருந்த கைவிளக்கு காற்றில் அசைந் தாடுகிறது. நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு எங்கோ சாமக்கோழி ஒலி எழுப்புகிறது.

அயலூருக்குச் சென்ற சதாசிவம் ஏன் இன்னும் திரும்பவில்லை? மனைவி வீட்டில் தனியாக இருக்கப் பயப்படுவாளே என்று, பொழுது மங்கிவிட்டால் வீட்டை விட்டுக் கிளம்பாத சதாசிவத்தை இன்று வெகு நேரமாகியும் காணவில்லை.

பக்கத்திலிருந்த பனை வடலிக்குள் பாம்பொன்று பயங்கரமாகக் கொறித்துக்கொண்டிருந்தது.

திடீரென்று பேரிரைச்சலுடன் வீசிய காற்று அருகிலிருந்த தீபத்தின் ஒளியைத் துடிக்க வைத்து அணைத்து, இருளைக் கவித்தது.

பொன்னம்மாவின் நெஞ்சு ஒருகணம் விறைத்துப் போயிற்று.

''ஒரு வேளை அவருக்கு ஏதேனும்...'' இதயத்தைப் பிசைந்து எழுந்த எண்ணங்களைப் பொன்னம்மாவால் தாங்க முடியவில்லை.

''ஆயாக்கடவைப் பிள்ளையாரே, நீதான் அவரைக் காப்பாற்றவேணும்.'' கண்களை மூடிக்கொண்டு பொன்னம்மா வேண்டுதல் செய்கிறாள்.

படலை கிறீச்சிடும் சத்தம். கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு அவள் பார்க்கிறாள். இருளில் மங்கலாகத் தெரியும் உருவம்... சதாசிவம் தான்.

பொன்னம்மாவின் நெஞ்சிலிருந்து நிம்மதியான பெருமூச்சுக் கிளம்புகிறது.

பயம் என்பது ஒரு பிசாசு; அது மனதிற்குட் புகுந்துவிட்டால் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் தனக்குச் சாதகமாக்கி, விழுங்கி ஏப்பம் விட்டு விசுவரூபம் எடுத்துக் கொண்டேயிருக்கும்.

பொன்னம்மாவைக் கலங்கவைக்கும் வகையில் அடுத்த நாளும் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

சற்று முன்பு அவள் கேட்ட பயங்கர ஓசை.... 'லொறி'யின் சக்கரங்கள் அவளது நெஞ்சைச் சிராய்ப்பது போலச் சடுதியாய்த் தெருவை உராசி நிறுத்தப்பட்டு.... 'ஐயோ! இப்பதானே அவரும் தெருவுக்குப் போனவர், ஒருவேளை சக்கரங்களுக்குள் சிதைந்து இரத்தக் களரியாகி....' பொன்னம்மா தெருவை எட்டிப் பார்ப்பதற்கே அஞ்சினாள்.

ஒரு மாதத்திற்கு முன்பு பக்கத்து வீட்டுச் செல்லக்குஞ்சாச்சி 'காரில்' அடிபட்டு அந்த இடத்திலேயே செத்துப்போனது அவளின் நினைவில் வந்தபொழுது நெஞ்சுக்குள் ஏதோ செய்தது.மறுகணம் பொன்னம்மா தெருவை நோக்கி ஓடுகிறாள்.

நிதானம் இழந்துவிட்ட அவளது கால்களைப் பாதையிலே கிடந்த கல்லொன்று பதம்பார்த்து விடுகிறது. அவள் நெஞ்சு அடிபட நிலத்திலே சாய்ந்தாள்.

''ஒரு மயிரிழை தப்பிவிட்டுது, இல்லாட்டில் சதாசிவத்தை உயிரோடை பாக்கேலாது.'' யாரோ வழிப் போக்கன் கூறியது பொன்னம்மாவின் காதுகளிலும் விழுந்தது.

பொன்னம்மாவின் உணர்ச்சிகள் வெடித்துப் பெரு மூச்சாகப் பிரதிபலிக்கின்றன; அவளது தலை சுற்றுகிறது. கண்கள் இருட்டடைகின்றன. நெஞ்சுக்குள் பலமான வலியொன்று ஏற்படுகிறது. அவளால் எழுந்திருக்க முடியவில்லை.

நிலத்திலே விழுந்து கிடந்த பொன்னம்மாவைச் சதாசிவம்தான் தூக்கிச் சென்று கட்டிலிலே கிடத்துகிறார்.

நான்கைந்து நாள்கள் கழிகின்றன.

பொன்னம்மா புரண்டு படுக்கிறாள். அவளால் அந்தச் சோக நிகழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. சதாசிவத்தின் உடலை யாரோ துணியால் மூடிவிட்டார்கள். அயலவர்களின் ஒப்பாரி அந்தச் சுற்றுவட்டாரத்தையே துக்கத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தது. சதாசிவத்தின் விசுவாசமான உழைப்பாளி ஒருவன் கலங்கிய கண்களுடன் பாடை கட்டுவதில் முனைந்திருந்தான்.

பொன்னம்மாவின் கண்களில் மட்டும் ஏன் கண்ணீர் துளிர்க்கவில்லை? அழுதழுது கண்ணீர் வற்றிவிட்டதா? அவள் கணவனின் உடலையே வெறித்துப் பார்த்த வண்ணம் இருந்தாள்.

நெற்றியிலே கசிந்த வியர்வையில் அவளணிந்திருந்த குங்குமம் கரைந்து வழிந்தது. அரக் கத்தனமாக அவளின் கூந்தலை யாரோ அவிழ்த்து விட்டார்கள். பொன்னம்மா இனிமேல் சபை சந்திக்கு உதவாதவள். அறுதலி.

யாருமே இல்லாத வரண்ட பாலைவனத்தில் தான் தன்னந்தனியனாக விடப்பட்டுக் கணவனையே நினைத்துக் கதறிக் கொண்டிருப்பது போல அவளுக்குத் தோன்றியது.

யாரோ அந்திமக் கிரியைகள் செய்கிறார்கள். பாடை நகர்கிறது; பறைமேளம் நாராசமாய்க் காதில் விழுகிறது.

பொன்னம்மா கதற முயற்சிக்கிறாள்.

''ஐ....! ஐயோ.....!''

கண்ணீர் கருமணிகளை அறுத்துக் கொண்டு பிரவகித்துப் பாய்கிறது. நெஞ்சுக்குள் ஏதோ கிழிந்து சிதறுவதைப்போல இருந்தது. உலகமெல்லாம் இருண்டு வந்து சூனியப் பெருவெளியாகியது....

''பொன்னம்மா! எணை பொன்னம்மா! என்ன குளறுகிறாய்? கனாக் கண்டனியோ?''

சதாசிவம் அவளின் தோள்களை உலுப்புகிறார்.

பொன்னம்மா இனிமேல் விழித்துப் பார்க்க மாட்டாள். அவளது தவிப்பு அடங்கிவிட்டது.

அவள் மேல்நோக்கிப் பறந்து கொண்டிருந்தாள். என்றுமில்லாத புத்தொளி அவளது வதனத்தில் நிறைந்திருந்தது. எங்கிருந்தோ மங்கல கீதங்கள் அவளது காதுகளில் விழுந்தன. வானத்திலிருந்து சொரிந்த நறுமலர்கள் அவளுக்கு வரவேற்புக் கூறின.

''பொன்னம்மா....!'' உலகத்துச் சோகமெல்லாம் இழையோடிய சதாசிவத்தின் அலறல் நிராதரவாய் ஒலித்துக்கொண்டிருந்தது. ✱

*(நன்றி: கால தரிசனம் - சிறுகதைத் தொகுதி)*

## மூன்றாம் பிறை முழுநிலாவாவது எப்போது?

மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் படித்து தூங்கிய என்னை
தினம் தினம் என் அம்மா எழுப்பி படுக்க அழைக்கும் போதுதான்
ஒளி வீட்டை நிரப்புகிறது தூக்கம் என்னை அரவணைக்கிறது
ஒளி ஒழித்து விளையாடுகிறது எம் பிரதேசத்தில்

ஒளி என்பது, விஞ்ஞானத்தின் விந்தைமிகு அறிவா?
மெய்யியலின் கூற்றாகிய ஞானத்தின் இருப்பிடமா?
இறையியலின் வெளிப்பாடாகிய அவதாரத்தின் ஒளியா?
இவை எல்லாம் ஒன்பது வயதாகும் எனக்குப் புரியாதது

புரிந்தது எல்லாம் மின்சாரத்தின் வெளிப்பாடாகிய ஒளியே!
அது எனது கல்விக்கு மிக தேவையானது என்பதே
ஆனால் நான் வீட்டில் படிக்க தொடங்கும் போதெல்லாம்
ஒழித்து விளையாடுகிறது கண்ணாமூச்சி விளையாட்டு

என் தந்தையிடம் இது குறித்து வினாவினேன்
தன் இள வயதிலும் இதே நிலைதானாம்
96 இல் மின்னத்தொடங்கி மூன்றாம் பிறை கண்டார்.
2005 இல் பூரணை தென்பட்டதுதான், தேயத்தொடங்கியது

இப்போது தேய்ந்து எனது கல்விக்கு இடையூறாகிற்று
சில பெற்றோர் தத்துவம் கதைப்பர்
படிக்கும் பிள்ளை எப்படியும் படிக்கும் என்று
என் கேள்வி எனக்குரிய ஒளி ஏன் எனக்கு தடுக்கப்படுகிறது?

இப்போதெல்லாம் படிக்கும் நேரத்தில் மின்வெட்டு
ஏன்? யார் காரணம்? எம்மாணவர் எதிர்காலம்?
கிழக்கின் உதயம், வடக்கின் வசந்தம் வானொலியுடன் மட்டுமே
நான் அன்றாடம் படிக்க வேண்டிய ஒளி எனக்கு வேண்டும்!

**நே.தானியா, சுண்டுக்குளி, (வயது 09).**

## சொற்சிலம்பம் - போட்டி இல: 53

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | | ■ | |
| ■ | 11 | 12 | | | ■ | 13 | ■ |
| 14 | | | | ■ | 15 | | 16 |
| | ■ | 17 | | 18 | | ■ | |
| 19 | 20 | | ■ | 21 | | 22 | |
| 23 | | ■ | 24 | | ■ | 25 | |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### மேலிருந்து கீழ்

1. கூடுதலாக.
2. வேறுபாடு.
3. கட்டு.
4. விடாய்.
5. நிலத்தை நிறைப்பது.
6. களம்/ மைதானம்/ மேட்டுநிலம்
8. வடிவு/ சுந்தரம்.
10. தமிழ் மாதங்களில் ஒன்று.
12. கழிவு நீர் வாய்க்கால்.
13. அணி.
14. சுகபோகம் துய்த்தல்.
15. காடும், காடு சார்ந்த நிலமும்.
16. பெருமையில் சிறந்தவன்.
18. இசையுடன் தொடர்புடைய ஒரு தோற்கருவி.
20. வேகம்.
22. பெரிய நீர்த்தேக்கம்.

### இடமிருந்து வலம்

1. உயிர் மருந்து/தேவர்களது உணவும்கூட.
2. காலம் தாழ்த்து.
7. கவளம்/ திரணை.
8. விரிந்த/ பரந்த.
9. விழி.
10. கனி
11. நடிப்பு/ மாயம் செய்தல்.
14. ஒன்றின்மேல் ஒன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட முறை.
15. தலை நனைத்து ஸ்நானம் செய்.
17. பழுத்தல்.
19. தாய விளையாட்டில் ஓர் அங்கம்
21. தினசரி உயர்ந்து செல்வது.
23. தலையில் எழுதப்பட்டது.
24. வீடு.
25. முற்கால போராயுதம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர்எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 53**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர் (01.04.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கப்பட வேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல. 53 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 05.04.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பிவருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்ட சாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 51 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) கரும்பு. (4) சகதி.(6) ராசி. (7) தியாகி. (9) அனர்த்தம். (11) புவனம். (13) தப்பு. (14) சில். (15)சால்பு. (16) சய. (17) பணி. (18) தகா. (20) தாம்போதி. (22)பல்லி. (23) சில்லறை.

**மேலிருந்து கீழ்**

(1) கராம்பு. (2) ருசி. (3) புதினம். (4) சகித்தல். (5) திரும்பு. (8) யார். (9) அனல். (10) தப்புதல். (12) வசியம். (15) சாணி. (16) சதாம். (17) பதில். (19) காலில். (21)போசி. (22) பறை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் : 51 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள்வருமாறு:

**1 ஆம் பரிசு** — **செல்வி.ஞா.சுகந்தி,** *கல்வயல், சாவகச்சேரி*

**2 ஆம் பரிசு** — **வி.மிதுலாஜினி,** *தெய்யாகலட்டி, தும்பளை மேற்கு, பருத்தித்துறை.*

**3 ஆம் பரிசு** — **சு.தர்மலிங்கம்,** *இல.43, சீனிவாசகம் வீதி, கொட்டடி,யாழ்ப்பாணம்.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) **தேவசேனா விஜயகுமார்,** இல.224/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(2) **ம.சிவரஞ்சினி,** இல.3, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

(3) **[illegible] க.சுதர்சனக்குரு,** [illegible], ஆவரங்கால், புத்தூர்.

(4) **க.நவநீதன்,** மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

(5) **ஸ்ரீ.லக்ஷைன்,** இல:15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமா நிர்வாகமும் ஈரானும்

ஒபாமா நிர்வாகம் ஈரான் தொடர்பான தனது கொள்கையை வகுப்பதில் தீவிரமாகவுள்ளது. அநேகமாகப் புதிய அணுகுமுறை குறித்து இறுதி முடிவை எடுக்க உள்ளது.

சிறிய சிறிய நடவடிக்கைகளைக் கொண்ட அணுகுமுறையை பயன்படுத்தி இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பை மீண்டும் ஏற்படுத்துவது ஒபாமா நிர்வாகத்தின் நோக்கம். இவ்வருட கோடை காலத்தில் நடைபெறவுள்ள ஈரானிய தேர்தலுக்கு முன்னதாக ஈரானின் ஆன்மீக தலைவர் ஆயத்துல்லா கொமேனிக்கு அமெரிக்கா கடிதமொன்றை அனுப்பும் என்கின்றனர் இராஜதந்திரிகள்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சிநேகபூர்வ உறவுக்காகப் பூர்வாங்க அழைப்பாக இது விளங்கும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவின் சகாக்கள் ஈரானிய தேர்தலுக்குப் பின்னரே இந்த நடவடிக்கையை முன்னெடுக்க



வேண்டுமென விரும்புகின்றனர். தேர்தலில் இந்த விடயம் செல்வாக்குச் செலுத்தக் கூடுமென்பது அவர்களது கருத்து.

அமெரிக்கா இவ்வாறான கடிதமொன்றை ஏற்கனவே அனுப்பிவிட்டதாக ஈரான் தெரிவிப்பதை வெள்ளை மாளிகை நிராகரிக்கின்றது.

புஷ் நிர்வாகமும் இவ்வாறான கடிதமொன்றை தயாரித்திருந்தது. ஆனால், அதை அனுப்பவில்லை.

ஈரான் தொடர்பான புதிய கொள்கை குறித்து இன்னமும் இறுதி முடிவெடுக்கப்படவில்லையென தெரிவிக்கும் அமெரிக்க அதிகாரிகள் இறுதி முடிவு இன்னமும் சில வாரங்களில் வெளியாகும் என்கின்றனர்.

ஈரான் தொடர்பான தனது கொள்கை குறித்து அமெரிக்கா மீளாய்வு செய்து வருவதை அவர்கள் உறுதி செய்கின்றனர்.

அமெரிக்க எதிர்ப்புணர்வே பிராந்தியத்தில் தனது செல்வாக்கிற்கு காரணம் என ஈரான் கருதுகின்றது. இதன் காரணமாக அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகள் குறித்து ஈரான் பகிரங்கப்படுத்தாது என்றும், பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்ட பிறகே இது குறித்து அறிவிக்கும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பெரும்பான்மையான ஈரானியர்கள் அமெரிக்கா குறித்து சாதகமான உணர்வைக் கொண்டுள்ளனர். இதேவேளை ஜனாதிபதி அஹமடிஜாட்டிற்கு ஆதரவான தீவிர அமெரிக்க எதிர்ப்பு உணர்வு கொண்டவர்களும் உள்ளனர். இரு பிரிவுகளுக்கும் மத்தியில் சமநிலையை ஏற்படுத்த வேண்டிய நிலையில் ஜனாதிபதி அஹமடிஜாட் உள்ளார்.

ஆப்கானிஸ்தான் குறித்து ஆராய்வதற்காக மார்ச் 31ஆம் திகதி ஹேக் நகரில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஈரானுக்கு அழைப்பொன்றை விடுத்துள்ளார்.

ஈரானுடனான தொடர்புகளின் ஆரம்பமாக இந்த அழைப்பு அமைந்துள்ளது.

ஹிலாரி கிளின்டனின் இராஜதந்திர நடவடிக்கையின் பொதுவான அணுகுமுறையை பின்பற்றியே இந்த அழைப்பு அமைந்துள்ளது.

ஒன்றுக்கொன்று கரிசனைகள் உள்ள விடயங்களில் பேச்சு வார்த்தைகளை உருவாக்கி தீவிர பேச்சுவார்த்தைகளை நோக்கி கொண்டு செல்லும் அணுகுமுறையை ஹிலாரி கையாள்கிறார்.

ஈரான் இந்த அழைப்பு குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளது.

ஈரானுடன் தொடர்புகளை ஸ்தாபிக்கும் இந்த நடவடிக்கையை அமெரிக்கா மிகவும் நிதானமாகவும், படிப்படியாகவும் சிறிய நடவடிக்கைகள் மூலமாகவும் முன்னெடுக்கும்.

இதன் காரணமாக ஈரானுக்கு எதிரான கடுமையான தடைகளுக்கான அழுத்தங்களை அமெரிக்கா அதிகரிக்காது.

ஈரானுடனான பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்படவில்லையென தான் கருதும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் இதற்கான அழுத்தத்தை அமெரிக்கா கொடுக்கும்.

ஆசியாவுக்கான தனது விஜயத்தின் போது ஹிலாரி முன்வைத்த ஒரு விடயம் முக்கியமானது.

ஒபாமா நிர்வாகம் எதிரிகளை நோக்கி தனது கரத்தை நீட்டிய பின்னரும் அவர்கள் அதற்கு சாதகமாக பதிலளிக்காவிட்டால் சர்வதேச சமூகம் வாஷிங்டனுக்கு பின்னால் அணி திரள்வதற்கான காரணமாக அது அமையுமென அவர் தெரிவித்திருந்தார்.

உலகெங்கிலும் உள்ள ஈரானிய அதிகாரிகளுடன் தொடர்ச்சியாக இராஜதந்திர தொடர்புகளை வைத்துக் கொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை வாஷிங்டன் நீக்குவதாக மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

இது அமெரிக்க இராஜதந்திரிகளை ஈரானியர்களுடன் தொடர்பு ஏற்படுத்த உதவியாக அமையும்.

மேலும் கடந்த 30 வருட காலப் பகுதியில் தமக்குள் எதுவித உறவுகளையும் வைத்துக் கொள்ளாத இரு நாடுகளும் மீண்டும் தமக்கிடையே பரஸ்பரம் நட்பை ஏற்படுத்தவும் உதவும். இது முக்கிய பேச்சுகளுக்கு முன்னர் குறிப்பிடத்தக்க நட்புறவை சிறிதுசிறிதாக ஏற்படுத்தவும் உதவும்.

ஈரானுடன் புதிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்வது குறித்து நேர்மையாக ஆர்வம் கொண்டிருப்பதை அமெரிக்கவே புலப்படுத்த வேண்டுமென்கின்றனர் ஆய்வாளர்கள்.

வாஷிங்டன், ஈரானுக்கு கடிதமொன்றை அனுப்ப விரும்பினால். அதனை ஆன்மீக தலைவர் ஆயத்துல்லா கொமேனிக்கு அனுப்ப வேண்டும். அது ஈரான் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை வாஷிங்டன் புரிந்து கொண்டுள்ளதை புலப்படுத்தும் என்கின்றனர் ஆய்வாளர்கள். குறிப்பிட்ட கடிதம் என்ன தொனியில் அமைந்திருக்கின்றது என்பதும் முக்கியமானது.

ஈரானின் அணுத்திட்டம் பற்றி எதுவும் குறிப்பிடக் கூடாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின் றனர்.

ஈரானில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த வாஷிங்டன் முயலவில்லை என்ற தெளிவான செய்தி குறிப்பிட்ட கடிதத்தின் மூலம் தெளிவாக்கப்படுவதும் அவசியம்.

ஈரானின் தற்போதைய ஜனாதிபதி சார்ந்த புதியவருக்கே குறிப்பிட்ட கடிதத்தை அமெரிக்கா எழுத வேண்டுமென வாதிடுபவர்களும் உள்ளனர்.

எனினும், டெஹ்ரானில் தனது அலுவலகமொன்றை அமைக்கும் திட்டத்தை அமெரிக்கா கைவிட்டுள்ளது.

புஷ் நிர்வாகமும் இது குறித்து சிந்தித்த பின்னர் இதனை கை விட்டிருந்தது.

அமெரிக்கா




அலுவலகமொன்றை ஈரானில் தற்போதைக்கு திறப்பது பல தேவையற்ற தலைவலிகளை உருவாக்கும் என ஒபாமா நிர்வாகம் கருதுகின்றது. ஈரான் அதனை உளவாளிகளின் தங்குமிடமாக கருதலாம்; ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறலாம் என ஒபாமா நிர்வாகம் கருதுகின்றது.

ஈரானுடன் எவ்வளவு காலம் பேச்சினை மேற்கொள்ள வேண்டும் என்பதும் ஆராயப்படும் விடயங்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

- ரஜீவன் -

# கலை என்பது உணர்வுகளுடன் தொடர்புடைய ஒருங்கிணைவே; அதனை வெறும் கற்றலினூடாக மாத்திரம் பெற முடியாது

## ஓவியத்துறையில் தனிமுத்திரை பதித்த கலாபூஷணம் யோகநாதன் தன் கலைப் பயணத்தின் சுவடுகளை விரிக்கின்றார்



கோயில் திரைச்சீலை ஓவியங்களை வரைவதில் தன்னிகரில்லாதவராக விளங்குபவர் தம்பிப்பிள்ளை யோகநாதன். தன்னுடைய தூரிகை மூலம் பல இறைஉருவங்களுக்கு உயிர் கொடுத்த கலைஞர் இவர். காளிகோயிலடி, மூளாய் வீதியில் வசித்துவரும் யோகநாதன் வட்டுக்கோட்டையை சொந்த இடமாகக் கொண்டவர். இப்போதும் ஒரு இயங்குநிலைக் கலைஞராகவே விளங்குகிறார். இவருடைய ஓவியத்திறனுக்கு அணிசேர்ப்பதுபோல கலைவாரிதி, கலாபூஷணம் போன்ற விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஓவியனின் மனக்கிடக் கைகள் உதயன் வாசகர்களுக்காக இங்கே நேர்காணல் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

கேள்வி:- ஓவியத்துறை மீது உங்களுக்கு இத்துணைதூரம் ஆர்வமும் ஈடுபாடும் வருவதற்கான உந்தல்கள் எவையெனக் கருதுகிறீர்கள்?

பதில்:- ஓவியத்துறையில் ஈடுபாடுவர காரணமே எனது பெற்றோர்தான். நான் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் எனது ஆரம்பக் கல்வியினைக் கற்றேன். பின்னர் வட்டு.இந்துக் கல்லூரியில் எனது கல்வியினைத் தொடர்ந்தேன். அப்போது சித்திரக் கலையினை ஒரு பாடமாகக் கற்றுக் கொள்ளும்போது அதில் மதிப்பெண்ணை உச்ச நிலையில் பெற்றுக் கொண்டேன். இதுவே எனது உயர்வுக்கு அடிப்படைக் காரணம் எனலாம். அப்போது எனக்குச் சித்திரக்கலை ஆசிரியராக இருந்த சுப்பிரமணியம் அவர்களின் போதனை இத்துறையில் என்னை இன்றளவும் பிரகாசிக்கச் செய்துள்ளது.

ஓவியத்துறையில் ஈடுபடுவதற்கு உந்து சக்தியாக எனது பெற்றோர்தான் இருந்தார்கள். எனது தந்தை ஒரு கட்டடக்கலைஞர். அத்துடன் வீட்டு முகப்பு அலங்காரக் கொடிவேலைகளை சிமெந்தினால் செய்யும் திறன் படைத்தவர். அதனால் எனக்கு இத்துறையில் அப்பா செய்வதைப் பார்த்ததன் ஊடாக, ஒரு கேள்விஞானமாக ஓவியஆற்றல் வெளிப்பட்டது. ஓவியத்துறையில் என்னை இன்னும் ஊக்குவித்தவர் கல்லூரி உபஅதிபர் திருவாளர் கையிலாயநாதன் அவர்கள். முதல் முதலாக 'கலா நிலையம்' எனும் நிறுவனம் எனது படைப்புக்களுக்கு களம் அமைத்துக்கொடுத்தது. 1963ஆம் ஆண்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் முன்றலில் 6அடி உயரமும் 4அடி அகலமும் கொண்ட முருகன் வள்ளி தெய்வானை சமேதராக ஓவியம் ஒன்றை வரைந்தேன். இது ஏராளமானோரின் பாராட்டைப் பெற்றது. இந்த ஓவியத்தின் மூலம் எனது திறமை வெளிக்கொணரப்பட்டது என்று கூறுவதில் தவறில்லை. அன்றிலிருந்து இன்றுவரை சுமார் 46 வருடங்கள் தூரிகையும் கையுமாகவே என்னுடைய வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது.

கேள்வி:- ஓவியங்களில் பல வகை உண்டு. பல பாணிகளும் உண்டு. அவ்வகையில் நீங்கள் எத்தகைய ஓவிய முறைமைகளைக் கைக்கொள்கிறீர்கள்?

பதில்:- எனக்கென்று ஒரு தனித்துவமான ஓவியப்பாணி உள்ளதென்று நான் உணரவில்லை. எனினும் அப்படி ஒன்று இருப்பதாக என்னுடைய ஓவியங்களைப் பார்ப்பவர்கள் அபிப்பிராயம் [illegible] யம் தெய்வீகத்தன்மை ஓவியம், கண்ணாடிகளில் வரைகின்ற வழிபாட்டு ஓவியம், திரையரங்குக்கான விளம்பரத்தட்டிகள், வர்த்தக நிலையங்களின் பெயர் பொறித்த முகப்புத்தட்டிகள் போன்ற ஓவியம் சார்ந்த வேலைகளைச் செய்து வருகிறேன்.

கேள்வி:- ஓவியத்துறையில் நாற்பது வருடங்களுக்கும் மேலாக நீங்கள் நிலையாக நிற்பதற்கு பின்புலம் என்ன?

பதில்:- இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒருவன் முதலில் தன்னை நம்பவேண்டும். தன்னுடைய முயற்சியே உயர்வுக்கு உறுதி என்பதை உணரவேண்டும். அப்படி உணர்ந்தால் வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும். இதனால் வாழ்க்கையில் அவன் முன்னுக்கு வரமுடியும். இதுவே எனது வெற்றிக்கான பின்புலம் எனக் கொள்ளலாம். இது ஓவியத்துறைக்கு மட்டுமல்ல எந்தக் கலைத்துறைக்கும் முக்கியமான ஒன்றாகும்.

கேள்வி:- கோயில்களில் ஓவியங்களை வரையும்போதும், வர்த்தக விளம்பரங்களை தீட்டும்போதும் ஏதாவது வித்தியாசத்தை உணர்கிறீர்களா?

பதில்:-புகைப்படம் போன்ற நவீன வசதிகள் வந்தாலும் எமது கலைஞர்களின் கலைப் படைப்புகளின் முன் அவை ஈடுகொடுக்க முடியாது. கோயில்களில் தூரிகையுடன் நாம் [illegible] வரையும்போது தெய்வீக [illegible], பக்தி உணர்வுடன் உருவங்களை பக்தர்களுக்கும் ரசிகர்களுக்கும் கொடுக்கின்றோம். எமது படைப்பு பல ஆண்டுகளாக புகழ் தருகின்றன. இதனால் எம்மால் ஆலயங்களில் பக்தி உணர்வினை ஏற்படுத்த முடிகின்றது. ஆனால் வர்த்தக நிலையங்களுக்கு வாடிக்கையாளர்களைக் கவரக்கூடிய வகையில் மட்டுமே வரைவதால் அவை வெறும் காட்சிப் பொருள்களாகவே அமைந்து வர்ணங்கள் மற்றும் வடிவமைப்புக்கள் என்பவற்றால் கவர்ந்து ஈர்க்கின்றன.

கேள்வி:- நீங்கள் உங்களுக்குள் இருக்கும் ஓவியத்துறையை யாருக்கேனும் கற்றுக் கொடுத்துள்ளீர்களா?

பதில்:- நான் எனது பிள்ளைகளுக்குக் கூட எதையும் பழக்கவில்லை. ஆனால் அவர்கள் இயல்பாகவே எனது துறையினைப் பயின்று பின்பற்றி வருகின்றனர். காரணம் கலை என்பது கற்றுக் கொடுப்பதில்லை. அது உணர்வுகளுடன் தொடர்புடைய ஒரு ஒருங்கிணைவு.

கேள்வி:- ஓவியத்துறையில் இன்றைய இளம்சந்ததியினர் உங்களைப்போல நிலைத்து நிற்பதற்கு எவற்றைக் கடைப்பிடிக்கலாம் எனக் கருதுகிறீர்கள்?

பதில்:- நேர்மை, கண்ணியம், பக்தியுணர்வு, தொழிலை இறைவனாகப் பார்த்தல் என்பவற்றை இளையோர் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். எந்தத் தொழில் புரிந்தாலும் அத்தொழிலை மதித்து நடக்கவேண்டும். உங்களுக்காக நீங்கள் வாழவேண்டும் என்ற எண்ணத்தை மறந்து பிறருக்கு முடிந்தளவு உதவுங்கள். கலையைக் கலையாகவே மதியுங்கள். கலை உங்களுக்கல்ல, அது மக்களுக்குரியது. சிறந்த திரைச்சீலை ஓவியராக, ஆற்றல் மிகுந்த கண்ணாடி ஓவியக்கலைஞராக, சுவரோவியராக, விளம்பர வடிவமைப்பாளராக, படப்பிடிப்பாளராக, பாடகராக, நடிகராக எனப் பல்துறை ஆற்றல் கொண்ட கலைஞர் என்று சமூகம் என்னைப் புகழ்வதற்கு மேற்குறித்தவற்றை தவறாது நான் கடைப்பிடிப்பதே காரணம் என நம்புகிறேன். ★

நேர்காணல்: ஔண்யன், காந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UK EDUCATION
## FREE SEMINAR & CONSULTATION

**Fast track to a Progressive, Flexible & Affordable Degree**

- Business Management
- ACCA
- CAT
- Financial Management
- Management Information Systems
- Marketing
- Human Resource Management
- Law
- Tourism & Hospitality Management

**University Progression via internationally recognized awarding body**

Mr. Sowmik Reyhan - CEO
Mr. Stephen Burgess - International Representative available for consultation

- In colombo @ Sri Lanka Office 10A, Duplication Road, Colombo - 04. - 6 & 7 April'09.
- In Kandy @ Hotel Suisse Conference Hall, Kandy. 8 April'09.


Appointments Hotlines- 0773 136334, 0772 071944 Kandy - 0777 304984

## LONDON READING COLLEGE

Sri Lanka Office
10A, Duplication Road, First Floor, Colombo - 04.
E-mail: lrcc@sltnet.lk, star_com@sltnet.lk


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு: 17.05.1917



உதிர்வு: 20.02.2009

### அமரர் செல்லையா இராசதுரை

கடந்த 20.02.2009 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ராஜ்மணி பந்தல் சேவை,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(இறப்பு என்பது முடிவல்ல)
செங்குந்தர் குல வழித் தோன்றல்



### அமரர் கந்தையா முதலி நடராசா

(இளைப்பாறிய ஆசிரியர், சமாதான நீதிவான்)

ஆண்டுகள் இரண்டு கழிந்த போதும்
அப்பா! நின் நினைவு ஆறவில்லை நெஞ்சில்
ஈண்டு நிலைத்திருந்து எமை
இனிதே வழிநடத்தும்
உங்கள் நெறியின் வழி சென்றே வாழ்ந்திடுவோம்
சிவசிவா! சிவசிவா! சிவசிவா!

தோற்றம்: 20.06.1922
மறைவு: 15.03.2007

'கலைமகள் வாசம்',
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தொ.பே: 021 222 8186

## மரண அறிவித்தல்

### இரத்தினக் குருக்கள் இராமசாமி ஐயர் (கடைமணி)



மானிப்பாய் உடுவில் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கௌண்டின்ய கோத்திரம் இரத்தினக் குருக்கள் இராமசாமி ஐயர் 20.03.2009 வெள்ளிக்கிழமை அமரத்துவம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினக் குருக்கள் சீதாலட்சுமியின் அன்புப் புதல்வனும் சுந்தரலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சீதாபதி ஐயர், சாம்பசிவஐயர் மற்றும் சண்முகதாஸ் ஐயர் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற கார்த்தியாயினி, கிரியா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வாசுதேவன், வாமதேவனின் அன்புத் தந்தையும் தேஜோவதனியின் அன்பு மாமனும் திவ்யக்ஷனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் வீதி, மானிப்பாய்.
தொ.பே.இல.077 322 3005 (83694)

தகவல்:
குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 22

இணுவில் சிவகாமி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இந்த ஆலயத்தின் முருகன் தேர் வெள்ளோட்ட நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (204)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 21

நயினாதீவு மலையடி ஐயனார் ஆலயத்தின் ஞானவேல் பிரதிஷ்ட கால்கோள் விழா எதிர்வும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் முத்தையா மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 'வினை தீர்க்கும் வேலவன் அருள் கொடுக்கும் ஐயனார்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (204)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 22

அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 22

நாவற்குழி பாடசாலை வீதியில் அமைந்துள்ள காளிஅம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக தினவிழா நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (288)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 22

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வசந்தமண்டப பூசையை அடுத்து இடம்பெற உள்ளது. மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

இவ்வாலய பெருந்திருவிழா கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது. (250)

* * *

சுழிபுரம், மார்ச் 22

சுழிபுரம் - பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இலட்சார்ச்சனை நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து ஆறுதினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 7.30 மணிக்கு பூசை நடைபெறும். எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கார்த்திகைத் திருவிழா நடைபெறும். (204-28)

## மணப்பெண்கள் தேவை

Doctors 1972, 1978, கிரகபாவம் 11, M.Scபட்டதாரி 1974, 2இல் செவ்வாய், 26 கிரகபாவத்திற்குட்பட்ட மணப்பெண்கள் தேவை. மற்றும் மருத்துவ, பொறியியல், கணக்காளர், பட்டதாரி மணப்பெண்களும் தேவை.

தொடர்பு: 077 1619518 (83695)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1983ஆம் ஆண்டு, அவிட்டம் 2ஆம் பாதம், 7இல் செவ்வாய், கிரகபாவம் 40 உடைய லண்டனில் குடியுரிமை பெற்ற தொழில் அதிபருக்கு ஓரளவு படித்த அழகிய மணமகள் தேவை. மணமகன் மிக விரைவில் கொழும்பு வரவுள்ளார். அனைத்துத் தீவுகளுக்கும் முன்னுரிமை மற்றும் 1972ஆம் ஆண்டு, கார்த்திகை முதலாம் பாதம், கிரகபாவம் 22, 8இல் செவ்வாய், கனடாவில் குடியுரிமை பெற்று சிவில் என்ஜினியராகப் பணிபுரியும் மணமகனுக்கு பொருத் தமான மணமகள் தேவை. உள்நாட்டு/வெளி நாட்டுத் தொடர்புகளுக்கு

[illegible]
077 6184434, 077 8501013, 077 4077531
E.mail: vaniimb@yahoo.com

## அர்ப்பணிப்பை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



### Dr.அருணா புண்ணியமூர்த்தி M.D

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாக இருந்து வைத்திய சேவையிலும் வைத்தியசாலையின் பௌதீக வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தியிலும் தன்னை அர்ப்பணித்துமகத்தானபணியாற்றி, அனைவரினதும் நன் மதிப்பையும், பாராட்டையும் பெற்று இடமாற்றலாகிச் செல்லும் Dr. அருணா புண்ணியமூர்த்தி (M.D) அவர்கள் சகல உயர்வும், சௌகரியங்களும் பெற்றுச் சீரும், சிறப்புடனும் வாழ மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

ஆதார வைத்தியசாலை,
ஊர்காவற்றுறை.

ஊழியர்கள்,
வைத்தியசாலை
உத்தியோகத்தர்கள்.

## யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களின் இணைந்த புலமைப்பரிசில் ஏழாவது வழங்கல் 2008/2009

### தேசிய பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கொடுப்பனவு

- யாழ்.மத்திய கல்லூரியில் பயிலும் திறமை மிக்க, வசதி தேவைப்படும் மாணவர்கள் இலங்கையில் உயர்கல்வியை தொடர்வதற்காக கொழும்பு, கனடா, அவுஸ்திரேலியா, யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களும், அமெரிக்காவில் வசிக்கும் பழைய மாணவரான Dr.S.K. மகேஸ்வரன் அவர்களும் இணைந்து வழங்கும் புலமைப்பரிசில்.
- இந்த உத்தேசத் திட்டத்தின் கீழ், க.பொ.த.உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் இருபது தகைமை வாய்ந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு தோறும் தலா ரூபா 5000/ வழங்கப்படும். இதேபோன்று தேசிய பல்கலைக் கழகங்களில் கல்வியை தொடரும் பத்து தகைமை வாய்ந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு தோறும் தலா ரூபா 10,000/ வழங்கப்படும்.
- குறிப்பு: க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான ஏழாவது வழங்கல் தெரிவு ஏற்கனவே செய்யப்பட்டு அதற்குரிய கொடுப்பனவு விவரங்களும் யாழ்.மத்திய கல்லூரி அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### பொது தேவைப்பாடுகளும் நிபந்தனைகளும்

- கடந்த (2008 - ஆகஸ்ட் ) உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி தேசிய பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இப்புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பம் செய்வதற்குத் தகுதி உரியவராவார்கள்.
- குடும்பத்தின் கூட்டு வருமானம் ஆண்டொன்றுக்கு ரூபா 90,000/ இற்கு மேற்படலாகாது.
- பெற்றோரை இழந்த உடல் ஊனமுற்ற மற்றும் விளையாட்டு பாடசாலை கல்வி விதானத் திட்டத்திற்கு மேற்பட்ட செயற்பாடுகளில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பரீட்சைப் பெறுபேறுகள், பாடநெறி தெரிவு முன்னுரிமை என்பன தொடர்பில் பாடசாலை அதிபரின் விதப்புரையும் தனிப்பட்ட விவரங்கள், குடும்ப வருமானம் என்பவற்றின் உறுதிப்படுத்தலுக்குக் கிராம சேவையாளரின் அத்தாட்சிப்படுத்தலும் தேவைப்படும்.
- விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபரிடமும், யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை, கௌரவ புலமைப்பரிசில் செயலாளரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.
- நிதியுதவி பெறுவோரைத் தெரிந்தெடுத்தலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதலும் புலமைப்பரிசில் முகாமைக்குழுவின் பொறுப்பாக அமையும். இப்புலமைப் பரிசில் திட்டம் தொடர்பிலான சகல விடயங்கள் பற்றி இக்குழு எடுக்கும் தீர்மானங்கள் முற்றானதும் இறுதியானதுமாகக் கருதப்படும்.
- சகல விண்ணப்பங்களும் சரியான முறையில் தெரிவுசெய்யப்பட்டு யாழ்.மத்திய கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட வேண்டும்.
- இவ்விண்ணப்பங்கள் அதிபரின் பரிசீலனைக்கு பின்பு அதிபரால் புலமைப் பரிசில் செயலாளர், யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளைக்கு அனுப்பி வைக்கப்படும்.

வி.ஆர் வடிவேற்கரசன்,
தலைவர்.

எஸ்.இராஜநாதன், புலமைப்பரிசில் செயலாளர்,
97/3 பாலி வீதி, தெஹிவளை.
தொ.பே: 0112734370

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் முத்தையா கயிலாயபிள்ளை

தோற்றம்: 11.09.1944
மறைவு: 06.02.2009

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசை புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் ஆறுதல் அஞ்சலிகள் தெரிவித்து கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணம் - நல்லூர் வடக்கு திருவருள்மிகு

# ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில்

## மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர் - 22.03.2009



### குருகுல அதிபரின் ஆசிச் செய்தி



ஒரு ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற வேண்டுமென்றால் அதற்கு மூவரின் பங்களிப்புச் சிறப்பாக இருக்கவேண்டும். ஆலய தர்மபரிபாலகர்கள், ஆலய நித்திய அர்ச்சகர், சிற்பாசாரியர், மஹா கும்பாபிஷேக பிரதம குரு, ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் - இந்த ஐந்து பேருடைய புங்களிப்பும் இவ்வாலயத்தில் ஒருங்கே அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். இத்துணை சிறப்போடும் நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தின் பயனாக அனைவரும் விநாயகர் திருவருள் பெற்று சிறப்புற வாழ் வார்களாக.

"வேதாகம ஞான பாஸ்கரன்"
சிவஸ்ரீ தாணு மஹாதேவக் குருக்கள்
அதிபர், தர்மஸாஸ்தா குருகுலம், இணுவில்.

### பிரதிஸ்டா பிரதான குருவின் ஆசியுரை



சிவபூமி, வீணாகானபுரம், ஈழம் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் நிலவளம், நீர் வளம் நிறைந்து சிறப்புற்று விளங்கும் யாழ்ப்பாணத்து நல்லூரின் வடவால் வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலின் மஹா கும்பாபிஷேகம் இன்று இனிதே நடைபெறுகின்றது. மஹா கும்பாபிஷேகம் எனும் இப்பெரும் சாந்தி விழா பன்னிரண்டு [12] வருட இடைவெளியின் பின்னர் தான் நடைபெறுவது வேதாகம மரபு. மஹா கும்பாபிஷேகத்தைத் தரிசிக்கும் பெரும்பேறு கிடைத்தற்கரியதாகும் கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பதால் இறைவன் அருளால் பல்வேறு வகையான நன்மைகளும் கிடைப்பது நிச்சயம். இவ்வாலயத்தின் முன்னைய கும்பாபிஷேகம் 1989ஆம் ஆண்டு தை மாதம் நடைபெற்றது. அந்தக் கும்பாபிஷேகத்தையும் நானே பிரதான குருவாக இருந்து நடத்தும் அரும்பெரும் பாக்கியத்தையும் பிள்ளையார் தந்துள்ளார். தற்பொழுது ஆலயம் புதுப்பொலிவுடனும், மகாலட்சுமி, சந்தான கோபாலர், சுப்பிரமணியம் ஆகிய தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டு சிறப்புற ஆலயம் அமைந்துள்ளது. இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முக்தியின்பம் பெரும் பொருட்டேயாகும். இறைவனை வணங்குவதற்கு ஆலயங்கள் தான் சிறந்த இடமாகும். ஆலயங்கள் அமைத்தல், அதற்கு உதவிகள் புரிதல், திருப்பணிகள், திருத்தொண்டுகள் செய்தல் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி வகுக்கின்றது. அந்தவகையில் இந்த ஆலயம் விநாயகர் அடியார்களினால் பல திருப்பணிகள் புனருத்தாரண வேலைகள் எல்லாம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் சிறப்புற தெய்வீகத் தன்மையுடன் காட்சியளிக்கின்றது. சகல விக்கினங்களையும் நீக்கி அருள் பாலிக்கும் சந்திரசேகரப் பிள்ளையாரின் மகா கும்பாபிஷேகத்தின் பலனாகத் தொண்டர்கள் பல வகைளிலும் உதவிய வெளிநாட்டு, உள்நாட்டு அடியார்கள் மற்றும் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழவும் எமது நாட்டில் நிரந்தர அமைதியும், சமாதானமும் விரைவில் நிலை பெறவும் விநாயகரை வணங்கி வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ வைரவநாத ஜெகதீஸ்வரக் குருக்கள்,
பிரதம குரு, பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி
விநாயகர் தேவஸ்தானம், திருநெல்வேலி.

### ஆலய குருவின் ஆசிச்செய்தி



ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார, திரோபாவானுக்கிரஹ பஞ்ச க்ருத்யபராயணனாக விளங்கக் கூடிய, எல்லாம் வல்ல பரமேஸ்வரனுடைய பரிபூர்ண அனுக்கிரஹத்தினாலேயும், குருவினுடைய க்ருபையினாலும் எனது மாதா, பிதாவினுடைய பரிபூர்ண ஆசீர்வாதத்தினாலும், நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் என்னும் நாமத்தையுடைய விக்கினேஸ்வரனுக்கு அதி விமர்சையாக மஹா கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கு விழா நடைபெறுகிறது. இந்த இனிய சுபமங்கள விழாவை நினைந்து அல்லும், பகலும், அனைவரினதும், உள்ளும் புறமும், தும்பிக்கையான் மேல் நம்பிக்கை கொண்டு அவன் அருளாலேயே அவன்தாழ் வணங்கி, அவன் நினைவினால் உந்தப்பட்டு, ஸ்ரீ சந்திசேகரப் பிள்ளையார் தன்னுடைய அனைத்துக் காரியங்களையும், பூரணத்துவமுடனும், முழுமையாகவும், சிறப்பாகவும் செய்வித்துக்கொண்டிருக்கின்றார்.


எல்லாம் அவன் செயல். இந்த குடமுழுக்கு விழா சகல விதமான சிறப்போடும் உற்சாகத்தோடும் நடப்பதையெண்ணிப் பார்க்கும்போது உள்ளம் பூரித்து, நெக்குருகி, காதலாகி, கசிந்து கண்ணீர் மல்குகின்றேன். ஏனெனில் இந்தப் பிள்ளையார் எங்கள் சொந்தப் பிள்ளையார். பாரம்பரியமாகவும், பரம்பரை பரம்பரையாகவும் இந்தப் பிள்ளையாரை உள்ளன்போடும், உவகையோடும், ஊட்டமுடனும், மிக்க நாட்டமுடனும் பூஜித்தும், நேசித்தும் வருகின்றோம். ஐந்து தலைமுறையாக அவன் அடிபணிந்தேத்துகின்றோம். இந்தப் பிள்ளையாரின் பரம்பரை பூஜாஸ்தானீகர் நாங்கள் என்பதில் பேருவகை கொள்கின்றோம். எனவேதான் இந்த கும்பாபிஷேக கிரியைகள் யாவையும் ஆராய்ச்சி பூர்வமாகவும், மிகவும் நுணுக்கமோடும் ஏற்பாடுசெய்து மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

விக்ன க்ருது- விக்ன ஹ்ருது இதி = விக்னேஸ்ஹஹ. விக்னங்களை உண்டு பண்ணுபவனும் அந்த விக்னங்களை - இல்லாமற் செய்பவனும் எல்லாம்வல்ல விக்னேஸ்வரனே ஆவான். சகல கணங்களுக்கும் தலைவனாக இருப்பதனாலேயே கணநாதன் என்று அழைக்கப்படுகிறான். எந்தவிதமான ஒரு செயலை நாம் செய்வதற்கு முன்னர் விக்னேஸ்வரனைப் பூஜை பண்ணி, அவரது அனுமதி பெற்ற பின்னரே அடுத்த செயலை நாம் செய்கின்றோம். எனவேதான் நம் சந்திரசேகரப் பிள்ளையாருக்கு ஆகமப் பிரகாரம் சாஸ்த்ரோக்தமாக இந்தக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. சிவாகமங்கள் 28 ஆகும். அவையாவன.

காமிகம் யோகசம் சிந்ய காரணம் அசிதம் ததா
தீப்தம் சூக்ஷ்மம் ஸஹஸ்றம்ச அம்சுமான் சுப்ரபேதகம்
விஜயம் சைவ நிஸ்வாசம் ஸ்வாயம்புவ மதானலம்
வீரம்ச ரௌரவம்சைவ மகுடம் விமலம் ததா
சித்தம் சந்தான சர்வோக்தம் பாரமேஸ்வர மேவச
கிரணம் வாதுனம் சைவாபி அஷ்டா விம்சதி ஸம்ஹிதாஹ.

என்று சொல்லப்படுகின்ற ஆகமங்களில் எவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றதோ அவ்வாறே இந்த கும்பாபிஷேகக் கிரியைகள் அனைத்தையும் அறிஞர் பெருமக்களின் உதவியோடும் அந்தணப் பண்டிதர்கள், ஆய்வாளர்கள் கூற்றுப்படியும் மற்றும் நடைமுறை வழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் கால, தேச, நேரத்தை முன்னிட்டு ஆய்ந்து, அறிந்து முழுமனதோடும், மனநிறைவோடும், அக நெகிழ்வோடும் பக்தி சிரத்தையுடனும் இந்தக் கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கு விழா மிகவும் இனிதே நடைபெறுகிறது. இந்தக் கும்பாபிஷேக விழாவானது இனிதே நடைபெறவேண்டும் என்று எண்ணி, மனதாலும், வாக்காலும், செயலாலும், அருந் தொண்டாற்றிய அத்துணை நல்ல உள்ளங்களும் சகல சௌபாக்கியங்களும் பெற்று ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையாரின் பரிபூர்ண அனுக்ரஹம் பெறவேண்டுமாய் ஆசீர்வதிக்கிறோம்.

சிவஸ்ரீ முத்து ஸ்ரீனிவாச பரமாச்சாரியார், ஆலயகுரு, பரம்பரை பூஜாஸ்தானீகர்.



விநாயகப் பெருமான் மெய்யடியார்களே,

உண்மை அறிவு இன்பமே உருவாகிப் பாலில் நெய்யாகக் கரைந்து உறையும் இறைவன் தன்னை மனத்தால் சிந்தித்து, வாக்கால் வாழ்த்தி, காயத்தால் வணங்கி, வழிபடற் பொருட்டு எண்ணற்ற திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள் நிலையங்களே ஆலயங்கள் எனப்படும். இத்தகு ஆலயங்கள் பல நிறைந்ததும் விராட்புருடனது இடை நாடிஸ்தானம் என சாந்தோக்ய உபநிடதத்தில் புகழப் பெற்றதும் தக்ஷண கைலாயம் என அழைக்கப் பெறுவதும், முத்தமிழ் விரகராலும் அருணகிரிநாதராலும் பரவப்பெற்ற பெருமையுடையதுமான இவ்ஈழத்திருநாட்டின் கண் வடபால் சகல சிறப்புகளும், சைவமும், செந்தமிழும் தழைத்தோங்கி நிற்கும் யாழ்ப்பாணம் நல்லூரில் 17ஆம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட எட்டு விநாயகர் ஆலயங்களுள் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். விருட்சங்களுள் சிறப்பானதும் யாகங்களுக்கு மிகமுக்கியத்துவமான "பொரசு" என்று அழைக்கப்படும் பலாச மரங்களால் சூழப்பெற்றதும், தென்கிழக்கே தாமரை, ஆம்பல், நீலோற்பலம் முதலிய மலர்கள் நிறைந்த தடாகத்தையும் கிழக்கே செந்நெல் வயல்களையும் கொண்ட அழகிய சூழலில் 'வேட்டைக்காரன் வளவு' என்னும் பரந்த நிலப்பரப்பிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹா சந்திரசேகர விநாயகருக்கும் நூதனமூர்த்திகள் மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் சர்வதாரி ஸ்ரீ பங்குனி மாதம் 9ஆம் நாள் (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை ஏகாதசித் திதியும், திருவோண நட்சத்திரமும், அமிர்த யோகமும், இடபலக்கினமும், கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில் காலை 9.30 மணிமுதல் 11.15 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் செய்யத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் வருகை தந்து காணுதற்கரிய இப்பெருஞ்சாந்திப் பெருவிழாவைக் கண்டு தரிசித்துப் பெரும்பேறு பெறுவீர்களாக. அத்துடன் இந்நிகழ்வின் முன்பின் நிகழும் கிரியைகளிலும் கலந்து எம்பெருமானின் அருள்பெறுவீர்களாக.

### இந்தியா சென்றபொழுது பிள்ளையார் பட்டி பிரதமகுரு கே.பிச்சைக்குருக்கள் வழங்கிய நேரடி ஆசிச்செய்தி



உயிர்கள் இன்னல் நீக்கி உய்திபெற இறைவன் பல்வேறு வடிவங்களில் இறங்கி வந்து அருள்புரிந்து ஆட்கொள்வது வழக்கம். இவ்வகையில் புகழ் மிக்க விநாயக வடிவம் தாங்கி தமது கருணையை வாரி வழங்கும் திருக்கோயில்கள் பல.

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு திருவருள்மிகு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோயில் பதினேழாம் நூற்றாண்டில் நிறுவப் பெற்ற எட்டுக் கோயில்களில் ஒன்று. தற்சமயம் புதுப்பிக்கப்பட்டு பல சிறந்த வேத சிவாகம அறிஞர்களைக் கொண்டு மஹாகும்பாபிஷேகம் நடத்த இருப்பது அறிந்து அளவற்ற மகிழ்ச்சி. நம் மக்கள் இன்னல் நீங்கி மன மகிழ்வுடன் வாழவும் சூரியசந்திரா உள்ளவரை இத்திருக் கோயில் சிறந்து விளங்கி நமது பரம்பரையை காக்கவேண்டும் எனப் பிரார்த்தித்தும் மகிழ்கின்றோம்.

இப்பணியில் ஈடுபட்டுள்ள குருமார்களும், திருமுறைவாணர்க ளும், திருக்கோயில் நிர்வாகமும் மேலும் பல நல்ல பணிகள் செய்து சைவமும் தமிழும் தழைத்தோங்க வாழ்த்துகின்றோம்.

கே.பிச்சைக்குருக்கள், பிள்ளையார்பட்டி.

### ஆலய பிரதமகுருக்களின் ஆசிச்செய்தி



ஈழத்திருநாட்டின் வடக்குத் திசையில் நல்லூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சந்திரசேகரப்பிள்ளையாரின் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். அதேவேளை கும்பாபிஷேகத்தில் பங்குபற்ற முடியாமையையிட்டு வருத்தமடைகின்றேன். எங்கள் குலதெய்வமாகிய பிள்ளையாருடைய மஹா கும்பாபிஷேகம் இனிதே சிறப்புற நடைபெறவும் சகல மக்களும் பிள்ளையாரின் திருவருளினால் சகல சங்கடங்களும் நீங்கப் பெற்று எல்லா வளங்களும் பெற்று நலமுடன் வாழ விநாயகரை இறைஞ்சி வணங்குகின்றேன்.

சிவஸ்ரீ சதா.யோகீஸ்வரக் குருக்கள்
(ராஜாஜிக் குருக்கள்).

### வாழ்த்துச்செய்தி



இரண்டு நூற்றாண்டுக்கும் கூடுதலான வரலாற்றைக் கொண்ட எமது நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலின் மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவது எம்மவர்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சியான விடயமாகும். எமது அறங்காவல் குழு இந்த ஆலயத்தைக் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நிர்வகித்து வருகிறது. இந்தக் காலப்பகுதியில் ஆலயத்தின் சகல கட்டட அமைப்புகளுமே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

1989இல் இதற்கு முன்னர் கும்பாபிஷேகம் நடைபெற்றதால் பிள்ளையாரைப் பாலஸ்தாபனம் செய்து மீண்டும் கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்ற ஆகம நடைமுறைக்கு ஏற்ப கடந்த வருடம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

ஆலயத் திருத்தங்களுடன், தெற்கு மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டது. மேலும் மகாலக்ஷ்மி, கோபாலர், சுப்பிரமணியர் விக்கிரக பிரதிஷ்டைகளும் இப்பொழுது இடம்பெறுகின்றன.

எதுவித சொத்து வசதிகளோ, நிரந்தர வருமானமோ இல்லாத ஆலயமாக இருந்தபோதும் உள்நாடுகளில், வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களின் உதவியுடன் இந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. அவர்கள் யாவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் விநாயகப் பெருமானின் பூரண அனுக்கிரகம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

எமது ஆலயத்தின் குருக்கள் குடும்பம் அமரர் சிவஸ்ரீ புவனக் குருக்களின் பரம்பரையாக சிவஸ்ரீ புவன சதாசிவக் குருக்கள், அவரது புதல்வர்கள், பேரப்பிள்ளைகள் என எல்லோரும் சிறந்த முறையில் பூசைகள், திருவிழாக்கள் என்பனவற்றை நிறைவேற்றி வருகின்றனர். இந்த அந்தணப் பெருமக்களுக்கு எமது நன்றிகள்.

எமது ஆலய நிர்வாகத்தின் ஒரு முன்மாதிரி நடவடிக்கையாக நடைமுறை செயற்பாடுகளை இளையோர் செயற்பாட்டக் குழுவிடம் அறங்காவலர் சபை ஒப்படைத்தது. இந்தக் குழுவினர் மிகவும் அர்ப்பணிப்புடனும் செயற்திறனுடனும் இயங்கியதாலேயே இன்றைய கும்பாபிஷேக நிகழ்வும் அதைத் தொடரும் மண்டல பூசைகளும் ஏனைய நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. இவர்களுக்கு எமது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சி.வி.கந்தையா சிவஞானம்,
தலைவர், ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில்,
அறங்காவலர் குழு.

### உப குழுத் தலைவரின் செய்தி



"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக
உலகமெல்லாம்"

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கில் ஸ்ரீசந்திரசேகரப் பெருமானாய் உருவத் திருமேனி கொண்டு வீற்றிருக்கும் எம் பிள்ளையாருக்கும் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட லக்ஷ்மி, சந்தானகோபாலர், முருகன் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் இன்றைய நாள் மஹா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவதையிட்டு உபகுழு இளைஞர்கள், விநாயகர் அடியார்கள் அனைவரும் மெய் சிலிர்க்க ஆனந்தமடைகிறோம். ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட இவ்வாலயம் வெளிநாட்டுவாழ் விநாயகர் அடியார்கள், ஊர்வாழ் விநாயகர் அடியார்களின் நிதி உதவி, சரீர உதவியுடன் கட்டப்பட்டுள்ளது. ஆலய அறங்காவலர் குழுவினரின் சிறந்த வழிகாட்டலில் எம் உப குழு இளைஞர்கள் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு நிதி சேகரித்ததோடு ஆலய சூழல் சிரமதானப் பணிகளில் இளைஞர்கள், ஊர்வாழ் பெண்களின் பங்கும் மிகவும் முக்கியமானது. குறித்த நேரத்தில் பூசைகள், திருவிழாக்களைச் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் செய்துவரும் எமது ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சதா யோகீஸ்வரக் குருக்கள் ஐயா [ராஜாஜிக் குருக்கள்] அவர்களின் ஆசியுடன் சிவஸ்ரீ முத்து ஸ்ரீநிவாசக் குருக்கள் ஐயா அவர்கள் செய்து வருகின்றார். இவ் ஆலயத்தை அழகுற கட்டியமைத்த அராலியூர் ஈஸ்வரன் குழுவினருக்கும், வர்ணம் பூசி அழகுபடுத்திய ஆனைப்பந்தி க.சுந்தரலிங்கம் குழுவினருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுதல்களும் உரித்தாகட்டும். ஆலயப் புனரமைப்பில் நிதியுதவி அளித்த, சரீர உதவி செய்த, சிரமதானத்தில் கலந்துகொண்ட இளைஞர்கள், ஊர்வாழ் பெண்கள், பிரதேச சபை ஊழியர்களுக்கும் இஷ்ட சித்திகளனைத்தையும் வழங்கப் பிரார்த்திப்பதோடு நம் நாட்டில் அமைதியும் சமாதானமும் உருவாக இந்நன்நாளில் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

"எம் கடன் இறை பணி செய்து கிடப்பதே"

லயன் குமாரசாமி ஜெயந்தன்,
தலைவர்,
உப குழு இளைஞர்கள் சார்பில்.


| | | |
|---|---|---|
| **கஜமுகன் ஹாட்வெயர்**<br>147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | **மங்களா காட்சியறை**<br>[தளபாட விற்பனையின் ராஜமுத்திரை]<br>536, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | **நாதன் ஹாட்வெயர்**<br>123, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| **ராசி சில்க்ஸ்**<br>70, நவீன சந்தை, யாழ்ப்பாணம். | **மகா சில்க்ஸ்**<br>40A 32, நவீனசந்தை, யாழ்ப்பாணம். | **நியூ ராகம்ஸ்**<br>24, 7, 8, நவீனசந்தை, யாழ். |
| **பிறின்ஸி சில்க்ஸ்**<br>09, நவீனசந்தை, 09, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். | **சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்** [ரவுசர் துணிகளின் சங்கமம்]<br>73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். | **சிவன் ஜெவ் ...**<br>இல.70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
இ.வாசுதேவன் அவர்களின் அன்புத் தந்தை
அமரர் இரத்தினக்குருக்கள்
இராமசாமி ஐயர்
அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
(83706)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி அகல்யா பாலசிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை
சுப்பிரமணியம் பாலசிங்கம்
அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு, அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

2 ஆம் வருட முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள்,
யாழ் பல்கலைக்கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
விசுவலிங்கம் பரஞ்சோதி
(உப அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)
தோற்றம்: 08.12.1947 மறைவு: 02.04.2008
திதி: 22:03.2009

பொன்றா திருந்து நீரும்
பேணி நலம் காப்பீரென்று
பேதலித்த நெஞ்சங்கள் பரிதவிக்கப்
பாசமாய் வாழ்ந்த சோதி
பரமனடி சேர்ந்து இன்று ஓராண்டாச்சே!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
பாசமிகு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
(சி/557591)

## வேலை ஆள் தேவை

வெதுப்பகம் ஒன்றுக்கான அனைத்து வேலைகளும் தெரிந்தவர்கள் உடன் தேவை.
தொடர்பு: "ஐங்கரன் வெதுப்பகம்"
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1977 கார்த்திகை நட்சத்திரம் 1ஆம் பாதம், செவ்வாய் தோஷமற்ற, கிரக பாவம் 18ஐ உடைய Electronic Engineer (பேராதனைப் பல்கலைக் கழகம்) தற்போது U.K.யில் மேற்படிப்பு முடித்து கலாநிதிப்பட்டம் பெற்றுக்கொண்டு தொழில் புரியும் மண மகனுக்கு மணமகள் தேவை. (மணமகள் Accountant, CIMA holders, Engineers, Dental Doctors, Doctors விரும்பத்தக்கது) தொடர்புக்கு: பெற்றோர் தொலைபேசி இல. 060 2218014, OR 0777117030
E.mail : nantha Saranga@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ்.பிரதான வீதியில் கட்டடத்துடன் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இல.: 077 8030950
021 222 5731
(837704)

## விற்பனைக்கு

ஸ்கூட்டர் (இத்தாலியன் - வெஸ்பா), அம்பிளிபயர், 10" Box இரண்டு என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி.சி.நாதன்,
இல.16/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 6146434
(83645)

## தவறிவிட்டது

கடந்த ஞாயிற்றுக்கிழமை (15.03.2009) ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலி பிரதேச சபைக்கும் முடமாவடி சந்திக்குச் செல்லும் வழிகளுக்கிடையில் இரண்டுபவுண் நிறையுடைய தங்கச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல 154, கோணாவளையடி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் தந்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே - 0779037198

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:
சிற்றி ஹார்ட்வெயர் ஸ்ரோர்
55,57 ஸ்ரான்லி வீதி ,
யாழ்ப்பாணம்.
தொ.பே -0212222901


## STUDY IN INDIA

GARDEN CITY COLLEGE
BANGALORE UNIVERSITY DEGREES
*Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK*

Courses Offered
BCA Bachelor of Computer Application
B.Sc. Computer Science/Microbiology/Genetics Biotechnology/Fashion and Apparel Design
B.A. Journalism/B.Com Computers
BBM Bachelor of Business Management
BHM Bachelor Of Hotel Management
BPT Bachelor of Physiotherapy
LAW Bachelor of Law
* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying
www.studyingcc.com
தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.


## தேவை

நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் திருத்துவதற்கு ஐந்து வருட அனுபவம் வாய்ந்த மெக்கானிக் தேவை. சுயவிவரங்களுடன் விண்ணப்பங்கள் கீழ்வரும் விலாசத்திற்கு 27.03.2009இற்கு முன்பாக அனுப்பிவைக்கவும்.

866,பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம் (சி/557597)
மனிதவள முகாமையாளர்
ஈ.ரோவில்

## துயர் பகிர்கின்றோம்




கரவெட்டி, சாவகச்சேரி பிரதேச செயலகங்களில் சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றியவரும், தற்போது இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் தலைமைக் காரியாலயத்தில் சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றுபவருமான எமது நண்பன் ஆறுமுகம் இரகுநாதன் அவர்களின் அன்புத் தந்தை
வேலுப்பிள்ளை ஆறுமுகம்
அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

(83697) சமுர்த்தி முகாமையாளர்கள், யாழ்.மாவட்டம்.

## மரண அறிவித்தல்கள்

### வரப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை (அந்தோனிப்பிள்ளை)

*(முன்னாள் சாரதி N.S.R.லொறி, மயிலிட்டி)*



ஆனைக்கோட்டை, உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை (20.03.2009) வெள்ளிக்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வரப்பிரகாசம் - சரஸ்வதிதேவி தம்பதியரின் அன்பு மகனும் திரு.திருமதி தினகரன் தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஜீவந்தினி (கனடா), மணிமேகலா (ஜேர்மனி), காலஞ்சென்ற சயேந்திரன் மற்றும் குணாநிதி (லண்டன்), பிரியதர்சினி (மாவட்ட செயலகம், வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திரகுமார் (கனடா), பத்மநாதன் (ஜேர்மனி), தயானந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் சஜன், றோஜன், தெய்வியா, இந்துஷா, பிரியங்கா, வர்ஷா, வர்ஷன், ஹர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் அந்தோனிப்பிள்ளை, அமிர்தம்மா, அமரர் றெஜினா, அமரர் போல் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராஜா, பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு களுபோவில பீரிஸ் மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கொகுவல மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பா.ஜெயநீதன்,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (83702)
தகவல்:
செ.சரஸ்வதி (மனைவி),
மகள்.

### முதலி சின்னத்தம்பி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முதலி சின்னத்தம்பி 20.03.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முதலி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் சுசீலாதேவி, லீலாதேவி, காலஞ்சென்றவர்களான சியாமளாதேவி, சாரதாதேவி மற்றும் கிருஷ்ணகுமார், பிறேமகுமார், ஜெயக்குமார், சசிகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லத்துரை, இரத்தினராஜா, மகாதேவன், சுசிகலா, முகுந்தினி, கீதா, நிறோயினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய், ஊற்றல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக் கல்லூரியடி,
உரும்பிராய் வடக்கு. (83693)
தகவல்:
குடும்பத்தினர்.

## சித்தராஜன் வழிவந்த வைத்திய குணரத்தினம் முத்துப்பிள்ளை தம்பதியர் பெற்றெடுத்த அத்தனையும் வைத்தியரே


### 31ஆம் நாள் நினைவஞ்சலி



டாக்டர் திருமதி தெய்வானைப்பிள்ளை
பூலோகசுந்தரம்



டாக்டர் திருமதி கந்தசாமி
சிவக்கொழுந்து



டாக்டர் குணரத்தினம் திருச்செல்வம்



டாக்டர் குணரத்தினம் சங்கரப்பிள்ளை



டாக்டர் குணரத்தினம் செல்லத்துரை
(ஓய்வுபெற்ற அதிபர்)

ஒரு தாயின் வயிற்றினிலே உதித்தோம் நாங்கள்
ஒற்றுமையாய் அகிலமதில் வாழ்ந்தோம் நாங்கள்
பார்மீது எங்கள் குலத்தொழில் தான்

பரிகார வைத்தியமும் செய்து வாழ்ந்தோம்
சீர்மேவும் எங்கள் குலப்பெருமை பேச
செகத்தினிலே ஒற்றுமையாய் வைத்தியம் செய்து வந்தோம்

பேர் போன வைத்தியரே நாங்கள் - என்ற
பெருமையே மீண்டும் பேச பிறப்பெடுப்போம்.
பிறப்பெடுப்போம் பிறப்பெடுப்போமே.

கடந்த 20.02.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த அமரர் குணரத்தினம் திருச்செல்வம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை சித்தர்வளவு சுழிபுரத்தில் மு.ப.11 மணிக்கு நடை[illegible] அன்புடன் அழைக்கின்றோம்.

சுழிபுரம் மத்தி, சித்தர் வளவு.
என்றும் நினைவுடன்: டாக்டர் செ.கிருபாரத்தினம் (பெறாமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இந்துமக்களே, மனம் கொள்வீர்!

நாளாந்தம் பத்திரிகைகளைப் புரட்டியதும் வன்னியில் எங்கள் இரத்தத்தின் இரத்தங்கள் அனுபவிக்கும் அவலங்களைப் படிக்க நெஞ்சு கனக்கிறது. தானாடா விட்டாலும் தசையாடும் என்பது போல், குடும்ப உறவுகளுக்கு நேர்ந்துள்ள கதியைக் கேள்வியுற்றுக் கலங்காத குடாநாட்டு மக்கள் இல்லை.

வளமார் வன்னியில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பிய குடாநாட்டின் வாரிசுகள், வகை தொகை இன்றி உயிரிழப்பதும் காயமுறுவதும், உணவின்றி உகூந்த உறையுள் இன்றி, மாற்றுடையின்றி மருந்தின்றி விநாடிக்கு விநாடி மரணத்தை எதிர்நோக்கி கணங்களைக் கழிப்பதும் சோகச் சரித்திரமாகப் பதிவாகிக் கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், காலத்தின் கோலத்தால் வன்னியில் இருந்து இதுவரை பாதிப்புற்ற மக்களில் 4,686 பேர் குடாநாட்டுக்குத் தஞ்சம் தேடி வந்துள்ளனர். அவர்கள் இங்கு ஆறு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குடிசையானாலும் சொந்தக் குடிசையில், கூழோ கஞ்சியோ ஆனாலும் தமது கைப்படச் சமைத்த உணவுடன், தமக்குப் பிடித்த சௌகரியங்களுடன் வாழ்ந்தவர்கள் ஏதிலிகளாக நலன்புரி நிலையங்களில் மாற்று உடைக்கும் வக்கற்று, நாள்களைப் போக்க நேரிட்டுள்ளமை நரக வாழ்வே என்பதில் மறுகருத்து இருக்க முடியாது.

ஆனால் -

அவர்கள் அநாதைகள் அல்லர். இன்னல்களுக்கு ஆளாகி உள்ளோர் எமது உறவுகள். -என்று பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மிகப்பொருத்தமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அவர்கள் திக்கற்றவர்களாக, நலிவுற்றுப் போயுள்ள தற்போதைய துன்பச்சுமை நிறைந்த வாழ்க்கையில் இருந்து மீள வேண்டும். அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டியவர்கள் நாங்களே.

இதனை நன்குணர்ந்து ''இந்து அமைப்புக்களின் ஒன்றியம்'' கடந்த வாரத்தில் உதவிப் பொருள்களை வழங்கியது ஓரளவு மனதுக்கு ஆறுதலானது. இந்து சமய அமைப்புக்கள் இத்தகைய வேளைகளில் சமூகப் பணியில் ஈடுபடுவதில்லை என்று நிலவிய குறைபாடும் ஓரளவு நீங்கியிருக்கிறது. பலரது கூட்டு முயற்சியால் உருவாகியுள்ள இந்து அமைப்புக்களின் ஒன்றியம் பலப்படுத்தப்பட வேண்டியது. அடம்பன் கொடியும் திரண்டால் தான் மிடுக்கு. எனவே இந்த அமைப்பை நிலைப்படுத்தி வளப்படுத்த வேண்டியது இந்துக்களின் கடமை; பொறுப்பு.

இந்துக்களின் வாழ்க்கையின் சகல கூறுகளும் ஆலயத்தில் இருந்து உதித்தவை; அதனை மையமாகக் கொண்டு வளர்ந்தவை ஆகவே ஆலயங்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், பரிபாலன சபைகள் இந்து சமய ஒன்றியத்துடன் இணைந்து இப்போதைய அவசர வேளையில் உதவ முன்வர வேண்டும்.

இவ்வேளையில், ஆலயத்தின் மூலம் பல்துறை சார் சமூகப் பணிகளை உரிய நெறிப்படுத்தலுடன் பரவலாக ஆற்றிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியைப் பின்பற்ற வேண்டும்.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும், ஊருக்கு ஊர் வாழ்ந்த உறவுகளின் நேர்த்தி என்றும் தன் சொந்தக் கிராமத்தின் அபிமானம் கருதியும் அனுப்பும் நிதிகளைக் கையில் வைத்து விசுக்கிக் கொண்டு, தேவையற்ற முறையில் போட்டா போட்டியுடன் ஆலயங்களைத் தேவைக்கு அதிகமாகப் பெருப்பிப்பதும் மெருகூட்டுவதும் காலத்தின் தேவையல்ல.

அவற்றைச் சுருக்கி கடவுள் உள்ளுறையும் மனிதனுக்கு - எங்கள் சொந்தங்களுக்கு - உறவுகளுக்குக் கைகொடுக்க ஆலய நிர்வாகங்கள், ஆதீன கர்த்தர்கள் எழுந்து நிற்க வேண்டும்; ஒளித்து ஒதுங்க நினைக்கக் கூடாது. அதுபாவம்; பாவத்திலும் மகா பாவம்.

மனிதனுக்கு உள்ளும் அவனைச் சுற்றியுமே எப்போதும் இறைவன் இருக்கின்றான். ஆகையால் கடவுளை எங்கேயும் தேடலாகாது. மனிதனிலேயே தேட வேண்டும். மனிதன் மூலமே இறைத்தன்மை வெளிப்படுகிறது.

இத்தகைய பெரும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்து மதத்தைச் சேர்ந்த மக்கள் கூட்டம் நாம். மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது இறைவனைத் திருப்திப்படுத்தும் என்பதனை எப்போதும் மனதிற் கொண்டால், மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதனை உணர்ந்தால், எங்கள் உறவுகள் நலன்புரி நிலையங்களில் இருந்து நலிவுற நேரமாட்டாது.

வன்னியில் எமது உறவுகள் செத்தொழிய, இங்கு கூத்தும் கொண்டாட்டங்களும் நடத்தி, சுகபோகம் அனுபவிக்க முனைவது எங்களுக்கு நாமே செய்யும் துரோகம் என்பதனை ஒருகணம் ஊன்றி உணர முற்படுவதும் இந்துக்களின் இதயங்களில் வளரவேண்டும்.

## சாவகச்சேரி பிரதேசசபைப் பகுதியின் அபிவிருத்திக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மார்ச் 22

சாவகச்சேரி பிரதேசசபையின் துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கென 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜோன்சன் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிதி மூலம் சாவகச்சேரி பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

முக்கியமான வேலைத்திட்டங்கள் முன் மொழிவுகள் இணங்காணப்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், இதனூடாக மிகவும் பின்தங்கிய பிரதேசமான சாவகச்சேரி பிரதேச சபையின் முக்கியமான இடங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது-

சாவகச்சேரி பிரதேசசபை கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய ஆறு உப அலுவலகங்களைக் கொண்ட அலுவலகமாகும்.

எனவே சகல உப அலுவலர் பிரிவுகளிலும் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக நவீனசந்தைகள், வீதிகள் செப்பனிடல், நகரவடிகால்கள் அமைத்தல், நகரை அழகுபடுத்தல் என்பன இத்திட்டத்தில் அடங்கும்.

இது தொடர்பாக அபிவிருத்திகள் மேற்கொள்ளும்போது திட்டமிடல் மற்றும் வேலைத்திட்டங்களுக்காக ஆளணி வசதிகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி பிரதேசசபை மண்டபத்தில் இத் திட்டம் குறித்து ஆராயப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜோன்சன், யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளரான திருமதி ம.வசந்தகுமார், சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் எஸ்.பாலசுப்பிரமணியம், சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் உட்பட பிரதேசசபை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (1)

## பன்றித் தலைச்சியில் நாளை திங்கள் உச்சவம்

சாவகச்சேரி, மார்ச் 22

பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவத்தில் இரண்டாம் திங்கள் உச்சவம் நாளை பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

இதனை ஒட்டி ஆலயச்சூழலில் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பக்தர்களுக்கான குடிதண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலில் பக்தர்களின் ஒழுங்கைப் பேண பாடசாலை சாரணிய மாணவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளனர். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களும் கடைமைகளில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (1-131)

## வன்னியில் இருந்து வருவோருக்கு கைதடியில் 20 ஏக்கர் காணியில் தற்காலிகக் கொட்டில்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வன்னியில் இருந்து குடாநாட்டுக்கு வருகை தரும் மக்களை தங்கவைக்க கைதடியில் தற்காலிக வீடுகளை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பனை அபிவிருத்திச் சபையின் கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தை உள்ளடக்கியதாக 20 ஏக்கர் காணி துப்புரவு செய்யப்பட்டுவருகிறது.

தற்சமயம் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களுக்கு வருவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து இந்த புதிய நிலையம் அமைக்கப்பட விருக்கின்றது.

காணி துப்புரவு செய்து முடிக்கப்பட்டதும் சுற்றிவர பாதுகாப்பு வேலி அமைக்கப்படவிருக்கின்றது. அதன்பின் தற்காலிக குடிசைகள் அங்கு அமைக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்படவுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் ஊழியர்கள் துப்புரவுப் பணிகளை கனரக வாகனங்கள் மூலம் தற்போது மேற்கொண்டுவருகின்றனர்.

(1-207)

## வன்னிக்குக் கடந்த நான்கு மாதங்களாக மருந்துப் பொருள்கள் அனுப்பப்படவில்லை

### டாக்டர் சத்தியமூர்த்தி அவுஸ்திரேலியத் தமிழ் வானொலிக்குச் செவ்வி

கொழும்பு, மார்ச் 22

வன்னிக்கு கடந்த நான்கு மாதங்களாக மருந்துகள் அனுப்பப்படாத நிலையில் வைத்தியசாலை மூடப்படும் அபாய நிலையில் உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (17.03.09) ஒலிபரப்பாகிய 'செய்தி அலைகள்' நிகழ்ச்சிக்கு மருத்துவர் சத்தியமூர்த்தி வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மழைக் காலம் முடிந்து இப்போது கடுமையான வெயில் காலமாக இருக்கின்றது. பல இடங்களில் வெள்ள நீர் வற்றிவிட்டது. இருந்தாலும் மக்கள் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டிருந்த கிணறுகள் இடிந்துவிட்டன. மக்கள் கிணறுகளை அமைத்தபடி இருக்கின்றனர்.

அத்தோடு, அவர்களின் பதுங்கு குழிகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டும் சிதிலமடைந்தும் விட்டன. அதிகமான பொதுமக்கள் மீண்டும் புதிதாக பதுங்கு குழிகளை புனரமைத்தப்படி இருக்கின்றனர்.

கடுமையான வெள்ளம் ஏற்பட்டதால் தொற்று நோய் பரவக்கூடிய அபாயம் இருந்தாலும் அதனை தடுப்பதற்காக மக்களைப் பொது சுகாதார பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க வலியுறுத்தியபடி இருக்கின்றோம்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய சுகாதார திணைக்களத்தின் கீழ் ஆயிரத்துக்கும் அதிகமான பணியாளர்களும் தொண்டர்களும் இருப்பதனால் அவர்களின் பெரும்பாலானவர்கள் வைத்தியசாலையிலும் ஏனையவர்கள் வெளிக்கள வேலைக்கும் அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

வெளிக்கள பணிகளில் ஈடுபடும் மருத்துவ மாதர்கள், பொதுநல சுகாதார பரிசோதகர்கள், தொண்டர்கள் தனியே அந்த வெளிக்கள பணிகளை மாத்திரம் புரிகின்றனர்.

அதனைவிட, வேறாக வைத்தியசாலைகளிலே வைத்தியர்கள், தாதியர்கள், பரிசோதகர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

மருந்துப்பொருள்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் அனுப்பி வைக்கப்படவில்லை. சுமார் 4 மாதங்களுக்கு மேலாக இந்தப் பகுதிக்கு மருந்துகள் அனுப்பிவைக்கப்படவில்லை.

இந்தப் பகுதி மருத்துவமனைக்கு ஜனவரி முதலாம் நாள் தொடங்கி இன்றுவரை 500 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கின்றனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வைத்தியக் குறைபாடுகள் காரணமாகவே உயிரிழந்திருக்கின்றனர்.

புதுமாத்தளன் வைத்தியசாலையைத் தவிர்த்து வலைஞர்மடத்தில் இயங்குகின்ற ஒரு சிறிய வைத்தியசாலையும் முள்ளிவாய்க்காலில் இயங்குகின்ற சிறிய வைத்தியசாலையும் நோயாளிகளை உள்வாங்கி சிகிச்சை வழங்கி கொண்டிருக்கின்றன.

இதனைத் தவிர, மேலும் 3 இடங்களில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்கி வருகின்றது. அதனை விடவும் 6 பிரிவுகளில் தாய்-சேய் நல மருத்துவ நிலைய இணைப்புச் செயலகம் இயங்குகின்றது. (50)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 10 | 23.03.2009 திங்கட்கிழமை |
| திதி: | துவாதசி மு.இ. 8.51 வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் பி.இ. 3.34 வரை |
| சுபநேரம்: | 12.16 - 01.46 |
| ராகுகாலம்: | 07.46 - 09.16 |

## பிரி.ஆட்சியின் போது யாழ்ப்பாணத்தில் அரச அதிபராக இருந்த அமெரிக்கர்

1918 மார்ச் 22

துவைனம் ஞாபகார்த்த அரும்பொருள் காட்சியகத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

**தாம் சேகரித்த பழம் பொருள்களை அரும்பொருள் காட்சியகத்துக்கு வழங்கிய பெருமகன்**

சேர் வில்லியம் துவைனம் யாழ்ப்பாணத்தில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அரசாங்க அதிபராகப் பதவி வகித்த ஓர் அமெரிக்கர். இவரது சேவைகள் சிலவற்றை ஏற்கனவே பார்த்துள்ளோம்.

துவைனம் தன்னிடம் இருந்த சேகரிப்புகளை (யாழ்ப்பாணத்தில் சேகரித்தவை உட்பட) வைத்து யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் அரும்பொருள் காட்சியகம் (Museum) ஒன்றை உருவாக்குமாறு, தனது சேகரிப்புக்களை பரியோவான் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார். 1918 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி துவைனத்தின் 91 ஆவது பிறந்த தினத்தன்று துவைனத்தின் மகள் நோநா துவைனம் அரும் பொருள்காட்சியகத்துக்கு அடிக்கல் நாட்டினார். பரி யோவான் கல்லூரிக்கும் மலை வேம்பு மரங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் 3 அறைகளை கொண்ட தாக துவைனம் ஞாபகார்த்த அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டது. இலங்கை சுகந்திரமடைந்த பின் யாழ்ப்பாணத்தில் அருங்காட்சியகம் ஆரம்பிக்கப்பட்ட போது துவைனத்தின் சேகரிப்புக்களும் அரச அருங்காட்சியகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டதாக பரியோவான் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

*இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!*

துவைனத்தின் சேகரிப்புக்கள் இப்போது யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் உள்ளனவா இல்லையா என்று தெரியவில்லை. மேலைநாடுகளில் தனி நபர்களின் பெயரால் பல அருங்காட்சியகங்கள் உருவாக்கப்பட்டன. டென்மார்க் தலைநகர் கோப்பன்ஹேகனில் முப்பத்தெழு அருங்காட்சியகங்கள் உள்ளன. எம்மவர் சிலருக்கு எமது முது சொம்களைப் பேண வேண்டும் என்ற ஆர்வம் சுதனப்படுகின்றது. இது வரவேற்கத் தக்கதொன்று.

- தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# புலி ஆதரவு நிகழ்ச்சிகளை நடத்த அனுமதித்த வெளிநாடுகளுக்கு இலங்கை அரசு கண்டனம்

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதியளித்தமைக்காக பல உலக நாடுகளை இலங்கை அரசு சாடியுள்ளது.

இலங்கை அரசு இது குறித்த தனது எதிர்ப்பை அந்த நாடுகளுக்குத் தெரிவிக்கவுள்ளது என மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பிரிட்டன், கனடா, அமெரிக்கா உட்படப் பல நாடுகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற சில நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் இலங்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் கொடிகளைப் பயன்படுத்துவதற்கு இந்த நாடுகள் அனுமதியளித்துள்ளமை குறித்து தான் ஆச்சரியமடைந்துள்ளார் என அமைச்சர்தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு உதவும் இத்தகைய நடவடிக்கைகள் குறித்த இலங்கை அரசின் எதிர்ப்பை சம்பந்தப்பட்ட நாடுகளுக்குத் தெரிவிக்குமாறு அந்த நாடுகளிலுள்ள தமது தூதரகங்களைக் கேட்டுள்ளார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## தேவையான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மைப்பார்க்கவும் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வாரம் வவுனியா நலன்புரி முகாமுக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கத்திடம் மேற்குறித்த கோரிக்கைகளை மக்கள் விடுத்துள்ளனர் என்ற தகவலை அவரே தெரிவித்தார்.

அங்கு அரிசி, கோதுமை மா, சீனி போன்ற சில அத்தியாவசியப் பொருள்களையே பெறக் கூடிய தாக உள்ளது. ஏனைய பொருள்களை பெற முடியாதுள்ளது. அத்துடன் மருத்துவ வசதிகளும் போதிய அளவில் இல்லை என்றும் அவர்கள் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (அ-7)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பலவன் பொக்கணை புதுக்குடியிருப்புப் பகுதிகளில் படையினரின் காவலரணுக்குள் ஊடுருவிய விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் நடந்த மோதல்களில் விடுதலைப்புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது என்றும் ஊடக நிலையம் மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில்-

விடுதலைப்புலிகளின் தலைவரும் அவரது மகன் சாள்ஸ் அன்ரனியும் அரசு அறிவித்த பாதுகாப்பு வலயப்பகுதியில் ஒளிந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர்கள் பகலில் கூடுதலான நேரம் பதுங்கு குழிக்குள் இருப்பதாகவும் சாதாரண உடையில் அப்பகுதியில் நடமாடுவதாகவும் எவ்வாறாயினும் அவர்கள் இருவரையும் அரச படையினர் சுற்றிவளைத்திருப்பதாகவும் அங்கிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்கள் தெரிவித்ததாக அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-1-7)

## கர்ப்பிணிகள்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களுடன் தங்கியிருக்க விரும்பினால் அதற்கான அனுமதியைப்பெற்றுத் தருவதாக அரச அதிபர் கே.கணேஷ் உறுதியளித்துள்ளார்.

இந்து அமைப்புக்களின் ஒன்றியப்பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் அரச அதிபர் இத்தகவலை வெளியிட்டார். நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை பார்வையிட்டு அவர்களின் நிலையை அறியும் பொருட்டு ஒன்றியத்தின் பிரதிநிதிகள் ஏழுபேரை இந்த நிலையங்களுக்குச் செல்ல அரச அதிபரால் அனுமதி வழங் கப்பட்டுள்ளது என்றும் நேற்று நடைபெற்ற ஒன்றியத்தின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் இவர்கள் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடி தேவைகளை இனங்காண்பார்கள் எனறும் தெரிவிக்கப்பட்டது.(அ-1-111)

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நாவின் ஆவணம் ஒன்று தற்செயலாக (உத்தியோகபூர்வமற்ற வகையில்) வெளிப்பட்டுவிட்டதில் இந்த விவரம் காணப்படுகிறது. 'இன்னர் சிற்றி பிறஸ்' இணையத்தளத்தில் இந்த ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போது இந்த ஆவணம் பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் ராஜதந்திரிகள், தூதுவர்கள் கைகளிலும் மூத்த ஐ.நா. அரசியல் மற்றும் மனித உரிமை அதிகாரிகளின் கைகளுக்கும் கிடைத்துள்ளது. வன்னிப் போரினால் பொதுமக்கள் இறந்த தற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையா ளர் தெரிவித்த தகவலை கொழும்பில் மனித உரிமைகள் அமைச்சர் மறுத்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

அண்மையில் ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்த ஓர் அறிக்கையில் இலங்கையில் அரசாங் கமும் தமிழ்ப் புலிகளும் போர்க்குற்றங்கள் புரிந்திருப்பதற்கு சாத்தியம் என்ற வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

**போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடுக்க இயலாது**

நவநீதம் பிள்ளையின் அறிக்கையின் அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருகின்றீர்களா என்று அந்த நீதிமன்றத்தின் வழக்குத் தொடுனரான லூயிஸ் மோரேனோ ஏகாம்போவிடம் இன்னர் சிற்றிப் பிறஸ் செய்தியாளர் கேட்டார்.

ஒகாம்போ அதற்கு பதிலளிக்கையில்-

அவர்கள் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்ட தரப்பினராக இல்லை என்றார்.

மேலும் மிக அண்மையில் தாம் ஆபிரிக்காவில் மாத்திரமே போர்க்குற்றச் சாட்டுகளை சுமத்துவதற்கு முயற்சிப்பதாக ஐ.நா. பொதுச் சபையின் தலைவர் தம்மீது குற்றஞ் சாட்டியிருந்தாகக் கூறினார்.

இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பான நவநீதம்பிள்ளையின் குற்றச் சாட்டுகளை அடுத்து இலங்கை தொடர் பான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கோப்பு ஒன்றை அல்லது விவர ஆவணம் (Data Base) ஒன்றைத் திறந்திருக்கிறது என்ற தகவலை ஒகாம் போவுடன் பிரயா ணங்களில் ஈடுபடும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அலுவலர் ஒருவர் இன்னர் சிற்றி பிறஸுக்குத் தெரிவித்தார்.

ஆனால் இலங்கை சர்வதேச குற்றவி யல் நீதிமன்றத்தில் உறுப்புரிமை பெற்றிருக்காமையால் சட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றும் அவர் கூறினார். மேலும் பாலஸ்தீனியர்களைப் போன்று இலங் கைத் தமிழர்கள் தமக்குநியாயாதிக்கம் அதாவது சட்டப் பாதுகாப்பு (Jurisdiction) வழங்கும்படியாகவும் கூட இன்னும் ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்க வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-ப)

## இலங்கை விவகா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்று உடனடியாகக் கைகூடவில்லை.

எனினும் பாதுகாப்புச் சபையில் நிரந் தர நாடுகளாக விளங்கும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை இது விடயம் குறித்துகருத்துத் தெரிவிக்காமையால் தெளிவான நிலை ஏற்படவில்லை.

இதனைக் குறிப்பிட்டு இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்று இன்னர் சிற்றி பிறஸ் செய்தியாளர் பாதுகாப்புச்சபையின் அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியான சுஸான் ஈ.றைஸ் ஸிடம் கேட்ட போது இலங்கை தொடர் பான கோரிக்கையை அமெரிக்கா ஆதரிக்கும் என்று தெரிவித்தார்.

எனினும் இலங்கை விவகாரம் எதிர் வரும் வியாழக்கிழமை நடைபெறும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்படும் என்பதற்கான சாதக முடிவு எதுவும் எட்டப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

## பல்குழல் மற்றும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனப் பணியாளர் உட்பட 46 பேர் காயமடைந்துள்ளனர்.

த.வரதராசா (வயது 17), சி.கோமளதாஸ் (வயது 53), க.பூரணம் (வயது 47), கு.சகிலா (வயது 23), பி.சஜீவன் (வயது 07), சு.இராஜகோபால் (வயது 61), த.ஜெயானந் தன் (வயது 28), க.மாலினி (வயது 33), கெ.மதிபாலன் (வயது 40) சி.மதிநிலவன் (வயது05)

கார்த்தீபன் (வயது 07), த.காவியர் (வயது 06), வ.அண்ணாமலை (வயது 60), கி.தே வகி (வயது 30), சர்மிளா (வயது 05 மாதங்கள்), ம.அமுதர் (வயது 21), ம.சூசைதாசன் (வயது 62), ஈ.ரஞ்சன் (வயது 35), செ.தயாநிதி (வயது 27), சி.கோமாளாதேவி (வயது 52), அ.புஸ்பரசர் (வயது 38), மே.விதுசன் (வயது 12), க.மதீபர் (வயது 23), செ.சுந்தரம் (வயது 24), சி.சம்பு (வயது 45), இ.மேரி (வயது 25), ம.டிலானி (வயது 01), ந.அருள்வாசன் (வயது 08), நா.பாக்கியம் (வயது 69), மு.சாருஜன் (வயது 09), கெ.ரதீஸ்குமார்; (வயது 29), கு.கந்தசாமி (வயது 48), ம.வெள்ளையன் (வயது 45), சி.பரமசிவம் (வயது 32) ஆகியோர் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டபோது உயிரிழந்துள்ளனர். ஏனையோரின் பெயர் விவரம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

கெ.நிரஞ்சன் (வயது 35), சி.சிவலிங்கம் (வயது 45), சி.கிருபாஜினி (வயது 06), த.அஜந்தன் (வயது 20), கொ.ஞானசேகரம் (வயது 30), கொ.அருந்ததி (வயது 38), ந.தேவி (வயது 20), இ.தில்லையம்பலம் (வயது 65), சி.விமலா (வயது 25), ம.பரமநாதன் (வயது 45)0, பூ.பாவேந்திரா (வயது 31), க.லக்சிகா (வயது 13), க.கார்த்திக் (வயது 20), க.முஜிதா (வயது 15), த.நாகேஸ்வரி (வயது 35), சி.இரத்தினசிங்கம் (வயது 68), செ.நதியா (வயது 21), தெ. கிருத்திகா (வயது 15), சி.சதி தரன் (வயது 28), த.நிரஞ்சலன் (வயது 31), சு.செல்வராணி (வயது 53), கு.சுவர்ணா (வயது 26), இ.மதுசன் (வயது 10), இ.ரஜனி (வயது 35), அ.அஜந்மேரி (வயது 31), சு.கமலாதேவி (வயது 56), ஆ.அந்தோனி (வயது 61), வி.கீர்த்தன் (வயது 02), ஜெ.மரியாயி (வயது 67), செ.இரஜேந்திரம் (வயது 48), செ.தர்சன் (வயது 05), ந.பரமேஸ்வரி (வயது 57), மு.போல் (வயது 43), யோ.டிக்சன் (வயது 17), சு.பசுபதிப்பிள்ளை (வயது 68) ஆகியோர் காயமடைந்துள்ளனர். ஏனையோரின் பெயர் விவரம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

காயமடைந்தவர்களில் சு.பசுபதிப் பிள்ளை, கிளிநொச்சி கிராமசேவையாளர் என்பதும் த.நிரஞ்சலன், அனைத்துலக தொண்டு நிறுவனமான போரூட்டின் முதன்மைப்பணியாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது- என்றுள்ளது. (அ-1)

## 'வணங்கா மண்'.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தால் - ஊடுருவினால் அதன்மீது தாக்குதல் நடத்தப்படும்.

கடற்படையின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

பிரிட்டனில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் வழங்கும் உதவிப் பொருள்களை ஏற்றிக்கொண்டு எதிர்வரும் 26 ஆம் திகதி கப்பல் அங்கிருந்து புறப்பட்டு இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

லண்டனில் வாழும் மக்கள் இலங்கையிலுள்ள உறவுகளுக்கு தாராளமாகப் பெருவாரியான பொருள்களை அன்பளிப்புச் செய்து வருகின்றனர்.

நிவாரணப் பொருள்களை அனுப்பும் தமிழ் அமைப்பு விடுதலைப்புலிகளின் வலையமைப்புடன் சேர்ந்தது என்றும்.

அந்த அமைப்பின் கப்பல் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவினால் அதனை இலங்கைக் கடற்படையினர் தாக்குவர் என்றும் கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலின் உரிமையாளர்கள் தொடர்பான விவரங்களை அறிய லண்டனில் உள்ள சர்வதேச லொயிட் கப்பல் ஏஜன்சி நிறுவனத்துடன் தொடர்புகொண்டுள் ளதாகவும் கடற்படை அதிகாரி மேலும் தெரிவித்திருக்கிறார். (அ-1)

## கேரளத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் தென்மாநிலங்களில் ஒன்றான கேரளத்தில் கொச்சி, திருவனந்த புரம், கோழிக்கோடு ஆகிய இடங்களில் உள்ள பிரதான சர்வதேச விமான நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது என்று பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் அனுதா பிகளால் இந்த விமான நிலையங்களுக்கு வெடிகுண்டுத் தாக்குதல் எச்சரிக்கைகள் வியாழக்கிழமை விடுக்கப்பட்டதாகவும் அதனால் அவற்றில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்பட்டதாகவும் கேரள மாநில பொலிஸ்மா அதிபர் ஜேக்கப் புன்னூஸ் நேற்றுத் தெரிவித்தார்.

விமான நிலையங்களும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் நேற்று முன்தினம் தொட்கம் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் அனுதாபிகள் என்ற பேரில் அநாமதேயே தொலைபேசி அழைப்பு மத்திய புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்ததாகவும் அதன் பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தொரிவிக்கப்பட்டது.

விமானநிலயங்களுக்குள் வாகனங்கள் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. குண்டு கண்டுபிடிக்கும் பரிசோதனைகள் இடம் பெறுகின்றன - என்றும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-1)

Microsoft Certified
Systems Engineer
* குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
* Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
* Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
* வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 23.03.2009 08.00AM
Become an Engineer
விபரங்கள் நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

மலிவு விலையில்......
திருமண அழைப்பிதழ்கள்
ADORNA CARDS
www.andradesigns.com
விசேட விலைக்கழிவு 10%

புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய
திருமண அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்
ANDRA DIGITAL IMAGE
# 356A. கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமை)
# 65, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்
இணையத்தள முகவரி : www.andradesigns.com

விசேட சலுகை
4 R = 10/=
10 X 15 = 75/=

அல்பங்கள், பிலிம் றோல்கள் என்பவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, நெல்லியடி.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses... ## பதிவு செய்வோருக்கு கற்கை கட்டண சலுகை
## MS Office ## DTP
* Accounting * English * VB.net
## Hardware * Web Developing
* Video Editing *AutoCAD
International Courses...
## MCP ## MCSE ## MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 2,4,5 & 6
புதிய பிரிவுகள் ஆரம்பம் 23.03.2009 08.00AM
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, MCS
www.mcsitacademy.com UNDP/JRRP

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இனங்க!
உலகநாடு → கொழும்பு → யாழ்ப்பாணத்திற்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
உள்நாடு,வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CDக்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
வாடிக்கையாளரின் நலன்கருதி லண்டன்.சுவிஸ்.பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும் கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
WESTERN UNION
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப்பெற்றுக்கொள்ளலாம்
MMBL Money Master
New Branch
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06 - T.P: 0112364525
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.